


# 75th ANNIVERSARY

## 1926 - 2001

## YOUNG MEN HINDU ASSOCIATION

SANGARATHAI JAFFNA
VADDUKODDAI SRI LANKA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1926 பவள விழாக்காணும் 2001

# சங்கரத்தை இந்து வாலிபர் சங்கத்திற்கு எமது நல்வாழ்த்துக்கள்!

சங்கரத்தை இந்து இளைஞர் சங்கத்தினர் வெள்ளிவிழா, பொன்விழாவைக் கடந்து பவள விழா ஆண்டில் கால் பதித்துள்ளனர். பவள விழா 75ஆவது ஆண்டைக் குறிக்கும். எழுபத்தைந்து ஆண்டுகள் மனிதனுடைய வாழ்வில் முதிர்ச்சியையும் ஆற்றலையும் அனுபவத்தையும் குறிக்கும்.

எண்ணியது முடிதல் வேண்டும் என்று மகாகவியின் கணக்குப்படி, நல்ல சாதானையாளர்களால் தொடங்கப் பெற்ற இச்சங்கம் இன்று நன் மணம் பரப்பி 75 ஆண்டுகளாக சங்கரத்தைப் பதியில் தலைநிமிர்ந்து இக்காலகட்டத்தில் நிற்கின்றதை எண்ணி நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். இறைவனது ஆசீர்வாதம் பவள விழாக் காணும் உங்களுக்கு என்றும் நிலைக்க வேண்டுகின்றோம்.

வாழ்க தமிழ்! வளர்க சைவநெறி!

சங்கரத்தை

# இந்து வாலிபர் சங்கம்

# பவளவிழா சிறப்பு மலர்

# 75

1926 - 2001

07.07.2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே நீங்கள் நுகர்வதற்கு.


| விடயங்கள் | பக்கம் |
| --- | --- |
| **வாழ்த்துரைகள்** | **I - XXIV** |
| அறம் வளர்த்த சமூகத் தொண்டன் | 1 |
| சட்டத்தரணி S.R. கனகநாயகம் | 2 |
| டாக்டர். கணபதிப்பிள்ளை செல்லத்துரை | 3 |
| போசகரின் போதனை | 4 |
| பவள விழாப் பாதையில் தலைவர் தரும் தகவல் | 5 |
| மலராசிரியர்களின் மனங்களில் இருந்து | 6 |
| சங்கவரலாற்றுச் சுவடுகள் | 7 - 10 |
| சங்க நிதிவளம் | 11 |
| இந்து சமய நெறியில் இளைஞர் பணி | 12 - 13 |
| விரதங்கள் மனித வாழ்க்கையை ஆன்மீகநெறியில் வழிப்படுத்துகின்றன | 14 - 17 |
| வள்ளுவம் பேசும் வாழ்வியல் | 18 - 20 |
| சிறியோரெல்லாம் சிறியாருமல்ல | 21 - 24 |
| சமய, சமூக அமைப்புக்கள் மீதான தலைமைத்துவம் | 25 - 30 |
| சங்க வகையான நிறுவனங்களின் நிர்வாகக் கட்டமைப்பும் - அவற்றின் கணக்கு வைப்பு முறைகளும். | 31 - 35 |
| **கவித்துளிகள்** | **36 - 43** |
| என் தாய் மண் போல் வருமா | |
| சங்கரத்தை மக்களையும் இந்துவாலிபர் சங்கத்தையும் வியந்து பாடியது | |
| நாம் நம்மவர் நம் சங்கம் | |
| எழிலானதும் உளர் சங்கரத்தை | |
| பவள விழா பல்லாண்டு வாழ்க | |
| சங்கரதம் | |
| கலியாணச் சந்தையிலே | |
| **சிறுகதைகள்** | |
| காதலிலே சில நாள் கவலையிலே பல நாள் | 44 - 48 |
| நலம் கெடப் புழுதியில் எறிவதுண்டோ | 49 - 51 |
| என்றும் புகழ் பெற்றிலங்கும் சங்கரத்தை | 52 - 53 |
| சங்கங்கள் சங்கமிக்கும் சங்கரத்தை | 54 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரத்தை காரைநகர் குளவத்தை

## முருகமூர்த்தி கோயில் பிரதமகுரு அவர்களின்

# ஆசியுரை

மக்கள் சேவையே மகேசன் சேவை எனக் கடமை புரிந்து வரும் சங்கரத்தை இந்து வாலிபர் சங்கம் இற்றைக்கு 75 ஆண்டுகளிற்கு முன்னிருந்த சங்கரத்தை வாழ் சைவ இளைஞர் களால் ஆரம்பிக்கப்பட்டு நல்லபடியாக வளர்ச்சி பெற்று வருகின்றது. இந்து வாலிபர் சங்கத்தின் முயற்சியால் ஆலயங்களில் சமய அறிவு போட்டிகள் நடத்திச் சிறார்களைச் சமய வழியிலும் சமூக வழியிலும் சமூக மேம்பாட்டிலும் இணைத்து வருகின்றது. எமது கிராமத்தில் மார்கழி மாதத்தில் பஜனையில் ஈடுபடுவதும் ஆலய வீதியில் பயன்தரு மரங்களை நாட்டியும் வருகின்றார்கள். இவர்களின் சேவை மனப்பாங்கு மேன்மேலும் தொடர்ந்து வளர வேண்டும். தொடர்ந்து எமது கிராமத்தில் வாழ்கின்ற இளைஞர்கள் எல்லோரும் இணைந்து செயற்பட்டால் எதிர்வரும் காலங்களில் எமக்கு என்று ஓர் நிரந்தர அமைவிடம் ஒன்றை அமைத்து சேவைகள் விரிவுபடுத்தப்பட்டு இந்து இளைஞர் பாலர் பாடசாலை, சனசமூக நிலையம், கல்விச் சாலை போன்ற சமூக தொடர்பை வலுப்படுத்தி எமது சங்கரத்தை மக்களும் ஏனைய கிராம மக்களும் வளம்பெற ஒன்றுபட்டு இளைஞர்கள் சேவையாற்ற வேண்டும் என்றும் நூற்றாண்டு விழாவை புதிய கட்டடத்தில் நடாத்தவேண்டும் என கலியுக வரதன் கந்தப்பெருமான் கமலபாதம் பணிந்து எல்லோருக்கும் ஆசி வழங்குகின்றேன்.

கந்தவேள் பெருமான் அடியார்க்கு நற் பெருமான்!

இங்ஙனம்

பா. சதாசிவக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கரத்தை பத்திரகாளி சமேத வீரபத்திர ஆலயகுரு அவர்களின்

# ஆசிச் செய்தி

பாலிற் செறிந்த பிட்டியம் பதியில் எழுந்தருளி, வேண்டுவார்க்கு வேண்டுதலை ஈய்ந்திடும் பத்திரகாளி அம்பாள் கோவில் கொண்டுள்ள கிராமம் சங்கரத்தை. இங்கே சைவப் பெருமக்கள் வாழ்ந்து சமய வளர்ச்சிக்கு பெரும் தொண்டுகள் ஆற்றி வந்தனர். இவர்கள் வழியினைப் பின்பற்றி இன்றும் பலர் இத் தொண்டினை வளர்த்து வருகின்றனர். இத்தகைய பெருமை வாய்ந்த சங்கரத்தைக் கிராமத்தில் இந்து வாலிபர் சங்கம் என்னும் அமைப்பை அன்றைய பெரியார்கள் அமைத்தனர். இதன் பயனால் ஆல் போல் தளைத்து அறுகு போல் வேரூன்றி அன்னை பத்திரகாளி அம்பாளின் திருவருள் பார்வையில் இச் சங்கமானது பவள விழாவை காண்கின்றது. இவ்வளர்ச்சி கண்டு அம்பாள் அடியார்களோடு நானும் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். மேலும் இச் சங்கமானது சகல சிறப்பும் பெற்று அம்பாளின் திருவருள் பார்வையில் வளர்ந்து சைவத்திற்கு தொண்டு ஆற்ற வேண்டி வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றேன்.

ஆ. சிவகெங்காதரன்

(ராதா ஐயா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் : ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர் : ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

தொலைபேசி : 2870

நல்லூர், யாழ்ப்பாணம்
இலங்கை.

# "அருளாசிச் செய்தி"

அன்புசால் பெருந்தகையீர்!

சங்கரத்தை இந்து வாலிபர் சங்கம் பவளவிழாவை இன்று கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். எழுபத்தி ஐந்து ஆண்டுகள் சங்கரத்தை மக்களுக்கு தன்னிகரில்லா பணியாற்றி தலை நிமிர்ந்து நிற்பது இந்து வாலிபர் சங்கமாகும். இளைஞர் சமுதாயத்தை சமயச்சிந்தனையோடு வாழ்ந்து செயற்படுவதற்கு அமைக்கப்பட்டதே இச்சங்கமாகும். இந்து சமயம் வாழ்வுக்குரிய சமயம் அந்நெறியில் நின்று வாழ்வதே அதனுடைய பெருமையாகும். பல கோட்பாடுகளைக் கொண்ட சமயம் நிறைவில் ஒரே கருத்தையே வலியுறுத்தி நிற்கின்றது. மெய்ப்பொருளை காண்பதே சமயத்தினுடைய கோட்பாடாகும். இதனை இளைய தலைமுறையினர் புரிந்து வாழ்ந்து செயற்பட இப்பவளவிழா அமைந்துள்ளது. மக்கள் சேவையே மகேசன் சேவை என்று கொண்டு மக்களுக்கு தொண்டாற்றிக் கொண்டிருக்கும் வாலிபர் சங்கத்தினையும் இதில் இதற்காக உழைத்துக் கொண்டிருக்கும் தலைவர், செயலாளர்கள், உறுப்பினர்கள் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக.

"வாழ்க வளமுடன்"

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் அவர்களின்

# வாழ்த்துரை

எமது யாழ் மண்ணில் சமூக மேம்பாடுகள் ஓங்குவதற்கும், சைவ சமயச் சூழ்நிலை இடம்பெறுவதற்கும் பணிபுரிந்து வருகின்ற ஆயிரம் ஆயிரம் இந்து வாலிபர் சங்கங்களை நான் நன்கு அறிவேன். இவற்றில் ஆண்டில் மூத்ததாய் அறிவறிந்த இளைஞர் களைக் கொண்டதாய் விளங்குவது சங்கரத்தை இந்து வாலிபர் சங்கம் ஆகும். இச்சங்கத்தின் பவளவிழாவைக் கொண்டாடு வதற்கும் மலர் ஒன்றை வெளியிடுவதற்கும் முன்வந்து இருக் கிறார்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் என்பதை அறிந்து நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். இளைஞர்கள் மத்தியிலே இத்தகைய எழுச்சியான சிந்தனைகள் ஏற்பட வேண்டும் என்பதையே நாங்கள் விரும்புகிறோம். சங்கரத்தைப் பகுதி கல்வியிலும், பண்பாட்டிலும், ஒழுக்க நெறியிலும், கடவுள் நம்பிக்கையிலும் சிறந்து விளங்குவதை நான் நன்கு அறிவேன். இந்த நிலை மேலும் மேலும் வரவேற்கத்தக்கது. கல்வியறிவு இல்லாத ஒழுக்கமும், ஒழுக்கம் இல்லாத கல்வியும் எமக்குத் தேவையில்லை. அத்துடன் கடவுள் நம்பிக்கை இல்லாத சமூகப்பணிகளும் எம்மை உயர்த்தமாட்டா. எனவே இவற்றை உணர்ந்து இந்து வாலிபர் சங்கத்துடன் இணைந்து நற்பணிபுரிய அனைவரும் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு சங்கத்தை வாழ்த்தி அமைகின்றேன்.

கலாநிதி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிவான்
*தலைவர்*
ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
தெல்லிப்பளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துசமய தமிழ் விவகார அமைச்சர்
அவர்களின்



# ஆசியுரை

## சமூகத்தினர் கருத்துச் செல்வாக்கு பெற பாடுபடுக.

சங்கரத்தை இந்து வாலிபர் சங்கம் தனது பவள விழாவைக் கொண்டாடுவதை அறிந்து மிக்க மகிழ்ச்சி. எமது மண்ணில் ஒரு சங்கம் 75 ஆண்டுகள் தொடர்ந்து சீராகச் செயற்படுவது என்பது அரிய சாதனையே ஆகும். 1926ஆம் ஆண்டு முதல் சமயத்துறையின் மேம்பாட்டுக்காகவும், நாடகம், சிரமதானம் என்பன மூலமாக சமூகத்தின் முன்னேற்றத்திற்காகவும், சங்கம் அரும்பாடுபட்டு வந்துள்ளது என்பதனை உணரும்போது உள்ளம் பூரிக்கின்றது.

சங்கம் செயற்பட்டு வந்துள்ள இக்காலப்பகுதியில் பல்வேறு அரசியல் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. அந்நியர் ஆட்சி அகன்று சென்றமை முதல் வலிகாமம் இடப்பெயர்வு வரை பல்வேறு மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து சங்கம் தொடர்ந்து செயலாற்றி வருகின்றமை பாராட்டுக்குரியது. இச்சங்கத்தின் பணிகளை பாராட்டும் வகையிலேயே பன்முக வரவுசெலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது என்பதையும் இங்கு குறிப்பிடுதல் பொருந்தும்.

எத்தகைய இடர்கள் ஏற்படினும் சங்கம் தனது பணிகளை முன்னெடுத்துச் செல்லும் தன்மையை அடியொற்றி ஒரு சில வரிகளை எடுத்துக் கூற ஆசைப்படுகின்றேன். சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம் என்பார்கள். சமூகம் இயல்பாகவும் சுமுகமாகவும் தொழிற்படுகின்ற நிலைமை யிலேயே அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவும் ஆத்மீகத் தேடல்கள் முதன்மை பெறவும் கூடியதாகவும் இருக்கும். எனவே தான் அழிவுகளைத் தருகின்ற போர்ச் சூழலில் இருந்து விடுபடவும் ஆக்கத்தை தேடிச் செயற்படவும் எம்மவர்கள் பாடுபட வேண்டியவர்களாகவுள்ளனர். அந்த வகையில் சமூகத்தை கருத்தியல் ரீதியாக வழிநடாத்தக் கூடிய தன்மையைப் பெற்றிருக்கக் கூடிய இத்தகைய அமைப்புகள் செயற்பட வேண்டும். பாலுக்குள் சேர்க்கப்படும் ஒரு துளி உறை மோர் முழுப்பாலையும் பக்குவப்படுத்துவது போல சமூகம் முழுமையும் தனது கருத்துச் செல்வாக்கிற்குள்ளாக்கி இச்சங்கமும் தன்னாலியன்ற பணியைச் செய்ய வேண்டுமென விரும்புகின்றேன்.

**கே. என். டக்ளஸ் தேவானந்தா**
செயலாளர் நாயகம், ஈ.பி.டி.பி.
வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும்
வடக்கு கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலி மேற்கு பிரதேசசபைத் தலைவர்
அவர்களின்

# வாழ்த்துச்செய்தி

பவள விழா சிறப்புற்றோங்க வாழ்த்துகிறேன்

சங்கரத்தை இந்து வாலிபர் சங்கப் பவள விழா மலர் மலர்வதை யிட்டுப் பெருகிழ்ச்சியடைகின்றேன்.

"மக்கள் சேவையே மகேசன் சேவையென்னும் உயரிய நெறியினைத் தாரக மந்திரமாகக் கொண்டு, கடந்த எழுபத்தைந்து ஆண்டுகள் தமது பணியினைச் சிறப்புறச் செய்து, தமது பகுதி வாழ் மக்களுக்குப் பொதுவாகவும், தமது கிராமத்துக்குக் குறிப்பாகவும் பணிபுரிந்து வரும் இந்து வாலிபர் சங்கத்தினரை வாழ்த்துவதில் மனமகிழ்ச்சியடைகின்றேன்.

இச் சங்கத்தை உருவாக்கி, இற்றை வரை திறம்பட நடாத்த வழிகாட்டிய ஆரம்பகால உறுப்பினர்களையும, ஆதரித்து ஆவண செய்த கொடைவள்ளல்களையும், பொதுமக்களையும் இன்று நினைவு கூருதல் சாலவும் பொருத்தமாகும். அவர்களின் உறுதியான கோட்பாடுகளும், உன்னதமான கொள்கைகளுமே இன்று சங்கரத்தை இந்து வாலிபர் சங்கத்தைப் பவளவிழாக் காணச் செய்துள்ளது என்றால் அது மிகையாகாது.

இளைஞர்கள் ஒரு நாட்டின் மிகப்பெரும் செல்வங்கள். நாட்டின் முதுகெலும்பே அவர்கள் தான். இவர்களது முயல் வேகச் செயல்களினாலேயே நாடு முன்னேற்றமடைகிறது. இது வரலாறு போதிக்கும் பாடம். இதனை உணர்ந்தே எமது ஈ.பி.டி.பி கட்சியும், வாலிபர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதில் முன்னின்று உழைத்து வருகின்றது. அவர்களது சமூகப் பொருளாதார தேவைகள், கல்வி மேம்பாடு, வேலைவாய்ப்பு, பாதுகாப்பு போன்ற மிகமுக்கிய தேவைகளுக்காக அயராது பாடுபட்டுவருகின்றது. இது நாடறிந்த உண்மை. பண்பும் பயனுமுள்ள வாழ்வை ஒவ்வொரு இளைஞனும் பெற்று நிறைவான வாழ்வு வாழவேண்டும். "தானும் வாழ்ந்து பிறரையும் வாழ வைக்க வேண்டும்" என்பதே இந்து சமய நெறியாகும். இதற்கமையச் சமூகத்தொண்டும், சமயத்தொண்டும் ஆற்றிவரும் இவ் வாலிபர்களை இப்பகுதி வாழ் மக்கள் போற்றிப் புகழ்வதில் இரு வேறு கருத்துகளுக்கு இடமில்லை.

தமிழ்ச் சமூக மேம்பாட்டுக்காகவும், இந்து சமய வளர்ச்சிக்காகவும் முன்னின்று உழைத்துவரும் சங்கரத்தை இந்து வாலிபர் சங்கத்தை மனமாரப் போற்றுகின்றேன். மக்களுக்காகத் தொண்டாற்றுவோர் என்றுமே மறக்கப்படு வதில்லை.

ஒற்றுமையுடனும் மன உறுதியுடனும் உங்கள் நற்பணிகள் தொடரட் டும். சேவையினூடே பல நூற்றாண்டுகள் கண்டு மகிழ இறையருள் கூடட்டும். சங்கரத்தை இந்து வாலிபர் சங்கமே - 'என்றும் நிலைத்து வாழ்க வாழ்கவே'

**திரு. ந. திரிலோகநாதன், ஜே.பி.யு.எம்**
தலைவர் – வலி மேற்கு பிரதேச சபை
ஈ.பி.டி.பி. அமைப்பாளர் – வட்டுக்கோட்டைத் தொகுதி
வலிமேற்கு இந்துமகா சபை போசகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஜனாதிபதி சட்டத்தரணி
## க. கனகஈஸ்வரன் அவர்களின்

# வாழ்த்துரை

'அரிது அரிது மானிடராவது அரிது' என்னும் முதுமொழிக்குள் எமது வாழ்க்கை அடங்கிய அம்மானிடப் பிறவியில் நான் எனது தந்தையாரின் அளப்பரிய செயல்களை எண்ண வைத்த உங்களுக்கு எனது முதற்கண் பாராட்டுகள் உரித்தாகுக.

அன்புசால் தம்பிமார்களே சகல வளமும் ஒருங்கே அமைந்த இலங்கைத் திருநாட்டின் வடபகுதியாகிய யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சங்கரத்தை கிராமத்தில் எனது தந்தையார் பிறந்ததைப் பெருமையோடு எண்ணும் அதே நேரத்தில் யாழ்வாசிகளின் முன்னேற்றங்கள் யாவும் அவர்களது ஒற்றுமை, பாரம்பரியப் பழக்கவழக்கங்கள், சிறந்த சமூகநல செயற்பாடுகள் அமைந்ததாக உள்ளது. அவ்வகையில் எங்களது சங்கரத்தைக் கிராமம் ஆனது நமது இந்து மதத்துக்கு எவ்வளவு மதிப்பைக் கொடுத்துள்ளது என்பது தங்களது சங்கப் பெயரில் (இந்து வாலிபர் சங்கம்) இருந்து காணக்கூடியதாக உள்ளது. அதேநேரத்தில் (பவள விழா என்பது 75 வருட கால எல்லை) தங்களது சங்கம் 1926ம் ஆண்டு தொடக்கம் இன்றும் இனியும் தொடர்ந்து நடப்பதை எண்ணி பெருமிதம் அடையக்கூடியது என்பதை யாவரும் (யாழ்ப்பாணத்தில் தற்போது எத்தனையோ கஷ்டங்களுக்கு மத்தியிலும்) மறுப்பதற்கில்லை. உங்களது சங்கம் தொடர்ந்து அடிக்கு மேல் அடியாக முன்னேறி வருவதை எண்ணி நான் மிகவும் சந்தோஷம் அடைவதோடு, மேன்மேலும் உங்களது வளர்ச்சிக்கு கடவுளுடைய ஆசீர்வாதம் என்றும் இருக்க வேண்டும் என்று எனது மனதார இறைவனை வேண்டுவதோடு எனது ஒத்துழைப்பானது எனது தந்தையின் பெயரால் தங்களுக்கு எப்பொழுதும் நல்கப்படும் என்பதைப் பணிவன்புடன் அறியத்தருகின்றேன்.

தங்களது இந்து வாலிபர் சங்கப்பணி மேன்மேலும் மேலோங்கி வளர எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

இங்ஙனம்
**க. கனகஈஸ்வரன்**
ஜனாதிபதி சட்டத்தரணி
உலக வர்த்தக சட்டநிபுணர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சமாதான நீதவான் சதாசிவம் வீரவாகு அவர்களின்

# வாழ்த்துரை

சங்கரத்தை இந்து வாலிபர் சங்கம் பவள விழா கொண்டாடும் இவ்வேளையில் எனது அபிப்பிராயத்தையும் ஆசியையும் வேண்டி என்னை பணித்ததற்கு மிகவும் பெருமையடைகிறேன் கடமையும் பட்டிருக்கின்றேன்!

**"தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல்**
**வன்மையும் எல்லாம் தலை"**

முத்த தலைமுறையை மதிக்கும் இளம் தலைமுறையின் விவேகத்தையும் இந்து மத பாரம்பரியத்தையும் கலை கலாச்சாரத்தையும் காக்க நீங்கள் எடுக்கும் முயற்சியில் உங்கள் உறுதியான மனநிலை புடம் போட்ட தங்கமாக விளங்குவது உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாகிறது. வாலிபர் சங்கத்தின் அத்திவாரமாகவும் ஆணி வேராகவும் விளங்கி இந்து வாலிபர் சங்கம் என்னும் ஆலமரம் விழுதுவிட்டு பரவ நீங்கள் எடுக்கும் முயற்சிகள் யாவும் பலனளிக்க எமது ஆசிகள். இதனைக்கண்டு பாராட்டுகிறோம், பெருமைப்படுகிறோம். நாட்டின் நிலைமையும் இயற்கையின் சூழ்நிலையும் பாதகமாகவே இருந்த போதிலும் உங்கள் பணி தளிர்விட்டு தொடர்வது மிகவும் பெருமைக்குரியது.

இந்து கலாச்சாரத்தை பேணி கலை நிகழ்ச்சிகளையும்; விழாக்களை யும் சிறப்பாக நடத்தும் உங்கள் தொண்டு பல நூற்றாண்டு காலம் தொடர்ந்து வளர வேண்டும்.

ஆல் போல் தழைத்து அறுகுபோல் பரந்து உங்கள் வாலிபர் சங்கம் கொடிவிட்டுப் பறக்க எல்லாம் வல்ல கரந்தை; முருகனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

**சதாசிவம் வீரவாகு**
சமாதான நீதவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் அவர்களின்

# வாழ்த்துச்செய்தி

சங்கரத்தை இந்து வாலிபர் சங்கம் பவளவிழாவை முன்னிட்டு வெளியிடும் பவளவிழா மலரிற்கு எனது வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். கடந்த எழுபத்தைந்து வருடங்களாக சங்கரத்தை இந்து வாலிபர் சங்கம் சிறப்புடன் நடத்தி வருகின்றது.

இன்றைய காலகட்டத்தில் சமய நெறிகளை பின்பற்றுவதும் சமயப்பணிகளில் ஈடுபடுவதும் மிகவும் அருகி வருகின்றது. இதனாலேயே பல சமூக விரோதச் செயல்கள் மலிந்து விட்டன. இந்து மக்களிடையே இந்துமத தர்மங்களை போதிக்கின்ற அமைப்புக்களும் அருகிவருகின்றன. எனினும் சங்கரத்தை இந்து வாலிபர் சங்கம் இக்கிராமத்தில் இந்து சமயம் வளர்ச்சி அடையச் செய்வதில் முன்னின்று செயற்படுகின்றது. இத்தகைய அமைப்புகள் எல்லா கிராமங்களிலும் வளர்க்கப்பட வேண்டும்.

பவள விழா கொண்டாடும் சங்கரத்தை இந்து வாலிபர் சங்கம் காலத்தின் தேவையை உணர்ந்து தீவிரமாகச் செயற்பட வேண்டும் என்றும் மேலும் பல்லாண்டு காலம் சேவை புரிய வேண்டும் எனவும் எல்லாம் வல்ல இறைவனை வணங்கி வாழ்த்துகிறேன்.

**நா. வேதநாயகம்**
பிரதேச செயலர்
சங்கானை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா வாழ் சங்கரத்தை மக்களின்

# வாழ்த்துச்செய்தி

அன்புடன் நாமனைவரும் ஒன்றுபட்டால் இவ்வுலகில் நாம் சாதிக்க முடியாதது என்பது எதுவும் இல்லை என்பதற்கு இணங்க யாழ் சங்கரத்தை இந்து வாலிபர் சங்கம் அமைந்துள்ளது.

இச்சங்கம் பல்வேறு பணிகளை கிராம மக்களின் முன்னேற்றத்துக்காக பணியாற்றி வருகின்றது. இவ்வருடம் பவள விழா கொண்டாடுவதற்கு திட்டமிட்டுள்ளதை அறிந்து மிகுந்த ஆனந்தமடைகிறோம். சங்கத்தின் பணிகளை தொடர்ந்து நடாத்துவதற்கும் சங்கரத்தை வாழ் கனடா மக்களாகிய நாம் சங்கத்தின் கனவுகளை நினைவாக்க எங்கள் ஆதரவையும் உதவிகளையும் வழங்க முன்வந்துள்ளோம்.

எங்கள் சங்கரத்தை இந்து வாலிபர் சங்க வளர்ச்சிக்கும் கிராம முன்னேற்றத்துக்கும் சங்கத்தின் பவளவிழா சிறப்பாக நடைபெற வேண்டுமென இறைவனின் ஆசியினை வேண்டி வாழ்த்துகிறோம்.

"வாழ்க தமிழ்"

**"கனடா வாழ் சங்கரத்தை மக்கள்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரத்தை கிராம சேவகர் அவர்களின்

# வாழ்த்துச்செய்தி

சங்கரத்தை இந்து வாலிபர் சங்கம் தனது 75வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் மகிழ்ச்சிகரமான இவ்வேளையில் பவள விழா மலருக்கு வாழ்த்துச்செய்தி அனுப்புவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். 75 ஆண்டுகளுக்கு முன் சங்கரத்தை கிராமத்தில் வாழ்ந்த பெரியோர்களும், கல்விமான்களும் பிற்காலத்தில் சைவமும் தமிழும் செழித்தோங்க வேண்டுமென்பதற்காக இந்து வாலிபர் சங்கத்தை ஆரம்பித்து வளர்த்து வந்தார்கள். இதனால் காலத்திற்கு காலம் ஏற்பட்ட மாறுதலுக்கெல்லாம் ஈடுகொடுத்து இன்றும் சங்கரத்தை கிராமம் சைவ சூழலாகவே காணப்படுகிறது. இந்நிலை மேன்மேலும் வளர வேண்டும்.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு - ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு" என்ற ஆன்றோர் வாக்குக்கிணங்க சங்கரத்தை வாழ் இளைஞர்கள் ஒன்று சேர்ந்து இந்து வாலிபர் சங்கத்தை மேன்மேலும் பல்லாண்டு காலம் நிலைத்து சங்கரத்தை கிராமத்திற்கு அரும்பணியாற்ற வேண்டுமென எல்லாம் வல்ல வீரபத்திர, பத்திரகாளி அம்மன் அருளை வேண்டுகிறேன்.

***க. விஜயவேல்***
கிராம உத்தியோகத்தர் பணிமனை
சங்கரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளவிழாக்காணும் சங்கரத்தை இந்து வாலிபர் சங்கத்திற்கு
கிராம அபிவிருத்திச்சங்கத்தின்

# ஆசிச்செய்தி

இன்றைய சமுதாயத்தின் முதுகெலும்பாகத் திகழ்பவர்கள் இளைஞர்கள். அவர்களது கைகளில் தான் ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி, ஒற்றுமை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை எந்த விடயத்தையும் வெற்றிகரமாக முடிக்கும் திறன் நாட்டின் மொழி வளர்ச்சி, சமய வளர்ச்சி, கல்வி கலாச்சார வளர்ச்சி என்பன தங்கியுள்ளன.

இன்றைய இளைஞர்கள் நாளை நாட்டை ஆளும் மன்னர்கள். இளைஞர்களிடம் சேவை செய்யும் மனப்பாங்கு இருக்க வேண்டும். வருங்கால சந்ததி சுபீட்சமாக ஒற்றுமையாக சுதந்திரத்துடன் தலைநிமிர்ந்து வாழ இளைஞர்களது பங்கு முக்கியமாகும்.

இந்த வகையிலே "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற முதுமொழிக்கிணங்கவும் "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற முதுமொழிக்கிணங்கவும் எமது கிராமத்தினது இந்து வாலிபர் சங்கம் எமது கிராமத்தில் 1926ம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை பல சேவைகளையும் தொண்டுகளையும் ஆற்றி *வீறுநடை போட்டு தனது 75 ஆண்டு சேவையைப் பூர்த்தி செய்து* பவளவிழாக்காண்கின்றது.

இச்சங்கம் எமது கிராமத்தின் மக்களுக்கு அரும் பெரும் சேவைகளை செய்து கொண்டே வருகின்றது. குறிப்பாக சைவசமய வளர்ச்சிக்காகவும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும், கல்வி, கலை, கலாச்சார வளர்ச்சிக்காகவும் அயராது உழைத்து வருகின்றது. சமய வளர்ச்சியின் பொருட்டு ஒவ்வொரு *வருடமும் மார்கழி மாத திருவாதிரைக்காலத்தில் மாணவர்களிடையே* திருவெம்பாவை மனனப்போட்டியை நடாத்தி மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கி வருகின்றது.

எமது கிராமத்தில் அமைந்துள்ள சங்கரத்தை பிட்டியம்பதி உறை அருள்மிகு வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்திலும் அருள்மிகு கரந்தைநகர் உறை முருகப்பெருமானது தேவஸ்தானத்திலும் பெருவிழாக் காலங்களில் தொண்டுகள் புரிந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். கிராமத்தின் வளர்ச்சிக்காக சிரமதானப் பணிகளையும் செய்து சேவை செய்து வருகின்றார்கள் என்பது வெள்ளிடைமலை.

இச்சங்கமானது தமது பவளவிழாவை சிறப்பாக நடத்துவதில் முதலாவது நிகழ்வாக மரம் நாட்டு விழாவையும் இரண்டாவது நிகழ்வாக திருவெம்பாவை திருப்பள்ளி எழுச்சி (உரையுடன்) சிறந்த நூலையும் வெளியிட்டு சிறப்பாக நடாத்தி வைத்துள்ளார்கள். இவர்களின் இந்த பவளவிழா இனிது நிறைவுற எமது நல்லாசிகளை மனமாரத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"**

**சுபம்**

**நா. ஜெயரஞ்சிதன் (J/P)**
*தலைவர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரத்தை சனசமூக நிலையத்தினரது

# வாழ்த்துச்செய்தி

எழுபத்தைந்து ஆண்டுகள் என்பது குறுகிய காலமல்ல. ஒரு சமூக நிறுவனம், சமய நிறுவனம் நின்று நிலைத்து செழிப்போடு தனது 75ஆவது வயது நிறைவைக் கொண்டாடுவதும் சாதாரண விடயமல்ல. இப்போது சங்கரத்தை இந்துவாலிபர் சங்கத்திற்குக் கிடைத்திருப்பது என்பது மகிழ்ச்சிக்குரியது. இது சங்கரத்தை வாழ் மக்கள் அனைவரும் பெருமைப்பட வேண்டிய விடயமாகும்.

சமயம் என்பது வெறுமனே வழிபாட்டிற்குரிய மார்க்கமல்ல. அது மானுட வாழ்வியலுக்குரிய மார்க்கம். வாழ்க்கையை நெறிப்படுத்துகின்ற, சரியான வாழ்வுப் பாதையை இனங்காட்டுகின்ற சமயம் என்பது மனிதனை மனிதனாக வாழ வைக்கும் ஒரு பணியைச் செய்வதாகும். ஒரு காலத்தில் சமயங்களும் கோயில்களும் தலைமை நிறுவனங்களாக இருந்து சமுதாயத்தை வழிப்படுத்தியிருக்கின்றன.

இன்றும் சமய நிறுவனங்கள் சமுதாயத்தில் முக்கிய இடத்தை எடுக்க வேண்டிய தேவை மேற்கிளம்பியுள்ளது. அதிலும் குறிப்பாக இந்து சமய நிறுவனங்கள் தமக்குரிய சமுதாயப் பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டிய காலம் கனிந்து விட்டது.

சங்கரத்தை இந்து வாலிபர் சங்கம் கடந்த காலங்களில் நடந்து வந்த பாதை மகிழ்ச்சிக்குரியது. இனிவரும் ஆண்டுகளிலும் தனது சமூகப் பணிகளை விஸ்தரித்து வெற்றி நடைபோட சங்கரத்தை சனசமூக நிலையத்தின் சார்பில் வாழ்த்துக்களை முன் வைக்கின்றேன்.

**சி. குமரகுரு**
தலைவர்
சனசமூக நிலையம்
சங்கரத்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினது

# வாழ்த்துச்செய்தி

சங்கரத்தை இந்து வாலிபர் சங்கமானது 2001ல் தனது 75வது அகவையைப் பூர்த்தி செய்யும் இவ்வேளையில் பவளவிழா கொண்டாடு வதையிட்டு மிகுந்த மகிழ்வடைகின்றேன். இவ்விழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மேலும் பெருமிதம் கொள்கிறேன்.

சைவமும் தமிழும் ஒன்றிணைந்த கல்வியே பூரண ஞானம் பயக்கும் கல்வியாகும். சமயநெறி பிறழ்ந்த கல்வி வாசந்தரா முருக்கின் வண்ணமலர் போலாகும். அந்தவகையில் அன்று தொட்டு இன்று வரை சங்கரத்தை சமூகத்தின் சைவ வளர்ச்சியில் இந்து வாலிபர் சங்கம் ஆற்றிவரும் பணிகள் போற்றத்தக்கன.

சங்கரத்தை வாலிபர்களை நன்கு வளர்த்தெடுத்த பெருமைபெற்ற இச் சங்கத்தின் செயற்பாடுகள் இன்று பல்கிப் பெருகி வருகின்றன. இன்று இச் சங்கம் நன்மைக்கு வித்திடும் பல பொதுநலப் பணிகளை நம்பிக்கையோடும், நாட்டு நல உணர்வோடும் ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது. இன்றைய தலைவரின் ஆக்கபூர்வ முயற்சிகளாலும், அயராத சேவையினாலும் இச் சங்கம் தனது 75வது அகவையில் தனித்தன்மை பெற்று விளங்குகின்றது.

சங்கரத்தையில் ஏனைய சங்கங்களுக்கு முன்னோடியாகத் திகழும் இச்சங்கம் மேன்மேலும் சேவைகளைப் பரப்பி சங்கரத்தை சமூகத்திற்கு உறுதுணையாக நின்று என்றென்றும் ஒளிபரப்ப கரந்தைக்குள கந்தன் அருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**தி. மாலதி**
தலைவர்
மா.கி.அ.சங்கம்
சங்கரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கரத்தை அபிவிருத்திச் சபையின் (கொழும்பு)

# வாழ்த்துச்செய்தி

சங்கரத்தை இந்துவாலிபர் சங்கம் ஐம்பத்தைந்து வருஷ நிறைவையொட்டி பவள விழா கொண்டாட்டம் நடத்துவதற்கு எங்கள் கொழும்பு சங்கரத்தை அபிவிருத்திச் சபை மிகவும் சந்தோஷம் அடைகின்றது. உங்கள் இந்து வாலிபர் சங்கம் மேன்மேலும் எங்கள் கிராமத்தின் அபிவிருத்திக்கு சிறப்பாக தொண்டு புரிவதற்கு வாழ்த்துகிறோம். எங்கள் கொழும்பு அபிவிருத்திச் சபையும் 1977ம் ஆண்டு தொடக்கம் எங்கள் கிராமத்தின் முன்னேற்றத்திற்கும், முருகமூர்த்தி கோவில் திருப்பணிகளுக்கும் இயன்ற ஒத்துழைப்புகளை வழங்கி வருகின்றது. இந்து வாலிபர் சங்க பவள விழா சிறப்பாக நடந்து நிறைவுபெற வாழ்த்துகிறோம்.

**மு. சண்முகராசா**<br>
*தலைவர்*<br>
சங்கரத்தை அபிவிருத்திச்சபை<br>
(கொழும்பு)

கோயிலுக்குள் நுழையும்போது படியின் மீது ஏறிச்செல்ல வேண்டும். திரும்பிப் போகும்போது படியைத் தாண்டிச்செல்ல வேண்டும். காரணம் என்ன தெரியுமா?

நாம் படிப்பதற்காகவே கோயிலுக்குள்ளே போகிறோம். அதனால் தான் இதைப் "படி" என்று அழைக்கும் வார்த்தையாகவே வைத்தார்கள். நடுவில் இருக்கும் தாமரை மலர் கல்வியின் சின்னம். திரும்பிப் போகும்போது படித்துக் கொண்டு விட்டோம் என்ற மரியாதையோடு இதைக் தாண்டிப்போகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கத்தினரது

# வாழ்த்துச்செய்தி

இந்து சமயம் அன்பை அடித்தளமாகக் கொண்டது. அன்பு கொண்ட உள்ளம் வாழ்த்தும் பண்பு கொண்டது. அன்பே சிவம் என்பது நமக்கு வழிகாட்டும் நல்வாக்கு அதனால் தான் நாம் தென்னாடுடைய சிவனே போற்றி என்று இறைவனை வாழ்த்தித் தொடர்ந்து என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி என்றும் இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க என்றும் வாழ்த்துவதை நமது நாளாந்த வழிபாட்டில் கைக்கொள்கின்றோம்.

நாடு, இனம், மொழி, நிறம் ஏன் சமய வேறுபாடு கூட இன்றி உலகிலுள்ள சகலரும் இன்பமே சூழ வாழவேண்டும் என்ற பெருமனம் கொண்டவர்களாக நாம் வாழ வழிகாட்டி நிற்கும் இந்து சமயத்தின் பண்பட்ட, அன்புமயமான, பரந்த சிந்தனையைத் தூண்டும் வழியிலே நம்பணி தொடர வேண்டும்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற முதுமொழியையும் நாம் சிந்தையில் கொள்ளவேண்டும். இன்று நாம்படும் வேதனைகளின் அடிப்படை ஒற்றுமையின்மையே என்பதை நினைவிற் கொள்ளவேண்டும்.

நாடு வாழ, நாம் வாழ, நமது எதிர்காலம் ஒளிபெற இந்து சமயம் காட்டும் அன்பு வழியில் நம் பயணத்தைத் தொடர்ந்தால் சிறப்பான பெறுபேற்றினைப் பெறுவது உறுதி.

சங்கரத்தை இந்து வாலிபர் சங்கம் மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற இலக்குடன் செயல்பட்டு இவ்வாண்டு பவளவிழாவையும் கொண்டாடுவது மகிழ்ச்சிக்குரியது.

உங்கள் பணி சமயப்பணி, சமூகப்பணி, கல்விப்பணி என்று பல்வேறு திக்குகளிலும் பரந்து விரிந்து பயனளிக்க வேண்டும் என்று வாழ்த்துவதுடன் அப்பணி தொய்வின்றித் தொடரவும், அதன் மூலம் சமுதாயம் பயனடையவும் வேண்டும் என்ற அவாவை வெளிப்படுத்தி அதற்கு எல்லாம்வல்ல இறைவன் திருவருள் கிட்ட வேண்டுமென அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கத்தினர் சார்பாகப் பிரார்த்திக்கின்றேன்.

**த. மனோகரன்**
பொதுச்செயலாளர்
அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின்

# வாழ்த்துரை

சங்கரத்தை இந்து வாலிபர் சங்கம் ஆரம்பித்து 75 ஆண்டுகள் பூர்த்தியாகும் இவ்வேளையில் பவளவிழா மலர் ஒன்றை வெளியிடுவதையிட்டு இம்மலருக்கு வாழ்த்துச்செய்தி அனுப்புவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

இந்து வாலிபர் சங்கம் பாடசாலைக்கு வெளியே உள்ள ஒரு அமைப்பாக விளங்கி இளைஞர்கள் மத்தியில் ஆலயத் தொண்டுகள் செய்வதற்கு உந்துசக்தியாக விளங்குவது குறிப்பிடத்தக்கது. மேலும் இளைஞர் கள் தமது ஓய்வுநேரத்தை வீணாக்காது நல்லவழியில் நடைமுறைப்படுத்து வதற்கு முக்கிய பங்கு வகித்து வருகின்றது. 75 வருடகாலமாக பல இளைஞர் களின் தலைமைத்துவப் பண்புகளையும் ஆளுமையையும் வளர்த்தெடுப்பதற்கு இச்சங்கம் காரணமாக விளங்கியதோடு சங்கரத்தை இளைஞர்கள் மத்தியில் ஒற்றுமையையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்தியுள்ளமை எமது பாராட்டுதற்கு உரியது. மேலும் இச்சங்கத்தின் செயற்பாடுகளிற்கூடாக சங்கரத்தை வாழ் மக்கள் ஒற்றுமையாக வாழ்வதற்கு வழிவகுத்து வருகின்றது.

பவளவிழா ஆண்டில் கடமைபுரியும் தலைவர் **வெ. மகிந்தன்,** செயலாளர் **வி. கஜிதரன்** பொருளாளர் **இ. குமரேஷ்** மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கு இம்மலரை வெளிக்கொண்டுவருவதற்கும் புதிய திட்டங்களை வளர்ப்பதற்கும் முக்கிய பங்குண்டு.

இம்மலர் சிறப்புற வெளிவருவதற்கும், இந்து வாலிபர் சங்கம் மென்மேலும் சிறப்புற்று பல தொண்டுகள் புரிவதற்கும் வட்டுக்கோட்டை இந்துவாலிபர் சங்கம் சார்பிலும் எனது சார்பிலும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**கே. வரப்பிரகதன்**
தலைவர்,
இந்து வாலிபர் சங்கம்,
வட்டுக்கோட்டை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னம்மா வித்தியாசாலை அதிபர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

சங்கரத்தை இந்து வாலிபர் சங்கம் பவளவிழாக்காணுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். தங்கள் மாட்சிமை பொருந்திய சங்கம் தங்கள் கிராமத்தின் அறிவொளிக்கும் சமய, சமூக சேவைக்கும் கலங்கரை விளக்காகத் திகழ்கிறது. எமது பாடசாலைக்கும் தங்கள் சங்கம் ஆற்றிவரும் பேருதவிகளை இன்று நினைவு கூருவதும் நன்றி தெரிவிப்பதும் எமதும் பாடசாலைச் சமூகத்தினதும் கடன் என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன். தங்கள் சங்கம் தொடர்ந்தும் சமயப்பணிகளும், சமூகப்பணிகளும் செய்து சிறப்புற்று தங்கள் சங்க உறுப்பினர்கள் பெயருடனும் புகழுடனும் வாழ எல்லாம் வல்ல பத்திரகாளி அம்பாளை இறைஞ்சுகிறேன்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

**திரு. வே. சிவானந்தன்**
அதிபர்
யா/சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை
வட்டுக்கோட்டை.

**கொள்கை**

கொள்கைக்காக, நமக்குப் பிரியமானவர்களின் அதிருப்தியையும் ஏற்றுக்கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும்.

எக்காலத்திற்கும் பொருந்தும் கொள்கைகள் சில உண்டு. அவற்றை விட்டுக்கொடுப்பதற்கு இடமில்லை. அவற்றைக் கடைப்பிடிப்பதில் உயிரைக் காணிக்கையாகச் செலுத்தவும் ஒருவர் ஆயத்தமாய் இருக்க வேண்டும்.

– மகாத்மா காந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளவிழாக்கண்ட வட்டு மத்திய கல்லூரி அதிபர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

பவளவிழாக் காலன்கின்ற சங்கரத்தை இந்து வாலிபர் சங்கத்தை வாழ்த்துவதில் பெருமிதமடைகின்றேன். இம்மண்ணிற் காலூன்றி நின்று சைவமும் தமிழும் மேலோங்க அயராது உழைத்து வரும் இளம் உள்ளங்கள் வாழ்த்தப்பட வேண்டியவர்களே, எம் மக்களின் உள்ளங்களில் சமயப்பண்பாட்டையும் இறையுணர்வையும் ஊட்டுவதன் மூலம் அறநெறிப்பட்ட ஒழுங்கான சமுதாயத்தை உருவாக்க முடியும் என்ற உண்மையை உணர்ந்து அக்குறிக்கோள் நிறைவேற தாங்கள் செயற்பட்டு வருவது கண்கூடு. பல்வேறு காரணங்களால் அழிந்தொழிந்து போகின்ற எமது சமய நூல்களைப் புதுப்பித்தும் அச்சிட்டு வெளியிட்டும் எமது பிற்காலச் சந்ததிக்கு கையளித்து வருகின்ற தங்கள் பணி வரவேற்கத்தக்கதாகும். இச் சங்கம் மேன்மேலும் வளர்ச்சியுற்று எம்மக்களின் உள்ளங்களில் அறிவொளி பாய்ச்சி ஒளிமயமான வாழ்வுக்கு இட்டுச் செல்ல எல்லாம் வல்ல இறைவன் துணை போக வேண்டும் என வேண்டி நிற்கின்றேன்.

"வளம் பல பெற்று நீடூழி வாழ்க"

**திரு. வ. சிவஞானபோதன்**
அதிபர்
யா/ வட்டு மத்திய கல்லூரி
வட்டுக்கோட்டை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

எல்லாம்வல்ல கரந்தை குள முருகனையும் பிட்டியம்பதி உறை வீரபத்திரகாளி அம்மனையும் வேண்டிக்கொண்டு முளையிலே கருகிவிட்ட இளந்தளிர்களான எமது சங்க உறுப்பினர்களை ஒரு கணம் நினைந்து,

எமது சங்கம் எழுபத்தைந்து ஆண்டுகாலமாக சைவமும் தமிழும் வளர அயராது உழைத்து வருவது யாவரும் அறிந்ததே. எமது சங்கம் என்ன நோக்கத்துக்காக எழுபத்தைந்து ஆண்டுக்கு முன்னர் ஆரம்பித்தார்களோ அதே நோக்கத்துக்காக இன்று வரை உழைத்து வருகின்றது. இக்காலகட்டத்திலும் இச்சேவையை தொடர்ந்து செய்துகொண்டு இருப்பது மிக சாதாரன விடயமல்ல. எந்நேரமும் என்ன நடக்கும் என்று தெரியாமல் திண்டாடிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் இன்றைய தலைமுறையினர் தொடர்ந்து தமது சேவையை செய்து கொண்டுதான் இருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது.

அன்னிய மண்ணில் இருந்து கொண்டு ஒவ்வொரு கணமும் வெறும் கற்பனையால் மட்டுமே எனது மண்ணையும், துள்ளித்திரிந்த பள்ளி நாட்களையும் அன்றும் இன்றும் தலைநிமிர்ந்து நிற்கும் எமது சங்கத்தையும் சிந்தையில் நினைவுகொள்ள முடிகிறது. துடிக்குது நெஞ்சம் ஒரு கணம் நிஜத்தில் காண எமது சங்கத்தின் பவளவிழாதனை.

மேலும் இக்கால கட்டத்தில் இப்படி ஒரு விழாவை முன்னின்று நடத்த முயன்ற அனைத்து அங்கத்தவர்களுக்கும் அவர்களின் கடின உழைப்புக்கும் நான் அவர்களை பாராட்ட கடமைப்பட்டுள்ளேன். அத்துடன் எமது சங்கத்துக்கு சகல விதத்திலும் உதவிவரும் கிராம மக்களுக்கும் எனது தாழ்மையான நன்றிகள்.

எமது சங்கத்தின் பவளவிழா மிகவும் சிறப்பாக நடைபெறவும் இச்சங்கத்தின் சேவைகள் தொடர்ந்து விரிவுபெற்று இன்னும் பல கோடி ஆண்டுகள் தொடரவும் என்றும் எனது மனம் கனிந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக.

"திருநெறிய செந்தமிழ்வழியே வாழுக இனிதே"

என்றும் அன்புடன்

**சு. பாஸ்கரன்**

சங்கரத்தை இந்துவாலிபர் சங்கம்

கனடாக்கிளை.

✳



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மக்கள் சேவையே மகேசன் சேவை"

தமிழர்களது கலாச்சாரத்தின்படி சொல்லும் ஒவ்வொரு சொல்லும் செய்யும் ஒவ்வொரு செயலும் மனிதனின் சேமநலத்துக்காக சமுதாய நலத்துக்காக முன்னேற்றத்துக்காக அவர்களது புகழுக்காக அவர்கள் நம்பிக்கையை வளர்க்க அன்பினை பெருகச் செய்ய ஆனந்தத்தை வழங்கவே அமைந்துள்ளன என்பதற்கு இணங்க எமது இந்து வாலிபர் சங்கம் அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

இன்றைய இக்கட்டான காலகட்டத்திலும் எமது சங்கம் தலைநிமிர்ந்து தனது பணிகளை ஆற்றிக்கொண்டு இருப்பதை இட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். எமது சங்கம் சைவமும் தமிழும் வளர ஒவ்வொரு தலைமுறையினரும் தங்களால் இயன்றளவு சேவையை செய்து கொண்டு வந்திருக்கிறார்கள். இருந்தாலும் இன்றைய காலகட்டத்தில் இருக்கும் இக்கட்டான காலநிலையிலும் கூட இந்த இளைய தலைமுறையினா் இப்பவளவிழாவினை கொண்டாடுவது மிகவும் பாராட்டத்தக்கது.

**க. குணச்செல்வன்.**
சங்கரத்தை இந்துவாலிபர் சங்கம்
கனடாக்கிளை.

மகனே பொறுமைகொள். நீ என்றும் எதிர்பார்த்ததை விட அதிகமாய் உன் முயற்சி செழித்தோங்கும். ஒவ்வொரு காரியமும் ஜெயம் பெறுவதற்கு முன் நூற்றுக்கணக்கான கஷ்டங்களைக் கடந்தேயாக வேண்டும். முயற்சியுடையவர் இன்றில்லாவிட்டால் நாளை நிச்சயமாக ஒளி காண்பார்கள்.

– சுவாமி விவேகானந்தர் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் உயர்ந்தோராவோம்

இற்றைக்கு மூன்று பத்து ஆண்டுகள் பின்னோக்கிப்பார்க்கிறேன். அன்று யாழ்ப்பாணக் கல்லூரியில் க.பொ.த உயர்தர வகுப்பு மாணவனாக இந்து வாலிபர் சங்க அங்கத்தவனாக இருந்த காலம். அன்று கல்வி முறையில் தரப்படுத்தல் மூலம் விழுந்த அடியின் தாக்கம் தான் இன்று உலகத்தின் ஒரு மூலையில் எம்மை ஒதுக்கியும் உங்களை யுத்த நெருக்குவாரத்தின் நடுவில் எத்தனையோ கஷ்டங்களுக்கும் தொல்லைகளுக்கும் முகம் கொடுக்கவும் வைத்துள்ளது.

இத்தனை கஷ்டங்கள் மத்தியிலும் என் தாய் மண்ணின் புதல்வர்களாகிய நீங்கள் இந்து வாலிபர் சங்கம் மூலம் சமூகத்தொண்டும் புரிவது கண்டு மிகவும் மகிழ்வடைகிறேன். எங்கள் காலத்தில் எம்மைப் பலவிதத்திலும் ஊக்குவித்து உதவிகள் பல புரிந்த கனவான்கள் சமூகத் தொண்டன் திரு. வயிரவநாதன் அவர்களுக்கும் டாக்டர் செல்லத்துரை அவர்களும் எல்லோராலும் நினைவு கூறப்பட வேண்டியவர்கள் ஆவார்கள்.

நீங்கள் ஒரு மலர் வெளியிடுவது குறித்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்ததுடன், இம்மலர் உலகெங்கும் பரந்து வாழும் சங்கரத்தைப் பதியின் புதல்வர்களை நிச்சயமாக ஒன்றிணைக்கும் என்ற நம்பிக்கையுடன் இப்பணியைப் பொறுப்பேற்று உழைக்கும் உங்கள் அனைவரையும் மனதார வாழ்த்துகிறேன்.

இன்றைய நாட்டின் இனத்தின், சமூகத்தின் எமது தாய்ப்பதியின் நிலைமையையும், தேவைகளையும் உணர்ந்து ஒழுக்க சீலர்களாகவும் கடினமுயற்சியோடு கல்வி அறிவில் உயர்ந்தோராகவும் வாழ வேண்டும் என்ற உறுதியுடன் நாம் உழைத்து உலகில் உயர்ந்தோராவோம்.

*அருணாசலம் தெட்சணாமூர்த்தி*
கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dr. க சிவனடியான் அவர்களின்

# வாழ்த்துச்செய்தி

காலத்தின் பயணம் மாற்றங்களின் பாதையில் தான் செல்ல வேண்டி இருக்கிறது. எனினும் பழைமைவாதிகளின் மூடத்தனமான கொள்கைகளும், தீயவர்களின் சூழ்ச்சித்தனமான சட்டதிட்டங்களும் மாற்றங்களை மறைமுகமான சிறைக்குள்ளேயே அடைத்து வைக்க முயலுகின்றன.

புரையோடிப்போன பழைமைகளைத் துடைத்து சமுதாயத்தை ஒளிரிடச் செய்யும் ஆற்றலும், அடக்கு முறைச்சட்டங்களை அமுல்படுத்துவோரை அங்கிருந்து அகற்றிவிட்டு அடிமைகளை ஆள்பவர்களாக்கும் ஆளுமையும் இளைஞர்களுக்கே உண்டு.

எங்களது சமுதாயத்தின் விடிவும் முன்னேற்றமும் இளைஞர்கள் கையிலே இருக்கிறது. அவர்களது சேவை இது போன்ற சங்கங்கள், இயக்கங்கள் மூலம் ஆற்றப்படுகின்றது.

கையில் கிடைத்ததைக் கொண்டு கடின உழைப்போடு இளைஞர்கள் பாடுபட்டால் கிராமம் வறுமையிலிருந்தும், அறியாமையிலிருந்தும் விடுதலை பெறும்.

சங்கத்தின் உறுப்பினராவதன் மூலம் தங்களையும், தங்களது செல்வாக்கினையும் செல்வத்தையும் உயர்த்திக்கொள்ள முயலும் பிரகிருத்திகளைப் போலல்லாமல் சங்கரத்தை இந்து வாலிபர் சங்கம் உண்மையான உழைப்பாளிகளை உள்ளடக்கியுள்ளது.

கடந்த எழுபத்தைந்து ஆண்டுகளை விட மேலும் பணிகளை இந்து வாலிபர் சங்கம் ஆற்றி சங்கரத்தையை கரத்தையிலிருந்து சுப்பசோனிக்கிற்கு அழைத்துச் செல்லும் என எதிர்பார்த்து அதை வாழ்த்துவதில் பெருமையடைகிறேன்.

**Dr. க. சிவனடியான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்

இருபத்தோராம் நூற்றாண்டில் பவள விழாவை கொண்டாட எண்ணியிருக்கும் என் இனிய இளம் தளிர்களே!

என் கரம் பிடித்து எழுதும் ஓர் இரு வரிகளால் என் வாழ்த்து மடலை வரைகிறேன். அன்னிய மண்ணில் இருந்து எனது சங்கத்திற்கும், பிறந்த மண்ணிற்கும் நான் வரையும் வாழ்த்து மடல்.

இருப்பினும் எமது சங்கமும் எனது கிராமமும் இளம் சகோதரர்களால் இவ்வளவு முன்னேற்றம் அடைவது தான் பெருமையிலும் பெருமை. இவ் இருபத்தோராம் நூற்றாண்டில் எமது பவளவிழா என்றென்றும் அழியாச் சின்னமாகவும் வெளியூர் மக்கள் அறியக் கூடியதாகவும் இவ் விழா சிறப்புற நடைபெற வேண்டுமென வாழ்த்தி இம் மடலை நிறைவு செய்கிறேன்.

**"ஊக்கமது கைவிடேல்"**

அன்புடன்

நெதர்லாண்ட் **ப. நடேஸ்**

# வாழ்த்துகின்றோம்

"அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமுள்ள இறைவன் சங்கரத்தை வாழ் மக்களை நூறு வீத சமய நெறியில் ஈடுபடுத்தி உள்ளொளி பரப்பி மறுமலர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லவும் சங்கரத்தை இந்து வாலிபர் சங்கத்தை வட மாகாணத்தில் முன்னோடியாக விளங்குமாறு செய்யவும் அருள்புரிய வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

அன்பான

**ந. குமாரசாமி**

# வாழ்த்துகின்றோம்

பல்லாண்டு வாழ்ந்த எமது சங்கம் இன்னும் பற்பல ஆண்டுகள் வாழ்வதற்கு எல்லாம் வல்ல பத்திரகாளி அம்மன் அருள்புரிவாராக. தற்போதைய சங்க உறுப்பினர்களின் மாபெரும் முயற்சி பற்றி அறிந்தவுடன் முன்னைய நாள் உறுப்பினர்களாகிய எமக்கு ஒரு புத்துணர்வும் அளவற்ற ஆனந்தமும் ஏற்பட்டுள்ளது. அந்நிய நாட்டில் புலம்பெயர்ந்து இயந்திர வாழ்வில் அகப்பட்டுள்ள எமக்கும் எமது சந்ததிக்கும் ஒரு நிலையான முகவரி என்றென்றும் இருக்கும் என்ற நம்பிக்கையும் எமது கிராமத்தின் பாரம் பரியமும் மொழியும் சமயமும் எமது எதிர்கால சந்ததியினரிற்குச் சென்றடைந்து என்றென்றும் வாழும் என்ற நம்பிக்கையும் உருவாகியுள்ளது. முயற்சியுடன் முன்னின்று செயலாற்றும் நமது இளைஞரிற்கு எமது வாழ்த்துக்கள் உரித்தாகுக.

Sydney – Australia. **மகேஸ்வரன் பிரபாகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கரத்தை இந்து வாலிபர் சங்கம்
## பவள விழா




2000 ஆண்டுக்குரிய அங்கத்தவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து வாலிபர் சங்கம், சங்கரத்தை




தலைவர்
வெ. மகிந்தன்



போசகர்
ந. சண்முகவேல்



செயலாளர்
வி. சுகிதரன்



பொருளாளர்
இ. குமரேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து வாலிபர் சங்கம்

## சங்கரத்தை

## 2001ம் ஆண்டு நிர்வாக சபை உறுப்பினர்கள்

- ❖ தலைவர் : வெ. மகிந்தன்
- ❖ செயலாளர் : வி. சுஜிதரன்
- ❖ பொருளாளர் : இ. குமரேஸ்
- ❖ உப தலைவர் : தி. சுரேந்திரன்
- ❖ உப செயலாளர் : S. T நந்தகுமார்
- ❖ சமய சமூக பணி பொறுப்பாளர் : சி. குருபரன்
- ❖ விளையாட்டு துறை பொறுப்பாளர் : வை. சுரேஸ்
- ❖ உப விளையாட்டு துறை பொறுப்பாளர் : ஜெ. கஜேந்திரன்
- ❖ கணக்கு பரிசோதகர்கள் : ச. கருணாகரன்
  : ந. பிரபாகரன்
- ❖ சிறுவர் பகுதி பொறுப்பாளர் : ச. பரந்தாமன்
- ❖ நிர்வாக சபை உறுப்பினர்கள் : வி. கேசவன்
  : சி. நிரஞ்சன்
  : வ. ஞானரூபன்
  : நா. குகதாஸ்
  : பு. சேயோன்
  : சி. ஆதீஸன்
  : வி. துவாகரன்
- ❖ போசகர் : ந.சன்முகவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து வாலிபர் சங்கம்
## சங்கரத்தை

## 2000ம் ஆண்டு நிர்வாக சபை உறுப்பினர்கள்


| | |
|---|---|
| ❖ தலைவர் | : வெ. மகிந்தன் |
| ❖ செயலாளர் | : வி. சுஜிதரன் |
| ❖ பொருளாளர் | : இ. குமரேஸ் |
| ❖ உப தலைவர் | : தி. சுரேந்திரன் |
| ❖ உப செயலாளர் | : ச. கிருபாகரன் |
| ❖ சமய சமூக பணி பொறுப்பாளர் | : சி. குருபரன் |
| ❖ விளையாட்டு துறை பொறுப்பாளர் | : வை. சுரேஸ் |
| ❖ உப விளையாட்டு துறை பொறுப்பாளர் | : நா. குகதாஸ் |
| ❖ கணக்கு பரிசோதகர்கள் | : யோ. திருமுருகன் |
| | : ச. கருணாகரன் |
| ❖ சிறுவர் பகுதி பொறுப்பாளர் | : ச. பரந்தாமன் |
| ❖ நிர்வாக சபை உறுப்பினர்கள் | : S. T. நந்தகுமார |
| | : யோ. பாலமுருகன் |
| | : வி. கேசவன் |
| | : பொ. மலரவன் |
| | : சி. ஆதவன் |
| | : தே. துஷ்யந்தன் |
| | : சி. நிரஞ்சன் |
| ❖ போசகர் | : ந. சண்முகவேல் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து வாலிபர் சங்கம் ~சங்கரத்தை



2000ம் ஆண்டு நிர்வாகக்குழு



2001ம் ஆண்டு நிர்வாகக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]



[illegible]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து வாலிபர் சங்கம் –சங்கரத்தை



2000ம் ஆண்டு நிர்வாகக்குழு



2001ம் ஆண்டு நிர்வாகக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கம் வளர்த்த தலைவர்கள்



வைரவநாதர்



S.R. கனகநாயகம்



Dr. செல்லத்துரை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறம் வளர்த்த சமூகத்தொண்டன் ஸ்தாபகர்

இயற்கை அன்னையின் வளமும் இறையருள் நிறையப் பெற்ற சங்கரத்தையில் கனகசபை சின்னத்தங்கம் தம்பதிகளிற்கு 1904ம் ஆண்டு புரட்டாதித் திங்கள் 18ம் நாள் அவையத்து தோன்றியவர் திரு. க. வயிரவநாதர். இவர் சிவநெறி சாரும் சீரிய கல்வியும் செந்தமிழோடு ஆங்கிலமும் கற்றுத்தேர்ந்தவரானார். 1926ம் ஆண்டு இவர் எமது சங்கத்தினை தனது நண்பர்களுடன் சேர்ந்து தோற்றுவித்தார். 1928ம் ஆண்டு தமது ஆசிரியப் பணியை அராலி இந்துக்கல்லூரியில் ஆரம்பித்து தொடர்ந்து உரும்பிராய், வட்டு இந்துக் கல்லூரிகளில் பணியாற்றி ஆயிரக்கணக்கான மாணவர் வாழ்க்கையை வளப்படுத்தினார்.

இவர் சங்கரத்தை மக்களிடம் நன்மதிப்பை பெற்று இருந்தார். இவர் எமது சங்கத்தலைவராகவும் தொடர்ந்து அமரத்துவம் அடையும் வரை போசகராகவும் விளங்கினார். அத்தோடு சங்கரத்தை கிராம முன்னேற்றச்சங்கம், சனசமூகநிலையம், ஐக்கிய பண்டக சாலைச்சங்கம், ஐக்கிய நாணயச்சங்கம், சங்கரத்தை கரந்தை குளவத்தை முருகமூர்த்தி ஆலய வழிபடுவோர் சபை என்பவற்றின் தலைவராகவும், மாதர் முன்னேற்றச் சங்கம், சின்னம்மா வித்தியாசாலை ஆகியவற்றின் ஆலோசகராகவும் சேவை புரிந்துள்ளார். மாதர் சங்கத்தை உருவாக்கவும் அதற்கான கட்டடத்தை நிறுவவும் அக்கட்டடத்தில் தொடக்கப்பட்ட நூல் நிலையத்திற்கு நூல்களையும் அரசிடம் இருந்து பெறவும் காரணமாக இருந்தார்.

வட்டுக்கோட்டை கலாநிலைய நிர்வாக உறுப்பினராகவும் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை இயக்குனர் சபையில் பல ஆண்டுகள் உறுப்பினராகவும், கண்காணிப்புச் சபை தலைவராகவும் பணி செய்தார். இவர் சைவபரிபாலன சபை சிவதொண்டன் நிறுவனங்களோடு இணைந்து தொண்டாற்றினார். வட்டு இந்துக்கல்லூரி சின்னம்மா வித்தியா சாலை என்பவற்றில் சைவசமய பாடத்தில் திறமை பெறுபவரிற்கு பரிசு வழங்க பரிசு நிதியம் ஒன்றை ஆரம்பித்தார்.

ஒழுக்கத்தை உயிரிலும் ஓம்பிய இவரிற்கு அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றபோது 20.09.1964 இல் மாபெரும் பாராட்டு விழா நடைபெற்றது. இவ் விழாவில் இவரிற்கு "சமூகத்தொண்டன்" என்ற பட்டம் சூட்டி கௌரவிக்கப்பட்டது. சங்கரத்தை இந்து வாலிபர் சங்கமும் மாதர் சங்கமும் இவரின் எழுபத்தைந்து ஆண்டு நிறைவை ஒட்டி 1979ல் பாராட்டு விழாவை எடுத்து கௌரவித்தன.

அணையாஜோதி சமூகத்தொண்டன் வயிரவநாதர் 1981.03.09 இறை பதம் அடைந்தார். இன்றும் அன்னார் தொடக்கி வைத்த சங்கங்கள் சங்கரத்தை முன்னேற்றத்தில் பங்குகொண்டு வருகின்றன.

**தொகுப்பு**
**மலர்க்குழு**

**ஆதாரம்**

1. *அன்னாரின் நினைவுமலர்*
2. *எமது சங்க பொன்விழா மலர்*



"மக்கள் சேவையே மகேசன் சேவை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தரணி S.R. கனகநாயகம்

இவர் சுப்பையா இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளிற்கு 11.05.1904 அன்று புத்திரனாக அவதரித்தார்

இவர் தமது ஆரம்பக்கல்வியை யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்றார். தொடர்ந்து சர்வகலாசாலைக்கல்லூரியில் S.C பயின்று லண்டன் சர்வகலாசாலைப் பரீட்சையில் தோன்றி கலைப்பட்டதாரியானார். பின்னர் ஆனந்தாக்கல்லூரியில் சில வருடங்கள் ஆசிரியராக கடமையாற்றி 1933ம் ஆண்டு அற்வகேற்றாக சத்தியப்பிரமாணம் எடுத்தார்.

இவர் 1949ல் செனற்றராக (முதலை உறுப்பினர்) பதவி ஏற்றார். இவர் தமது அரசியல் வாழ்க்கையில் தமிழ் காங்கிரஸ் அங்கத்தவராகி பின்னர் அதன் உபதலைவராகவும் விளங்கினார். 1970ம் ஆண்டு முதல் 1987ம் ஆண்டு வரை சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் தலைவராக கடமையாற்றினார். அத்துடன் சைவபரிபாலன சபை, பரமேஸ்வராக் கல்லூரி இயக்குனர் சபை என்பவற்றின் தலைவராகவும், இயக்குனராகவும் கடமையாற்றினார். யாழ் பல்கலைக்கழக ஆலோசகர்கள் அவையின் அங்கத்தவராக இருந்தார்.

இவர் தமது இளமைக் காலத்தில் சங்கரத்தை இந்து வாலிபர் சங்கத்தினது உறுப்பினராகவும் ஏனைய சங்கங்களின் உறுப்பினராகவும் இருந்து அவற்றின் வளர்ச்சியில் முனைப்புடன் செயற்பட்டார். சங்கரத்தை கரந்தை குளவத்தை ஆலய பரிபாலன சபையின் தலைவராக பணியாற்றினார்.

இவர் அவுஸ்திரேலியாவில் 15.05.1989 இறைவனடி சேர்ந்தார்.

| | |
|---|---|
| தொகுப்பு<br>மலர் குழு | ஆதாரம்<br>S.R. கனகநாயகம் அவர்களின்<br>ஞாபகார்த்த மலர் கனகாஞ்சலி |

இரத்த பந்தமில்லாதவர்களையே கதறி அழவைக்கும் அற்புத மரணம் ஒருவருக்கு வாய்க்கின்றதென்றால், அவர் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர் என்று பொருள்.



"ஆசை, அச்சம், மயக்கம் அனைத்திலிருந்தும் விடுதலை பெற வைப்பதே தியானம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டர் கணபதிப்பிள்ளை செல்லத்துரை

இவர் மலாயாவில் 17.4.1907 ஆம் ஆண்டு திரு. திருமதி. சித்தியவான் கணபதிப்பிள்ளை தம்பதிகளுக்கு ஏக புத்திரனாக அவதரித்தார்.

இவர் தனது இளமைக்கல்வியை மலாயாவின் இபோவிலும், பட்டப்படிப்பினை சிங்கப்பூர் மருத்துவக்கல்லூரியிலும் பட்டப்பின் படிப்பினை எடின்பறோவிலும் மேற்கொண்டார்.

இவர் அரச சேவையிலும் பின் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையிலும் சேவையாற்றினார். சங்கரத்தையில் தனது இல்வாழ்க்கையை இயற்றிய காலை சங்கரத்தை வாழ் இளைஞர், யுவதிகள் பயனுறும் வண்ணம் ஐக்கிய இளைஞர் கழகத்தை உருவாக்கி விளையாட்டுத்துறையை ஊக்குவித்ததுடன், தாயாரின் ஞாபகார்த்தமாக நிறுவப்பட்ட சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலையையும் இயன்றவரை அபிவிருத்தி செய்தார்.

மேலும் திவ்விய ஜீவன சங்கத்தில் இணைந்தும் சுவாமி சிவானந்த மகரிஷியின் வழி நின்று மக்கள் சேவையில் ஈடுபட்டார்.

இவர் சைவ சமயத்திற்கும் சங்கரத்தை வாழ்மக்களுக்கும் ஆற்றிய தொண்டு அளப்பரியது. இவரின் பணிகள் பல இன்னும் அழியாது நிலைநின்றன.

**சங்கரத்தை வாசி**

> ஆழமான கடலில் தான் முத்துக்கள் இருக்கின்றன. எடுப்பதற்கு ஒருவன் எல்லாவிதமான ஆபத்துக்களுக்கும் தயார்ப்படுத்திக் கொண்டு துணிய வேண்டும். கடலில் ஒருபகுதியில் ஒரு தரம் மூழ்கியதில் உனக்கு முத்துக்கள் கிடைக்காமல் போனால் அந்தக் கடலில் முத்துக்கள் இல்லையென்ற முடிவு செய்துவிடாதே. அடிக்கடி முயற்சி செய்துபார் அது கடைசியில் உனக்கு முன்னேற்றத்தையும் சிறந்த பலனையும் நிச்சயம் கொடுக்கும்
>
> – ஸ்ரீ இராமகிருஷ்ணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போசகரின் போதனை

சங்கவூர் என செல்லமாக சொல்லி அழைக்கப்படும் சிற்றூர் சங்கரத்தை. இவ்வூர் பெற்றுள்ள பெருமைகள் பல. இவற்றுக்கு சிகரமாக விளங்குவன சங்கங்கள். இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு நோக்கங்களை குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. இவற்றுள் சைவமும் தமிழும் குன்றாது குன்று போல் உயர்ந்து விளங்கிடல் வேண்டும் என்னும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட சங்கம் இந்து வாலிபர் சங்கமாகும்.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்து வாலிபர் சங்கம் இன்று இருபத்தொராம் நூற்றாண்டின் முற்பகுதியில் அகவை எழுபத்தைந்தை நிறைவு செய்து பவள விழா காண்கிறது.

இன்று யாழ் மாவட்டத்தில் இயங்கி வரும் இந்து வாலிபர் சங்கங்களில் மூத்த சங்கமாக விளங்கும் சங்கங்களில் நமது இந்து வாலிபர் சங்கமும் ஒன்று என்றால் அது மிகையன்று. இத்தகைய பெருமைக்குரிய சங்கத்தில் போசகராக இருந்து என்னால் ஆன பணிகளை செய்வதை எண்ணி பூரிப்படைகின்றேன்.

1976ம் ஆண்டு சங்கப் பொன்விழா கோலாகலமாக கொண்டாடப்பெற்றது. அவ்வேளை என்னை சங்கத்தலைவனாக அமர்த்திய அன்றைய இளம் நெஞ்சங்களையும் இன்று பவளவிழா எடுக்கும் பிஞ்சு உள்ளங்களையும் இணைத்துப் பார்க்கின்றேன்.

**"ஒன்று பட்டால் உண்டு உயர்வு**

**என்றும் இது தொட்டு நின்றால் மகிழ்வு"**

இவைகள் என் பார்வையில் தெளிவாகத் தெரிகின்றன. இவற்றை இளம் பிஞ்சு உள்ளங்கள் மனதில் பதித்துக் கொள்ள வேண்டுகின்றேன்.

இன்றைய சிறார்கள் நாளைய சிந்தனைச் சிற்பிகள். அவர்களால் வடிக்கப்படும் சிலைகள் நாளை நம் சங்கத்தை வளர்க்கும் கலைக்கோவிலாக விளங்க வேண்டும். நம்மூரில் சமயம், மொழி, கலை, கலாச்சாரம், மேல் ஓங்க இன்று பவள விழா காணும் நம் சங்கம் பல்லாண்டு நீடித்து பணி செய்திட வேண்டுமென்று என் நல்லாசியுடன் நல்வாழ்த்துக் களை கூறி என் மன வாசனையை இம்மலர் வாசனையூடாக நிறைவு செய்கின்றேன்.

ந. சண்முகவேல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பவள விழாப்பாதையில் தலைவர் தரும் தகவல்

ஊதுபத்தி உருவத்தில் சிறிது அதன் வாசனை பெரிது. இத்தகைய இயல்புக்கு ஒப்பானது நம்முடைய சங்கரத்தைக் கிராமம். சிறிதாக இருப்பினும் சிறப்பு அம்சங்கள் பல வற்றை தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. இதில் எமது சங்க வளர்ச்சியும் ஒன்றாகும்.

சங்கரத்தை மாதாவின் மடியில் தவழும் சங்கங்களில் முதல் முதலாக தோற்றுவிக்கப்பட்ட சங்கம் இந்து வாலிபர் சங்கமாகும். இச்சங்கத்தை தோற்றுவித்த முன்னோர்களை என்றென்றும் நினைவில் கொள்வது நமது கடமையாகும்.

20ம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்ட சங்கம் இன்று 21ம் நூற்றாண்டில் பவளவிழாப் படியில் தன் அடியினை பதித்த பெருமை தோற்றுவித்தவர்களையும் காத்து வளர்த்த வாலிபர்களையும் ஆதரவளித்த ஊர்வாசிகளையும் சேரும்.

பட்டொளி வீச பவளவிழா எழிற்கோலம் பூண்டுள்ள சங்கத்தின் இன்றைய தலைமையை ஏற்று என் கடன் பணியினை சக உறுப்பினர்களுடன் நிறைவு செய்வதை மனத்திடை எண்ணி பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

வெள்ளி விழா, பொன் விழா, பவளவிழா வரிசையில் வாகை சூடி வளர்ந்து வரும் சங்கம் மென்மேலும் பணிகள் பல பாங்குடன் ஆற்றி நூற்றாண்டு விழாவை தாண்டி "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற இலட்சியத்துடன் தான் தவழ்ந்திடும் சங்கரத்தை மாதாவுக்கு புகழை சேர்த்திட வளர்ச்சியடைய வேண்டும் என்பதே எனது தணியாத ஆசையும் ஆசியுமாகும்.

இன்றைய சங்க உறுப்பினர் பால் இருந்திடும் உற்சாகம் உழைப்பு சிந்தனை வருங்கால உறுப்பினராக வரவிருக்கும் சிறார்களிடையே தோன்றிட அவர்களுக்காக நடாத்தப் படும் நிகழ்வுகளை விரிவாக்கி வழி காட்டுதல் நமது கடமைகளில் ஒன்றாகும். அன்று நடந்ததை இன்று நடப்பதை சிறார்கள் எதிர்காலத்தில் அறிந்து கொள்ள வெளியிடப்படும் பவளவிழா மலர் பயன் தரும் என்பது எனது நம்பிக்கையாகும்.

எமது சங்க ஆவணங்கள் சில காலத்தின் கோலத்தால் கரைந்துவிட்டது. இந் நிலையில் இருபத்தைந்து ஆண்டுக்கு முன் பொன்விழாவின் போது வெளியிட்ட "பொன்விழா மலர்" சங்க வரலாற்றை தெளிவுபடுத்த இன்று உதவுவது போல் பவளவிழா மலரும் எதிர்காலத்தில் உதவும் என்பது எனது கணிப்பாகும்.

மேலும் எனது சிந்தனையில் எழும் எண்ணங்களை எதிர்கால உறுப்பினருக்காக குறிப்பிட விரும்புகின்றேன்.

**தனிமரம் தோப்பாகாது**
**தனி இதழ் மலராகாது**
**தனிக்கரம் பலமாகாது**

பல கரங்கள் இணையும் போது பலம் தோன்றும். பல முகங்கள் சந்திக்கும் போது அறிமுகம் தோன்றும். அன்று சங்கரத்தை மண்ணில் பல முகங்கள் ஒன்று கூடியதால் நம் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. இன்று பவளவிழாப் பாதையில் வளர்ச்சியை தொட்டு விட்டது. வாழையடி வாழையாக வரும் வாலிபச் சமூகத்தால் ஆல் போல் தழைத்து நிற்கும் சங்கத்தை வெளிநாடுகளில் வாழும் சங்கரத்தை மண்ணின் மைந்தர்கள் பலர் விழுதாக தாங்கி நின்று நிதியினை அள்ளி அளிக்கின்றனர்.

சுருங்கக் கூறின் இங்கு முளையிட்ட சங்கம் இன்று வெளிநாடுகளில் கிளைவிட ஆரம்பமானது என்றே சங்கத்தினது பெருமையை பறை சாற்ற கிடைத்த சான்றாகும். ஆதலால் சான்றினை ஊன்றுகோலாக உபயோகித்து பணிகள் பல ஆற்றி பவளவிழா ஒளியில் நமது விழிகள் ஒளிர்ந்திட மகிழ்ந்திடுவோமாக.

**வெள்ளியம்பலம் மகிந்தன்**



"திரிந்துபோன பாலுக்காகவும் கசந்துபோன மனதுக்காகவும் அழுது என்ன பயன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலராசிரியர்களின் மனங்களிலிருந்து ...

சங்கரத்தை இந்து வாலிபர் சங்கத்தினது பவள விழா மலரை உங்கள் முன் தொகுத்து சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இம்மலரானது எமது சங்கத்தினால் இவ்வாண்டு வெளியிடப்படும் இரண்டாவது வெளியீடாகும்.

காலத்தின் கோலத்தால் பிரிந்து போயுள்ள எங்கள் உறவுகளிற்கு தங்கள் உடன் பிறப்புகள் சொந்த மண்ணில் எவ்வாறு வாழுகின்றன என்றும், அவர்களின் வாரிசுகளிற்கு தமது மூதாதையர் பூமியின் வரலாற்றை செப்பிடவும் எதிர்கால சந்ததியினிற்கு நிகழ்கால இளம் தலைமுறையினரின் செயற்பாடுகள் எவ்வாறு அமைந்தது என்பதை உணர்த்த இம்மலர் உதவும் என நம்புகின்றோம். ஏனெனில் கடந்த மூன்று சதாப்தத்திற்கு முன் (அதாவது பொன்விழா காலத்தில்) எம் சங்க உறுப்பினரால் வெளியிடப்பட்ட பொன்விழா மலர் எமது சங்க செயற்பாடுகளிற்கு ஆதாரமாக இன்றும் எம்மிடம் விளங்குகின்றது.

எமது பிரதேசத்தில் இன்றைய சூழ்நிலையில் எமது மொழி, சமய, கலாச்சார போக்குகளில் பெரும் பாதகமான மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றது. இத்தகைய மாற்றங்களினால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து நம்மை நாம் காப்பதற்கு எமது சங்கம் உழைத்து வருகின்றது. இதற்கு எமது சமூகத்தினர் ஒத்துழைப்பும், ஊக்கமும் தருகின்றனர்.

இந்த சிறிய மலரிற்கு ஆக்கங்களையும், வாழ்த்துரைகளையும், ஆசியுரைகளையும், விளம்பரங்களையும் தந்து உதவிய இனிய உள்ளங்களிற்கும், அத்தோடு எமது பவளவிழா சிறப்புற நிதி உதவிய அனைவரிற்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இம்மலரை திறம்பட அச்சிட்டு வழங்கிய தயா அச்சகத்தினருக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம். இம் மலரின் அட்டைப் படத்தை அச்சிட்டு தந்த ஞானா பப்ளிக்கேஷன்ஸ் நிறுவனத்தாருக்கும் எமது நன்றிகள்.

இணை மலராசிரியர்கள்
சோசி ஆதவன்
ச. கருணாகரன்

- "ஏதேனும் ஒன்றை அனுபவிப்பது வாழ்க்கையின் நோக்கமல்ல. ஏதேனும் ஒரு நல்ல நிலையை அடைதல் வாழ்க்கையின் நோக்கமாகும்"
- "தன் கடமையைச் செய்ய மனமில்லாது இருப்பவன் வாழ்ந்து கொண்டிருப்பதைவிட மாய்ந்துபோவதே மேலானது"
- "கெட்ட காரியத்தைச் செய்ய அஞ்சு வேறு எதற்கும் அஞ்ச வேண்டாம்."
- "நன்மை செய்வதால் ஏற்படும் இன்பம் என்றுமே தேய்ந்து போகாது"
- "நண்பர்கள் இல்லாமல் இருப்பது பகைவர்களைப் பெற்றிருப்பதனைவிட மோசம்"



"ஈட்டி முனையால் சாதிக்க முடியாததைக் கூட இதயக் கனிவால் சாதிக்க முடியும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவள விழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

# நியூ சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்

23 (58) பெரிய கடை, யாழ்ப்பாணம்.

நங்கையர் விரும்பும் நவ நாகரீகமான

- பிடவைத் தினிசுகள்
- கூறைச் சேலை வகைகள்
- கைத்தறி பிடவைகள்

போன்றவற்றிற்கு புகழ் பெற்ற ஸ்தாபனம்

# NEW SHANMUGANANDA TEXTILE

23(58) GRAND BAZAAR, JAFFNA.

பவள விழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

# மதுரா நகை மாடம்

**தங்கப்பவுண் நகை வியாபாரம்**

பெண்மைக்கு மெருகேற்றும் இளமைக்கு எழிலூட்டும்

ஓடர் நகைகள் குறித்த தவணையில் 22 கரட்
தங்கத்தில் செய்து கொடுக்கப்படும்.
தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்

**59, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JAFFNA STAR VENUS

## ALUMINIYAM INDUSTRIES

**18A, B.A Thamby Lane, Vannarpannai**
**Jaffna.**

# WESTERN GOLD HOUSE [PYT] LTD

தரமான 22 கரட் தங்க நகைகள் செய்து கொள்ள
நாட வேண்டிய இடம்

உத்தரவாதத்துடனும் நம்பிக்கையாகவும்
உங்கள் விருப்பத்திற்கேற்றபடி செய்து தரப்படும்.

**வெஸ்டன் கோல்ட் ஹவுஸ் (பிரைவட்) லிமிட்டெட்**

270, செட்டியார் தெரு,
கொழும்பு - 1
தொலைபேசி - 324481


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க வரலாற்றுச் சுவடுகள்

செந்நெல் குவியும் செழிப்பு மிகு வயல் நிலங்களால் சூழப்பெற்று இயற்கை எழிலும் இயல்பான வளங்களும் ஒருங்கே அமைந்த அழகிய கிராமம் சங்கரத்தை. கிராமத்தின் இயற்கை அழகினை மெருகூட்டும் வண்ணம் சோலைகளும் சாலைகளும் ஆலயங்களும் அழகு மிகு இல்லங்களும் உப அஞ்சல் அலுவலகமும் பள்ளிக்கூடமும் நீர் நிலைகளும் சங்கக்கட்டிடங்களும் காட்சி தருகின்றன.

சங்கங்கள் சங்கமித்த சங்கரத்தைக் கிராமத்திற்கு சரித்திரச் சான்று பகிர்ந்து இன்று வளர்ந்து வரும் நிறுவனம் இந்து வாலிபர் சங்கம் ஆகும். நிலாவைக்கடைந்து செதுக்கிய சிலையில் நித்திலத்தைப் பதித்தது போன்று இன்று காட்சி அளித்து பவளவிழாக் கோலம் காட்டிநிற்கும் சங்கத்தின் வரலாறு மகத்தானது. மகத்தான வரலாற்றுப் பாதையில் சங்கம் நடந்து கடந்து வந்த அடிச்சுவடுகள் வரலாற்று முத்துக்கள். இந்த முத்துக் குவியல்களில் சில முத்துக்களை எழுத்துக்களால் எழுதி வரலாற்றை வரைந்திட முன் வந்துள்ளோம்.

1926ம் ஆண்டு சித்திரைத் திங்கள் 5ம் நாள் இந்து வாலிபர் சங்கம் சங்கரத்தை மண்ணில் கருவுற்ற திருநாள், பெருநாள் ஆகும். இன வளர்ச்சிக்கு மொழி, மதம் ஆகியன இரு கண்களாக விளங்குகின்றன. மொழி, மதம் வளரும்போது அந்த மொழிக்கும் மதத்திற்குமுரிய கலை கலாச்சாரம் இணைந்து வளர்ச்சிபடையும் என்ற உண்மையை நன்கு உணர்ந்தனர். எங்கள் கிராமத்தில் 1926ம் ஆண்டில் வாழ்ந்த சைவப் பெருமக்கள் சைவமும் தமிழும் தரணியில் தலைத்து ஓங்க வேண்டுமென பேரவாக்கொண்டனர். அவர்களின் பேரவாவினால் முத்தான இந்து வாலிபர் சங்கம் என்ற வித்து எழுபத்தைந்து ஆண்டிற்கு முன்னர் எங்கள் கிராம மண்ணில் ஊன்றப் பட்டது.

வித்து முளையாகி இலையாகிக் கிளையாகி விருட்சமாக வியாபித்து வான் தொடும் வண்ணம் வளர்ந்து வரும் சங்கத்தை நிறுவியவர்களில் முன்நின்று முனைப்புடன் செயலாற்றிய முதல்வர் சமூகத்தொண்டன் ஆசிரியர் அமரர் திருவாளர் ச. வயிரவநாதர். இவரால் நிறுவப் பட்ட சங்கத்தில் இவரே ஆரம்பக் காலம் தொட்டு தலைவராகவும் தொடர்ந்து இறப்பெய்தும் வரை போசகராகவும் இருந்து தன் வாழ்நாளில் பெரும் பகுதியை சங்க வளர்ச்சிக்கு அர்ப்பணித்த பெருந்தகை இவராகும்.

சங்க ஆரம்பகால முற்பகுதியில் சங்க வளர்ச்சிக்கு பெரிதும் உதவியவர்கள், பங்காற்றியவர்கள் வரிசையில் டாக்டர்.சி. செல்லத்துரை, மூதவை உறுப்பினர் எஸ். ஆர். கனகநாயகம், திருவாளர் நாகரத்தினம், திருவாளர்.நா.நடராசா, திருவாளர் இராசதுரை போன்ற பெரியார்கள் குறிப்பிடத்தக்கவராக விளங்கினர். சங்கம் விளையாட்டுத் துறையில் வளர்ச்சியடைய பயிற்சியளித்து பல விளையாட்டு உபகரணங்களை வாரி வழங்கியவர் டாக்டர். சி. செல்லத்துரை அவர்களாகும். அன்னாரின் அடித்தள கட்டமைப்பால் இன்று சங்கம் விளையாட்டுத்துறையில் கால் ஊன்றி நிலைத்து நிற்கின்றது என்றால் இது மிகையாகாது.

மொழி வளர்ச்சிக்கு அறிவு வளர்ச்சி ஆணிவேராக அமைகின்றது. அறிவை வளர்த்துக்கொள்ள, எழுத்துக்களை அறிந்து கொள்ள கல்வி அறிவு பெரும் பங்காற்றி உதவிடும் என்பதைச் சங்கம் தன் வளர்ச்சியின் ஆரம்பகாலப்பகுதியில் உணர்ந்தது. உணர்வு சேவையாக உதித்தது. படித்தவர்கள் இப்பணியை ஆற்ற முன்வந்தனர். இதன் பயனாக இலவசமாலை நேர நடமாடும் பள்ளி மலர்ந்தது. சிலர் வீட்டுத் திண்ணைகள் வரவேற்றன. கல்வி சொல்லிக் கொடுக்கப்பட்டது. இந்நிலையில் கல்வியைச் செம்மையாகப் போதிக்க வித்தியாலயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியம் தேவை என்னும் எண்ணம் வலுப் பெற்றது. சங்கத்தின் கனவை நனவாக்க முன்வந்தார் பெருவள்ளல் திருவாளர் நா. கணபதிப்பிள்ளை (சித்தியவான்) அவர்கள்.

சங்கத்தினதும் சைவ வித்தியா விருத்திச் சங்க ஆதரவும் துணை நிற்க சித்தியவான் அவர்களின் சொந்தக் காணி யில் சொந்தச் செலவில் 1936ம் ஆனித் திங்கள் 26ம் நாள் "சின்னம்மாவின் ஞாப கார்த்த வித்தியாசாலை" கல்விச் சேவை யில் கால் அடி பதித்து முதலடி எடுத்து வைத்தது. சங்க வித்து முளை விட்டு பத்தாம் ஆண்டு நிறைவில் முத்தான சங்க எண்ணம் கல்விச் சொத்தாக விளங்கத் தொடங்கியது. சங்கக் கூட்டங்கள், விழாக் கள் சிறப்புடன் நடாத்த வசதியாக வாய்த் துக் கொண்டது வித்தியாசாலை மண்டபம். ஆரம்பம் தொட்டு இற்றை வரை வித்தியா சாலையுடன் தொடர்புகள் தொடர்ந்து வளர்ந்து வருகின்றது.

மொழியும் சமயமும் ஒரு சமுதா யத்தின் இரு விழிகள். இவை ஆன்மீக பாதைக்கு வழிகாட்டி ஒளியூட்டும். சங்கத் தின் நோக்கங்களில் முதன்மையானதும் இவைதான். இவ்வகையில் நோக்கத்தை நோக்கி பணியாற்றும் சமயப் பணிகள் பற் பல ஆற்றி வருகின்றது. ஆரம்பம் தொட்டு இற்றைவரை இப்புனித பணி தொடர்கிறது. பண்ணிசை வகுப்புக்கள், கூட்டுப்பிரார்த்தனை கள், குருபூசைகள், சமய விழாக்கள் குறிப் பிடத்தக்கவையாகும். கணபதிப்பிள்ளை ஐயா அவர்களால் சங்கரத்தைப் "பிட்டியம்பதி" பால் பக்தி சொட்ட பாடல் பெற்ற பதிகம் - திருவூஞ்சல் பாடல்களுடன், ஆலய வரலாறு உள்ளடக்கப்பட்ட நூல் சங்கத்தால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. முதல் முதலாக இந் நூலினை அச்சேற்றிய பெருமை சங்கத் துக்கே உரித்தாகும். 1939ம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்நூலின் பிரதி இன்றும் சங்கத்தின்பால் உள்ளது. சங்க வரலாற் றுக்கு இது சான்றாக இன்று விளங்கு கின்றது.

மொழியும் சமயமும் முழுமையுடன் வளர்ச்சியுற கலையும் கலாச்சாரமும் அவசியம் பாதுகாக்கப்பட வேண்டும். அவை வளர்க்கப்பட வேண்டும். இச் சிந்தனை சங்கத்தின்பால் தொடக்கத்தில் உதித்தாலும் சங்க வளர்ச்சியின் இருபத்தைந்தாவது ஆண்டு வெள்ளிவிழாக் காலத்தில் வேர் ஊன்றியது. கலையை அங்கத்தவர்களிடம் வளர்க்கும் முயற்சியாக இயல், இசை, நாடகம் ஆகிய துறைகளில் சங்கம் கவனம் எடுத்துச் செயற்பட்டது. இதற்கமைய சங்க அங்கத்தவர்களுக்கிடையில் பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி, கவி அரங்கு, நடனம், நாடகம் ஆகிய போட்டிகள் நடைபெற்றன.

கலை வளர்ச்சியில் சங்கம் பிரகாசித்து நின்ற காலப்பகுதி 1972ம் ஆண்டு தொடக்கம் 1976ம் ஆண்டு வரையாகும். 1972ம் ஆண்டு கூட்டுறவு தின விழா நாடகப் போட்டியில் சங்க அங்கத்த வர்களின் ஆக்கத்தால் உருவாக்கப் பெற்ற "கூட்டுறவு எங்கள் கூடப்பிறந்த உறவு" என்ற நாடகம் 2ம் பரிசையும், அங்கத்தவர் களின் கற்பனையில் உதித்த "கந்தன் நல்ல கமக்காரன்" வில்லிசை முதலாம் பரிசையும் பெற்றன. கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் வண்ணம் அலங்கார ஊர்திப் பவனியை ஆண்டு விழாக் காலங்களில் நடாத்தி வந்தது. இந்த அலங்கார ஊர்திப் பவணி யானது 1972ம் ஆண்டு கூட்டுறவு தினவிழா விலும் 1976ம் ஆண்டு கலையகத்தின் ஆண்டு விழாவிலும் முதற்பரிசைப் பெற்றது.

சின்னம்மாவின் ஞாபகார்த்த வித்தி யாசாலை மண்டபத்தில் சங்கச் செயற் பாடுகளை முன் எடுத்து வந்த சங்கம் 1959ம் ஆண்டு சித்திரைத் திங்கள் 3ம் நாள் மாதர் முன்னேற்றச் சங்கம் மண்டபம் கட்டப் பெற்று திறக்கப்பட்டதால் வசதி கருதிச் சங்கச் செயற்பாடுகள் மாதர் முன்னேற்றச் சங்க மண்டபத்திற்கு மாற்றப்பட்டது.

பொருளாதாரச் சின்னத்தை கடைப் பிடிக்க வேண்டிய பெரும் பொறுப்பு 1948ம் ஆண்டுக் காலப்பகுதியில் சங்கத்திற்கு ஏற்பட்டது. மேலும் வாலிபர்களாக இருந்து செயற்பட்ட அங்கத்தவர்கள் வாலிபப்பருவத் தைக் கடந்துவிட்ட காரணத்தால் கிராம முன்னேற்றச் சங்கம், சனசமூக நிலையங்



"உப்பும் புத்திமதியும் கேட்டால்தான் கொடுக்க வேண்டும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை வழிநடத்தி வந்தார்கள். குறிப்பிட்ட சங்கங்களோடு கூட்டுச் சேர்ந்து இயங்க வேண்டிய தேவை ஏற்பட்டதால் 1948ம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 3ம் நாள் கூட்டாக இயங்கத் தொடங்கியது. ஆயினும் சங்கத்தின் தனித்துவம் உறுதியாகவே விளங்கியது.

சங்கம் கூட்டுறவிலும் தன் உயர்வைத் தனித்துவமாகக் காத்து, வளர்ந்து, பணிகளைத் தொடர்ந்து நடத்தி வந்தது. 1972ம் ஆண்டு வாலிபர்களின் உள்ளங்களில் தன்னம்பிக்கை மேல் ஓங்கியது. பொன் விழா ஊடாக வருகை விளிப்புற வைத்தது. பொன் விழா வருகைக்கு ஐந்து ஆண்டுகள் முன்பே பொன்விழாவைப் பெருவிழா எடுக்க வேண்டும் என்ற உறுதி வாலிபர்கள் மத்தியில் ஏற்பட்டது. தன்னம்பிக்கை உரமூட்ட 1972ம் ஆண்டு பங்குனித் திங்கள் 21ம் நாள் சங்கம் கூட்டிலிருந்து விலகி தனித்துவமாக இயங்க முடிவு எடுத்தது.

1976ம் ஆண்டு பொன்விழாப் பாதை நோக்கி 1972ல் பொற் சுவடுகளைப் பதிக்க தங்களைத் தயார்படுத்தினர் வாலிப உள்ளங்கள். சமய சமூகப் பணிகளில் தங்களை இணைத்து துரிதமாக செயல்பட்டனர். பொன் விழாவின் பொழிவு காணத்துடித்தனர். அடுத்தடுத்து ஆண்டு விழாக்கள் தொடர்ந்து நடந்தது. பொன்விழா எண்ணங்கள் சிந்தையில் விரிந்தது. தன்னம்பிக்கையோடு செயல் படத் தொடங்கினர் சங்க அங்கத்தவர்கள். பொன்விழாத் திருநாள் வந்தது. சங்க வரலாற்றை தொட்டு பெருமையையும், புகழையும் சேர்த்தது.

பொன்விழாத் தலைவராக திரு. ந. சண்முகவேலும் போசகர்களாக திருவாளர். க.வயிரவநாதர், திரு.கா.ச. சற்குணானந்தன் ஆகியோர் வீற்றிருக்க சங்க அங்கத்தவர்கள் மூன்று நாள் பெருவிழாவாக பொன் விழாவை எடுத்தனர். பொருட்காட்சி, அலங்கார ஊர்தி, மெய்வல்லுனர்போட்டி, விவசாயப் போட்டி, இயல் இசை நாடகம் சார்ந்த போட்டி ஆகியன பொன்விழாவையொட்டி சிறப்பு நிகழ்ச்சிகளாக நடத்தப்பட்டது. 1972ம் ஆண்டுக் காலப் பகுதியில் சங்க அங்கத்தவர்களால் மேடையேற்றப்பட்ட

1. இரத்தபாசம்
2. மர்மத்தின் சோதனை
3. விசித்திரப் பிறவி
4. என்றோ ஒருநாள்
5. சாம்ராட் அசோகன்
6. கடமையா - காதலா
7. பாசம்
8. சிறையினுள்ளே
9. நீதிபதி
10. வாக்குறுதி

ஆகிய நாடகங்களும்

11. சீதா கல்யாணம்
12. கந்தன் நல்ல கமக்காரன்
13. அருணகிரிநாதர்
14. ஔவையார்.

ஆகிய வில்லிசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது. இவற்றில் பெரும்பாலானவை சங்க அங்கத்தவர்களின் சுய ஆக்கங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1978ம் ஆண்டு ஆடித்திங்கள் 8ம் நாள் புதிதாக அமைக்கப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்க செயற்பாடுகள் மாதர் முன்னேற்றச் சங்க மண்டபத்திலிருந்து மேலதிக வசதி கருதி கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்திற்கு மாற்றி அமைக்கப் பட்டது. இன்றும் இந்த மண்டபம் சங்கத்திற்கு கைகொடுத்து உதவுகின்றது. குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை சங்கப் பெருவிழாக்களை மந்த நிலைக்குத்தள்ளியது. ஆயினும் சமயப் பணிகளின்பால் பற்றுடைய சங்கம் குருபூசை, நவராத்திரி விழா திருவெம்பா ஓதல் போன்ற பணிகளை நடத்தி வந்தது.

1995ல் இடம்பெற்ற இடம்பெயர்வுகள் சங்கத்தின் பிரதான ஆவணங்களை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. ஆயினும் முன்னாள் அங்கத்தவர் சிலரிடம் இருந்த சில ஆவணங்கள் அந்த இழப்பை சிறிதளவு ஈடுசெய்துள்ளது மகிழ்ச்சிக்குரிய





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயமாகும். சங்கத்திற்கு கிடைக்கப்பெற்ற சில ஆவணங்கள் சங்கத்திற்கு ஊக்கத்தையும் உத்வேகத்தையும் ஊட்டிய காரணத்தால் நாம் இப்போது பவளவிழாவைத் தொட்டு நிமிர்ந்து நிற்கக் கூடிய பலம் இன்று எமக்கு ஏற்பட்டுள்ளது

இன்று வெளிநாடுகளில் குடியேறி வரும் எமது கிராம வாலிபர்கள் தாங்கள் வாழும் நாடுகளில் எமது சங்கத்தோடு தொடர்புடைய கிளைச் சங்கங்களை 1998ம் ஆண்டுக் காலப் பகுதியில் ஆரம்பித்தனர். இதன் பலாபலன் சங்க வளர்ச்சிக்கு மிகச் சிறந்த பக்கத் துணையாக அமைந்து கொண்டது. இன்று அவர்களால் அங்கிருந்து திரட்டி அனுப்பப்படும் நிதி சங்க வளர்ச்சிக்கு உரமாக ஊன்று கோலாக ஆதாரமாக அமைந்துள்ளது. பல மைல்களுக்கு அப்பால் வாழும் அவர்கள் கொண்டுள்ள உணர்வு பூர்வமான பங்களிப்பு பவளவிழாவின் உச்சநிலைக்கு மூலவேராக விளங்குகின்றது என்றால் மிகையாகாது.

இவர்களின் ஆதரவும் அரவணைப்பும் பவளவிழாவை எதிர்கொள்ள மேலும் உற்சாகமூட்டியது. சிறந்த முறையில் சிக்கனத்தை கடைப்பிடித்து சிறப்பான விழாவாக பவளவிழா அமைய வேண்டும் என்ற தீர்மானம் எமக்குள் பிரகடனப்படுத்தப் பட்டதன் பயனாக பவள விழாவின் முன்நிகழ்வுகளாக

1) மரம் நாட்டு விழா
2) நூல் வெளியீட்டு விழா (திருவெம்பாவை உரையுடன்)

விளையாட்டு நிகழ்வுகள்
1) மரதன் ஓட்டம்
2) கிரிக்கட் சுற்றுப்போட்டி

ஆகிய நிகழ்வுகளைப் பாராட்டுப் பெறும் வண்ணம் நடாத்தியுள்ளோம்.

இன்று எமது சங்க வரலாற்றின் நீண்ட நெடிய பயணத்தைத் தொடர்ந்து தொடரப்போகும் வாலிப உள்ளங்கள் கற்பக தருவாம் பனையுடன் நெற்கதிர் மணிகளையும் இடபத்தையும் சங்க இலச்சனையில் பதித்து மகத்துவமான சங்கக் கொடி பட்டொளி வீச புதிய வரலாறு படைக்க விரும்பும் நாம் மலருள் கலந்து வீசும் மணம் போல் பலருள் ஒருவராய்க் கலந்து மகிழ்ந்து எதிர்கால வரலாறு சிறக்க இவ் வரலாற்றினை வணங்குவோம்.

**செல்வன் வி. சுஜிகரன்**
*(செயலாளர்)*

**பொன்மொழி**

நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லாம் உண்டு. நம்பிக்கை இல்லாதவனுக்கு ஒன்றுமே இல்லை. நாமத்தில் நம்பிக்கையே பல ஆச்சரியமான சாதனைகளை ஆக்குகின்றது. நம்பிக்கையே பிராணன். சந்தேகமே அழிவு, நம்பிக்கை கொள். கடவுளை நம்பி இரு. ஆண்டவன் வேண்டும் என விரும்புகின்றவன், ஆண்டவனை அடைகின்றான்.

– ஸ்ரீ ராமகிருஷ்ணர் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவள விழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

# SowmiyaTex

Specialists in:
Wedding Sarees, Salwar Kameez and
Ladies, Gents & Children Wear

4, Grand Bazaar Street, Jaffna.

சௌமியா ரெக்ஸ்

4, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.

பவள விழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

ராகம்ஸ் பட்டுச்சோலை

நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

உங்கள் இல்லங்களில் இடம் பெறும் சிறப்பு நிகழ்வுகள்
சிறப்புமிக்க ஆடைத் தெரிவு அவசியம்
- ஆதலினால் -
ராகம்ஸ் தேடி தேர்ந்திடுவீர் கோடி!
ராகம்ஸ் தேடிப்போய் மகிழ்ந்திடுவீர் கூடி!!
முகூர்த்தப் பட்டுப்புடவைகளுக்கு
பெயர் பெற்ற ஸ்தாபனம்

RAAHAMS
PADDUSOLAI

24, NEW MARKET, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவள விழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

# Kanesan Stores

முகூர்த்தப் புடவைகள்

கூறைச்சேலைகள்

பட்டு வேட்டிகள்

## கணேசன் பட்டுச் சோலை

(மொத்த சில்லறை வியாபாரம்)

201, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்.

பவள விழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

# VELE TRADE CENTRE

Paint, மற்றும் எனாமல் Paint, Water pump, Tinner, மற்றும் Land Master என்பவற்றை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்

**VELE TRADE CENTRE**

114, STANLEY ROAD,

JAFFNA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க நிதிவளம்

ஏற்றமிகு எழில் தரும் இயற்கை வளங்களால் சூழப்பெற்ற சங்கரத்தைக் கிராமம் சங்கங்கள் அமைத்து சமூகப் பணியாற்றி போற்றும் வண்ணம் சிறப்புற விளங்கி வருகிறது.

இற்றைக்கு முக்கால் நூற்றாண்டிற்கு முன்னர் ஆன்மீக நெறியை எமது கிராம வாசிகள் மத்தியில் குறிப்பாக இளம் சிறார்களின் உள்ளத்தில் வேரூண்ட வேண்டும் என்னும் பெரும்நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட சங்கம் இந்து வாலிபர் சங்கமாகும்.

இன்று இச்சங்கமானது தன் இலட்சிய நோக்கில் தடைகளை தகர்த்து வெற்றி நடைபோடுகிறது. இந்த வெற்றியின் அடையாளச்சின்னமாக அகவை எழுபத்தைந்து மிளிர்கிறது. இத்தகைய பெருமைமிகு சங்கமானது ஆன்மீகநெறியை வளர்ப்பதில் மேலோங்கி நின்றாலும் சங்க நிதிவளமானது சங்கம் நிறுவப்பட்ட காலம் தொட்டு திருப்திகரமானதாக இல்லை.

இன்றைய சூழலில் எவ்வகை நிறுவனமாயினும் சேவை மனப்பாங்குடன் மதிவளம் நிறைந்து விளங்கினும், நிதிவளம் குன்றிய நிலை தோன்றின் தன் இலட்சிய நோக்கை முன்னெடுத்து செயல்படுவது கடினமான செயலாகும்.

ஆன்மீக பலத்தை அடையும் மார்க்கங்களை போதிப்பதற்கோ அன்றி தொடர்பு சாதனங்கள் வாயிலாக அறியத்தருவதற்கோ நிதிவளம் தேவை.

எமது சங்க நிதிவளம் போதுமானதாக இல்லாது இருந்தபோதும் நாம் எமது சமய சேவையினையும் சமூக சேவையினையும் கைவிடவில்லை. நவராத்திரி பூஜையும், திருவெம்பாவை போட்டியும் எமது சங்கத்தால் தொடர்ந்து நிகழ்த்தப்பட்டன. அத்துடன் எமது சங்கரத்தை கரந்தைக்குள முருகன் கோவில் பத்திரகாளி கோவில் மற்றும் வைரவர் கோவில் விசேட தினங்களில் நாம் எம்மால் இயன்ற சரீர உதவியினையும் வழங்கி வந்தோம்.

எமது நாட்டில் நிலவும் போர்த் தாண்டவம் எமது கிராமத்தையும் விட்டுவைக்கவில்லை. நாமும் இடம்பெயர்ந்தோம். மீண்டும் எமது கிராமத்திற்கு நாம் திரும்பிய போது எமது ஆவணங்கள் யாவும் அழிந்தும் காணாமலும் போயிருந்தன. நாம் எம்மிடம் இருந்த சொற்ப பணத்தையும் பயன்படுத்தி மற்றும் பெரியவர்களிடமும் கடனாக நிதியுதவியும் பெற்று கிராம அபிவிருத்தி சங்கத்துடன் இணைந்து கதிரை கொள்வனவு செய்து அதனை வாடகைக்கு விட்டு அதில் வரும் வருமானத்தில் எமது சங்க நிகழ்வுகளை நிகழ்த்தி வந்தோம். அத்துடன் வருடம் தோறும் பத்திரகாளி கோவில் திருவிழாவில் சைக்கிள் பாக் அமைத்து அதில் வரும் தொகையையும் பயன்படுத்தினோம்.

அத்துடன் இப்பணத்தை பயன்படுத்தி எமது கிராமப்பாடசாலையான சின்னம்மா வித்தியாசாலையில் நிகழும் பரிசளிப்புவிழா, விளையாட்டுப்போட்டி போன்ற நிகழ்வுகளுக்கும் உதவிவந்தோம்.

நாம் எமது சங்கத்தின் பவளவிழாக் காணும் இவ்வாண்டில் பவளவிழாவையொட்டி மரம்நாட்டல் விழா "திருவெம்பாவை பாடல் உரையுடன்" புத்தக வெளியீடு, துடுப்பந்தாட்ட போட்டி, மரதன் ஓட்டப்போட்டி மற்றும் பவளவிழா புத்தக வெளியீடும் இயல் இசை நாடக விழாவும் நடத்தத் தீர்மானித்துள்ளோம்.

இப்பவளவிழாவையொட்டி இந்நிகழ்வுகளை நடத்தவும் எமது சங்க வளர்ச்சிக்கும் என எமக்கு பொருளுதவியும், நிதியுதவியும் அளித்த எமது கிராமத்தின் அன்பு உள்ளங்களுக்கும் பிறநாடுகளில் இருந்தாலும் எமது கிராமத்தையும் எமது வாலிபர் சங்கத்தையும் நேசித்துக் கொண்டிருக்கும் எமது சங்கத்தின் பழைய அங்கத்தவர்களுக்கும் அபிமானிகளுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் தொடர்ந்து எமது சங்கமானது இன்றைய சிறார்களே நாளைய சமுதாயம் என்பதற்கிணங்க எமது ஊர்ச் சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் சமூக சமய மேம்பாட்டிற்கும் உழைத்து எமது கிராமத்தினை முன்னேற்றப்பாதையில் நகர்த்த எம்முடன் சேர்ந்து நீங்களும் தோள் கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் ......

பொருளாளர்
**இ. குமரேஸ்**



"சிறிய உதவியேனும் ஏற்றகாலத்தில் செய்தால் அது மிகப் பெரிதாகும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய நெறியில் இளைஞர் பணி

சங்கரத்தை இந்து வாலிபர் சங்கத்தின் 75வது ஆண்டு நிறைவு விழா சிறப்புற வாழ்த்தி, அவர்களும், சார்ந்த சமூகமும் சமய உணர்வும் உயர்வும் பெற்று வாழ முதலில் ஆசீர்வதிக்கின்றோம்.

பாரம்பரியச் சிறப்பு, சைவத்தின் சீரிய அன்புநெறி ஆகியவற்றின் நிருபண நிலைகளாகவும், நீடிக்கும் கலாச்சார மரபின் தொடர்பாளராகவும் விளங்குபவர்கள் இந்து இளைஞர்களேயாகும். கால மாற்றத்திற்கும், கற்றவர் காணும் கருத்து மாறுதல்களுக்கும் நவீனயுக விஞ்ஞான வளர்ச்சிகட்கும் ஈடுகொடுத்து வாழ்ந்து தாம் சார்ந்த சமய, சமூக பண்பாட்டுக்கு அமைய நின்று அவற்றில் பற்று நிறைந்து பேணி அவை காட்டும் நெறிகள் வழிப்படி பணி செய்வது இளைஞர் பணியாகும்.

"வேற்கண் மடவார் விழைவொழிய யாம் விழையக்
கோற்கண் நெறிகாட்டச் சொல் கூற்றுழையதாக!
நாற்பதிகந்தா நரைத்தூதும் வந்ததினி
நீத்ததுணிவா நிலையாதிளமையே"!!

என வளையாபதி பாடல் படி வயதாகி அனுபவக் களைப்பு வந்து இளமை நிலையாது என மூப்பிலே உணர்ந்து தவமும், அறமும் நினைத்தல் போதாது. அதுவும் வேகமாக வளர்ச்சியும் மாறுதலும் நிகழும் உலகில், இளமையிலேயே இச்சீரிய பண்புகளைப்பேணி சமயநெறி நின்று, சமூக நலன் காத்து வாழ்வது இன்றைய இளமையின் அவசியத் தேவையாகும். இல்லையெனில் எமது சமய, சமூக கட்டுப்பாடுகளும், வாழ்க்கையின் செம்மைப்பாங்கும் காக்கப்படாது மாறுபாடடைந்துவிடும். சமய சமஸ்திரங்களும், புராண திருமுறைகளும் பண்பமைய இளைஞர்பாற் செறியாதுவிடின் ஆலய கட்டிடங்கள் கோபுராதி கலாச்சார சின்னங்கள் வெறும் புராதன கட்டிடங்கள் என மட்டுமே ஆகிவிடும். ஆகவே தான் சமய வளர்ச்சி பற்றி தொன்றுதொட்டு இளமையுடையாரே அதிகமாக ஈடுபட்டார்கள். திருமுறை தந்த ஞானசம்பந்தர், சண்மத ஸ்தாபகர் சங்கரர், நாயன்மார்களில் சுந்தரர், நம்பியாண்டார், சண்டேஸ்வரர், கண்ணப்பர், நீலகண்டர் ஆகியோர் இளமையிலேயே

"இலகு சுடர் விசுவநாதற்கிளையாங்கடவுள்
உலகமொரு மூன்றினுமிலையீ துண்மை
உண்மையே"

என்று காசிகாண்டம் கூறிய வாக்கிற்கமைய வாழ்ந்து சைவத்தின் செம்மைநெறி பரப்பியவர்கள் ஆவார். அவ்வழியே யாழ்ப்பாணத்து நாவலர் பெருமானும் சைவம் நிலைதடுமாறி நின்றவேளை இளமையிலேயே நிதானமாக செயற்பட்டு சமய வளர்ச்சி செய்த பெரியாராகி புகழ்பெற்றவர். ஒவ்வொருவருடைய இளமைக்காலம் கல்வியாலும், ஒழுக்கத்தாலும் பூரணத்துவமடைகிறது. கல்விக்கண் எனப்படுவது இளமையிற்கல் என்பது ஔவை வாக்கு. அறிஞர் லெனின் எதிரியின் படையில் நூறு வீரர் இருப்பதிலும் தீது தருவது எமது சமூகத்தில் ஒரு இளைஞன் ஒழுக்கமின்றி இருப்பதாகும் என ஒழுக்கத்தின் பெருமை பற்றி சொன்னார். திடமான செயற்திறனே உயர்வுக்கு வழி செய்கிறது. அதுவே அவரது புகழுக்கு அத்திவாரமாகின்றது. கலிபோனியாவில் சுவாமி விவேகானந்தரிடம் நூற்றி அறுபது ஏக்கர் ஜன சஞ்சாரமில்லாத காட்டுநிலம் கையளிக்கப்பட்டது. சுவாமிகள் தீவிர விடாமுயற்சியால் சில மாதங்களிலேயே சாந்தி ஆச்சிரமம் என்று பெரிய தர்ம ஸ்தாபனமாகி இன்றும் பணியாற்றி அறம் வளர்கிறது. உழைப்புக்கிடையவர் தன்னையும் சார்ந்தவற்றையும் உயர்த்தும் சிறப்புப்பெறுகின்றார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கமுடமை எனப்படுவது தெளிவின் நிறைவாகும். அடக்கம் அமரருள் உய்க்கும் என தேவநிலைக்கு உயர்த்துவதாகும். இளமைக்கும் அழகு தரும் ஆபரணம் அடக்க முடமையாகும். அடக்கமின்மை அழிவைத் தரும் அடக்கம் அரசோச்சச் செய்யும் என்பது நீதி வாக்கியம். இளமையிலே இப்பண்பியல்புகள் வேண்டுமென்றே முருகன் முதலான தேவர்களையும் என்றும் இளைமை யோடு எமக்கு காட்டி வழிப்படுத்தினார்கள். சைவசமய அனுஷ்டானங்களையும் விழாக் கள் விரதங்கள் முதலியவற்றை அமைத்துள் ளார்கள். தற்கால இளைஞர்கள் கல்வி உயர்வுடன் பலநாடுகளிலும் சென்று ஆலயங் கள் அமைத்து தமிழ் பாடசாலைகள் அமைத்து, கலாசார நிகழ்வுகள் செய்து எமது தமிழ் பாரம்பரிய சிறப்பை வளர்த்து வருகின்றனர்கள். இங்கும் உள்ள இளைஞர் கள் பல நற்பணிகள் செய்து வருகின் றார்கள். இவை தாய், தந்தை பேணுதல், குரு ஆசிரியர் பெரியோர் பேணுதல், நாடு, மொழி, சமூகம் பேணுதல் ஆகிய நல்லி யல்பை ஏற்படுத்துவனவாகும். இவை நின்று மாறாது வாழ்ந்து எம்மையும் உயர்வு படச்செய்து அனைவருக்கும் பெருமை பெற வாழ்வது இளைஞர்கள் கடனாகும் எனக் கூறி இந்து இளைஞர் மன்றத்தின் ஆண்டு நிறைவு எமது சமய கலாசாரச் சிறப்பு என மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகிறோம்.

முத்தமிழ் தருமணி
**பிரம்மஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்**
(கதிரமலை சிவன் கோவில்)

☞ நாளைய வாழ்க்கை இதுதான் என்று இன்றே தெரிந்துவிட்டால் மனிதர்கள் உஷாராகி விடுகிறார்கள். மனிதர்கள் உஷாராகி விட்டால் கடவுள் இயக்கம் செயலற்றுப் போகும் ஆகவே தான் சில விஷயங்களை ஆண்டவன் ரகசியமாக வைத்திருக்கின்றான்.

☞ எளிமையும் அடக்கமும், வாழ்க்கையில் பிடிப்பும், தெய்வ நம்பிக்கையும் அதேசமயம் விஞ்ஞான ரீதியான அறிவும் கொண்டிருக்க வேண்டும். அத்தகைய பெண்மணியே சிறந்த இல்லத்தரசியாக வெற்றிகரமான தாயாக விளங்க முடியும்.



"முடியும் என நம்புவோருக்கு எதுவும் முடியும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரதங்கள் மனித வாழ்க்கையை ஆன்மீகநெறியில் வழிப்படுத்துகின்றன

விரதம், நோன்பு, கிழமை என்பன ஒரே பொருள் உடையன. எல்லாச் சமயங்களிலும் விரதங்கள் இருக்கின்றன. சைவ சமயத்தில் அனேக வகையான நோன்புகள் இருக்கின்றன. எல்லாவற்றையும் ஒருவர் அநுட்டிக்க வேண்டும் என்பது கட்டாயம் அல்ல. மக்கள் பல நிலைகளை உடையவர்கள். அவரவர்கள் பக்தி, வசதி, விருப்பம், பொருள், இடம், காலம், பருவம் முதலியன் நோக்கி விரதம் பலவாயின.

விரதங்களை திடசித்தமின்றி பெயருக்கோ புகழுக்கோ மற்றவர் கட்டாயத் துக்கோ மேற்கொள்ளக் கூடாது. அப்படி மேற்கொண்டால் தேக இளைப்பு, மனச் சோர்வு, கடவுள் பேரில் வீண்பழி, நோய் முதலிய தீமைகளைச் சம்பாதிப்பதற்கு ஏது வாகும். "இயல்பாதன செய்யேல்" என்பது மூதுரை.

விரதமாவது மனம் பொறி வழிப் போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு வழிபடுதல் என ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் விரதத்திற்கு வரைவிலக்கணம் கூறியுள்ளார். நோன்பென் பதுவே கொன்று தின்னாமை என்பது நீதி வாக்கியம். சைவ சமயத்தின் முதல் விரதம் இது தான். இவ்விரதம் ஒன்றையே கடைப் பிடித்தாலும் போதும். விரதம் இறைவனை நோக்கி நாம் செய்யும் தவத்தின் ஒரு கூறு. தனக்கு வரும் துன்பங்களை தாங்கிக் கொள்ளுதலும் பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமையுமே தவத்தின் வடிவமாகும் என்பது திருவள்ளுவரின் திருவாக்கு ஆகும்.

"உற்றநோய் தோன்றல் உயிர்ச்சிறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்குரு"

1. உள்ளம்
2. உடல்.
3. வாக்கு

என்ற மூன்று விதமாக விரத நோன்புகள் உண்டு. அகிம்சை (இன்னா செய்யாமை), சத்தியம் (வாய்மை), கள்ளாமை, பிரமச்சரியம் (புலனடக்கம்), நேர்மை என்பவை மனத்தாலான விரதம். ஒருவேளை இறைவன் பிரசாதம் சாப்பிட்டோ முற்றிலும் சாப்பிடாமலோ, இரவு தூக்கமில் லாமலோ இருப்பது உடம்பாலாகிய விரதம். மௌனம், இன்சொல் கூறுதல், உண்மை சொல்லல் இவை வாக்கலாகிய விரதம் ஆகும்.

நோக்கங்களின் அடிப்படையிலே நித் திய, நைமித்திய, காமியங்களாக விரதத்தை வகுத்து உள்ளனர்.

1. புண்ணியம் தேடுவதற்காக ஏற்றுக் கொள்ளப்படும் ஏகாதசி முதலிய விரதங்கள் நித்திய விரதம் எனப்படும்.
2. பாவமன்னிப்பிற்காக நோக்கப்படும் விரதங்கள் சாந்தி பாராயணம் முதலிய விரதங்கள் நைமித்தியம் என்று கூறப்படும்.
3. இன்பம், செல்வம் முதலியவற் றுக்காக நோக்கப்படுகின்ற சாவித் திரி, சோமவார விரதங்கள் காமிய விரதங்கள் எனப்படும்.

தவம், யாகம் முதலியன எல்லா மக்களுக்கும் கைகூடும் நெறிகளாக அமை யாதன. அதாவது இலகுவில் பின்பற்று வதற்கு கடினமானதாக தோன்றியமையால் எளிமையுடனும் பக்தியுடனும் கூடியதான விரத கிரியைகளை இதிகாசங்களும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணங்களும் அறிமுகப்படுத்தி வந்தன. தவமும் யோகமும் காட்டில் கை கூடுவதாக கூறப்பட்ட அக்காலத்தில் விரதங்கள் வீட்டில் கைகூடுவதாக கூறப்பட்டது. விரத முறைகள் புதியதொரு வழிபாட்டு முறையாக ஆரம்பிக் கப்பட்டபோதும் அதன் அடிப்படையில் ஒழுக்கநெறியும் கட்டுப்பாடுமே தொடர்ச் சியாக வேரூன்றி, விரதக் கிரியைகளின் அனுட்டான விதிகள் நன்கு புலப்படுத்து கின்றன. ஆகமங்கள் விதிகளையும் வகைப் படுத்திக் கொடுத்தன. இதிகாச புராணங் களைத் தவிர விரத சூடாமணி, ஹேமத்திரி, சதுர்வாக்கிய சிந்தாமணி என்பன விரத நெறிகள் பற்றி சிறப்பாக கூறுகின்றன.

விரதத்தின் மூலம் உடல், உள்ளம், ஆன்மா ஆகிய யாவும் தூய்மையும் உறுதி யும் அடைகின்றன எனலாம். ஒரு விரதத்தை ஆரம்பிக்க முன்பு "இன்ன நோக்கத்திற்காகவும் இன்ன முறைப்படி இவ்வளவு காலம் இந்த விரதத்தை அனுட் டிக்கப் போகிறேன்." என்று உறுதியாக தீர்மானம்செய்து, ஆலயம் சென்று, சங்கல்ப பூர்வமாக அர்ச்சனை வழிபாடுகள் செய்து ஆரம்பிக்க வேண்டும். குறிப்பிட்ட கால எல்லைவரை மாற்றமின்றி அவ்விர தத்தை ஒழுங்காகக் கைக்கொள்ளல் வேண்டும்.

இந்துக் கடவுள்கள் அனைவருக்கும் விரத முறைகளை அனுட்டிக்கும் பாரம் பரியம் இந்து சமயத்தில் புராதன காலம் தொட்டு நிலவி வருகின்றது. கடவுளை வணங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள கிரியை முறைகளில் விரத கிரியைகளும் ஒன்றாகும். விரத என்ற சொல் ரிதம் என்ற வடமொழிச் சொல்லுடன் நெருங்கிய தொடர்புடையதாக விளங்குகிறது. ரித என் றால் ஒழுங்கு நெறியை நிலை நாட்டுதல் என்ற பொருளில் வேதங்களில் கையாளப் பட்டுள்ளது. இயற்கை ஒழுங்கு ஒரு கட்டுப் பாட்டிற்குள் இயங்குவது போல மனித வாழ்வும் ஒரு ஒழுங்கு, கட்டுப்பாட்டிற்குள் இருத்தல் அவசியம் என சமயங்கள் யாவும் கூறுகின்றன. மனிதர்களும் ஒழுக்கம் என்ற கயிற்றினால் கட்டி வைத்திருப்பதற்கான ஒரு நெறியினை விளக்கவே விரத கிரியைகளும் இந்து சமயத்தில் அமைந்திருக்கின்றன. விரதம் மனக்கட்டு என்பதனைச் செயற் படுத்தும் ஒரு சாதனமாக இந்து சமயத்தில் பயன்படுத்தப்படுகின்றன எனலாம்.

எக்காலமும் பிரியாது கடவுளுடன் நெருக்கமாக வசிக்கின்ற பக்குவத்தைத் தருவது உபவாச நெறி எனக் கூறப்படும். உணவைக் கட்டுப்படுத்துவதன் மூலம் உள்ளத்தில் ஆன்மீக வளர்ச்சி பெற்று பிரமம் எனப்படும் பரம்பொருளுடன் இரண் டறக் கலப்பதை உபநிடதங்களும் தத்து வங்களும் தத்துவரீதியில் கூறுகின்றன. எப்போதும் ஆலயத்திலே அமர்ந்து தியா னத்திலே ஆழ்ந்து போவதற்கு உபவாச நிலையில் அதிக வாய்ப்புக்கள் கிடைக் கின்றன. ஊணுறக்கம், தன்னிறைவு இன்றி இறை சிந்தனையில் தம்மை ஆழ்த்திக் கிடத்தலே உபவாச நிலையில் நிகழ்கின் றது. உபவாச நெறி 24 மணி நேரமும் கடவுளை அடைவிக்க வழி காட்டுகிறது. இத்தகைய நெறியினைக் காட்டுகின்ற விரதங்களுக்குச் சிறப்பாக சிவராத்திரி, கந்தசட்டி, வைகுண்ட ஏகாதசி, நவராத்திரி என்பன சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். நோன்பு உடலை வளர்ப்பது. பட்டினி உடலைத் தேய்ப்பது. ஞானியரது உடலும் ஆரோக்கியமாக விளங்குவதற்கு நோன்பே காரணம்.

காரணம் தெரியாமல் உண்டாகும் துன்பங்கள், தொல்லைகள் எல்லாவற்றிற் கும் தமது பிறவி தெரியாத காலத்திலே செய்த பாவங்கள் காரணமாக ஒரு கரும சுழற்சியை பிறவிப்பிணியை நீக்கவும் நிவாரணம் தேடவும் கூட விரத கிரியைகள் ஒரு கருவியாக மக்களால் பயன்படுத்தப் பட்டு வந்தன. விரதங்களின் அடிப்படைக் குறிக்கோள் பாவ நீக்கம், பாச நீக்கம், நோய் நீக்கம், வறுமை நீக்கம், நினைத்த காரிய சித்தி என்பவற்றை அடைதற்காகவே என்பதனைப் புராண வரலாறுகளில் இருந்து அறிய முடிகிறது. விரதங்களுக்குரிய நியமங் களை தவறி அனுட்டித்தாலும் விரத பலன் கிடைக்காமல் போகலாம். நியம நிட்டை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடன் அனுட்டித்த பின்பும் பலன் கிடைக்கவில்லை எனில் மனிதனது பூர்வ வினை அவனது விரதத்தை விடவும் அதிக பலன் உடையதாக இருக்க வேண்டும் என்றே தீர்மானிக்க வேண்டும். இதன்படி ஒருவரது கன்மநோய் தீருவதற்கான சாதாரண வழிபாடு சோர்க்கப்பட்டுள்ளதாக வேண்டும். நியமங்களுடன் சங்கமம் செய்து கொண்டு அனுட்டிக்கின்ற செயலாக விரத கிரியைகள் விளங்குகின்றன. ஆதலால் மனிதன் தனது எண்ணத்தை ஈடேற்றுவதன் பொருட்டு பிடிவாதத்துடன் இருந்து இறை வனைக் கொண்டு அக்கருத்தை நிறை வேற்றிக் கொள்ளும் கிரியைகளாக விரதம் அமைகின்றது எனலாம்.

விரதங்களை மேற்கொள்வதனால் நியாய உணர்வினை மீறி எழுகின்ற பொறாமை, அவாவின்மை, கொல்லாமை, வாய்மை உணர்ச்சிகளை வெல்லுதல் முதலான பண்புகள் மனிதரிடம் வேரூன்றி வளரவும் ஏதுவாகின்றன. ஏனெனில் விரத நெறிகள் சாதாரண மக்களை ஆன்மீக வாழ்வுக்கு இலகுவான பயிற்சி அளித்து கருவிகளாகவே பயன்படுத்துகின்றன. விரத நெறிகளின் ஆரம்ப வளர்ச்சியினையும் அது பொதுமக்களிடையே பின்பற்றப்படும் நிலை யினையும் அவதானிக்கும்போது விரதமாவது உண்மையிலே நாம் நினைத்தவற்றை உள்ளவாறு முடித்துக்கொள்ளும் வகையில் மேற்கொள்ளும் முயற்சியைக் குறிக்கும். வைராக்கியம், சபதம் எனும் ரீதியில் செயல் படுவதாகவும் உள்ளது. எதனை வாழ்வில் சாதிக்க வேண்டுமோ அதனை சாதிப்பதற் காக எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் யாவும் விரதம் அல்லது சபதம் என்ற பெயரிலே கூறப்படுகின்றன. சீதை சிறை யிருந்த காலத்து மேற்கொண்டு ஒழுகியது கற்பெனும் விரதம் ஆகும்.

விரதத்தினால் மனம் எவ்வாறு தூய்மை அடைகின்றதென்பதை சிறிது நோக்குவோம். நாங்கள் வாழும் பிரபஞ்சம் சாத்வீக, இராசத, தாமதமென்னும் முக்குண வடிவாயிருக்கின்றதென அறிஞர் கண்டனர். சாத்வீக குணத்திற்கு மோட்ச விருப்பமும் அமைதியும், இராட்சத குணத்திற்கு உலக விருப்பமும் உற்சாகமும் தாமத குணத்திற்கு தீய வழியில் செல்லுதலும் மயக்கமும் இயற்கைக் குணங்களாய் இருக்கின்றன. இக்குணங்கள் உணவுப் பொருட்களிலும் செறிந்திருக்கின்றன. எனவே மனதை ஒரு வழிப்படுத்த விடாத தாமத, இராட்சத குண உணவுப் பொருட்களை நீக்குதல் வேண்டும். தாவரப்பொருட்களிலும் உள்ளி, வெள்ளுள்ளி, அத்தி, செம்முருங்கை, வள்ளி, பசளை, கொவ்வை, வெண்கத்தரிக்காய், எண்ணைப் பிணாக்கு, பெரும் பீர்க்க என்று சொல்லப் படும் இவைகளை உண்ணக் கூடாது என்று சைவநெறி எனும் நூல் விதித்துள்ளது. ஆயுள், புத்தி, பலம், ஆரோக்கியம், காசம், விருப்பம் இவற்றை வளர்ப்பனவும் இரச முடையனவும், பச்சை உடையனவும் உர முடையனவும் இன்பமளிப்பனவும் ஆன உணவுகள் சாத்வீகர்களுக்கு விருப்ப மானவை. கசப்பு, புளிப்பு, உப்பு, கடுஞ்சுடு, காரம், உவர்ப்பு, எரிப்பு முதலிய குணங் களுடையனவும் துன்பம், துயர், பிணி இவற்றைத் தருவனவுமாகிய உணவுகள் ராசிகர்களுக்கு பிரியமானவை. சமைத்து ஆறிப் போனதும், சுவையிழந்ததும் புளித்துப் போனதும், பழையதும், பூசைக்குதவாததும் ஆன உணவு எதுவோ அது தாம் ரசிகர் களுக்குப் பிரியமானது என்று பகவத்கீதை சுட்டிக் காட்டுகிறது. உணவுகளின் மூலம் மனம் தூய்மை அடைந்து மனிதனை ஆன்மீகத்துக்கு இட்டுச் செல்கின்றன.

தாமச, இராசத குணங்கள் கலவாத சுத்த சாத்விக குணமே கடவுளைத் தியானம் செய்வதற்கு உகந்தது. இதனை சிதம்பரத் தில் நடராஜப் பெருமானைச் சுந்தரமூர்த்தி நாயனார் எவ்வாறு தரிசித்தார் என்பதனை சேக்கிழார் பின்வருமாறு அழகாக கூறியுள்ளார்.

ஐந்துபேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்து விகமே யாக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துவாழ் சடையான் ஆடும்ஆனந்த
எல்லையில்
தனிப்பெருங் கூத்தின் வந்த பேரின்ப
வெள்ளத்துள்
திளைத்து மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

உண்டி சுருங்குதலும் சாத்துவிகமான உணவு உட்கொள்வதுமே விரதங்களின் பிரதான அடிப்படைகளாகும்.

மனம், மொழி, மெய் ஆகியவை களால் அனுட்டிக்கப்படும் விரதங்கள் சமய வளர்ச்சிக்கும், ஆன்மீக ஒருமைப்பாட்டிற்கும் அடிப்படையாகின்றன. ஆன்மீக ஞானம் பெற விரதம் அவசியம். மனிதனை இறைவனுடன் ஒன்றிவிடச் செய்தலே விரதத்தின் அடிப்படை நோக்கம் ஆகும். இங்கு மனம், மொழி, மெய் எனும்போது மனத்திற்கே முதலிடம் கொடுக்கப்படுகிறது. ஏனெனில் எல்லாவகைச் செயல்களுக்கும் மனம்தான் காரணம். மனம் பொறி வழிப்போகாது அடக்குவதே சாதனை ஆகும். "உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்று ஈசன் உவக்கும் இன்மலர் மூன்று என்ற பாடலில் முத்தமிழ் வித்தகர் *விபுலானந்தர் கூறுகிறார். ஆண்டவன் விரும்பு* வது உள்ளமாகிய தாமரையைத்தான்.

இந்துசமயத்திலே உலகியல் நன்மை கருதி அனுட்டிக்கும் விரதம், ஆன்மீக ஈடேற்றம் கருதி அனுட்டிக்கும் விரதமென இருவகைப்படுத்தினால் சக்தி, முருகன், விநாயகர், திருமால் என்போருக்குரிய விரதங் கள் உலகியல் நன்மை கருதுவனவாகவும் *சிவனுக்குரிய விரதங்கள் பேரின்பப்பேற்* றினை நல்குவனவாகவும் உள்ளன. உலகி யல் சூழல்களால் கடவுள் வழிபாடு எனும் மேலான உண்மைகளை நியமங்களை கணந்தோறும் கடைப்பிடிக்க முடியாதவர்கள் வருடத்தில் சில நாட்களேனும் விசேட முறையில் இறைவழிபாட்டில் தம்மை ஈடு படுத்துவதற்கு விரதங்கள் அதி எளிமை யான சாதனங்களாக விளங்குகின்றன. விரத நெறிகளை அது கூறுகின்றன. விரத நெறி களை அது கூறுகின்ற நெறிகளின்று அனுட்டிக்க முடியாதவர்கள் நேர்மை, வாய்மை, செயல், தூய்மை, கடமை உணர்வு இவற்றிலே நின்று முறைப்படி அச்செயல்களை நிறைவேற்றுவதன் மூலமாக சத்திய விரதம் மேற்கொண்டொழுகுவது மிகவும் மேலானதாக கூறப்படும். சத்திய விரதத்தை பின்பற்றுபவர்கள் விரத அனுட் டானங்களை மேற்கொள்ளாமலே விரத பலன்களை அடைய இந்த வழி கூறப்படுகின்றது.

நாகரிகத்திலும் பண்பாட்டிலும் ஒழுக்க நெறியிலும் தலைசிறந்தவர்களாக தமிழர் வாழ்ந்தனர். புராதன காலந்தொட்டே கடவுள் வழிபாடும் சமய சடங்குகளும் விரதங் களும் அவர்கள் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்தன. எனவே விரதங்கள் மனித வாழ்க்கையை ஆன்மீக நெறியில் வழிப்படுத்துகின்றன எனக் கூற முடியாது.

நீ இறைவனிடம் கருணை பெற வேண்டுமானால் அதற்கு வழி ஒன்றுண்டு. அதுவெறும் வணக்கமும் வழிபாடும் மட்டுமன்று.. துன்பமுற்றுத் துடிக்கின்ற உயிர்களிடம் நீ கருணை செய். அவைகளின் துன்பத்தை நீக்கு. நீ பிற உயிரிடங் கருணை செய்தால் கடவுள் *உன்னிடம் கருணை செய்வார். கருணையால் கருணையைப் பெறலாம்.* இதனை ஒருபோதும் மறவாதே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவம் பேசும் வாழ்வியல்

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என மகாகவி பாரதி இறும்பூதெய்தக் காரண மாயிருந்த "திருக்குறள்" தமிழ் வேதம் என்றும், "உலகப் பொதுமறை" என்றும் கொண்டாடப்படுகிறது. இது தமிழுக்கு கிடைத்த அரிய பொக்கிஷமாகும். திருக் குறள் அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பொருளையும் பேசி வீடுபேற்றிற்கான வழியை உணர்த்துவது. இம்மைக்கும் மறுமைக்குமான உபாயங்களைப் பேசுவது. குறள் கூறாத விஷயமில்லை. குறளைப் பேசாத தமிழரில்லை. "கடுகு சிறிது காரம் பெரிது" என்போருக்கு வகை மாதிரியாய் வாய்த்தது ஒன்றரை அடிக் குறளாகும். அதனால் தான்,

" கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"

என இடைக்காடர் போற்றினார். இத்தகைய திருக்குறள் வாழ்வை வரை யறுக்கும் இலக்கணமாய் அமைகின்றது.

ஒரு மனிதன் எவ்வாறெல்லாம் வாழ வேண்டும் எவ்வாறெல்லாம் வாழக்கூடாது எனத் திருக்குறள் தெளிவுறுத்துகிறது. மானிடன் ஒருவனுக்கு ஒழுக்கம் தான் மிக மிக இன்றியமையாதது என்பது வள்ளுவம் வலியுறுத்தும் கருத்தாகும்.

" ஒழுக்கம் விழுப்பம் தரலான்
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் (131)

என்னும் குறள் வாழ்வின் ஆதார சுருதியாக ஒழுக்கத்தையே இயம்புகின்றது. ஒழுக்கம் விழுப்பம் தரும், அதனால் அது உயிரினும் ஓம்பப்படும். ஓம்பப்பட வேண்டும். மனிதன் நாகரிகம் கண்டவன். பகுத் தறிவு எனும் உயரறிவால் ஏனைய விலங்கு களில் இருந்து வேறுபட்டவன். இதனால் நல்லது கெட்டது அறிந்து செயற்படும் வல்லமை அவனுக்கிருக்கிறது. அவ்வா றான மனிதன் வாழ்விற்கு ஒவ்வாத, ஒழுக்கக் கேடான அம்சங்களை பின்பற்றி வாழ்ந்தால் அவனை எவ்வாறு மனிதனாகக் கொள்வது. அதனாலே தீயொழுக்கம் ஒருவனுக்கு மதிப்பைத் தரப் போவதில்லை வாழ்வைத் தரப்போவதில்லை. அதனால் துன்பத்தையும் அழிவையுமே தர முடியும் என்பதைக் காட்டுகிறார். "தீயொழுக்கம் என்றும் இடும்மை தரும்" என்பார் வள்ளுவர்.

ஒழுக்கமுடையான் ஒருவனுக்கு அடுத்து தேவைப்படுவது கல்வி. அதை புணர்ந்தே கேடில் விழுச்செல்வம் கல்வி என்றார். அதற்கு மேலாக "ஒருவர்க்கு மாடல்ல மற்றயவை" என்றுங் கூறுவது கல்விச் செல்வத்தின் சிறப்பை வலியுறுத்து வதாய் அமைகிறது. 'கண்' என்பது மனிதனின் மிக முக்கிய உறுப்பாகும். அதுவே வாழ்விற்கு ஒளி ஊட்டுவது. ஒளி யூட்டாவிட்டால் அதனாற் பயனென்ன? அது கண்ணா? ஒருவனது வாழ்க்கைக்கு உண்மையொளி எப்போ கிட்டுமென்றால் அவன் கல்வியறிவு பெற்றவனாகத் திகழும் போதேயாம். அதையே எளிமையாக விளக்குகிறார் வள்ளுவர்.

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்" (393)

கல்வியைக் கற்றால் போதுமா? எதனைக் கற்பது? என்றெல்லாம் வினா வரக் கூடுமென்றோ? அல்லது இன்று படிப்பது தேவாரம் இடிப்பது சிவன்கோயில் என்ற ரீதியில் படிப்பொரு பக்கம் வாழ்வொரு பக்கமாக இருக்கும் நிலை ஏற்படும் என்பதை உணர்ந்தோ என்னவோ திருவள்ளுவர்

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" (391)

என வலியுத்தினார். இன்று எதைக் கற்பது? ஏன் கற்பது? கல்விக்கும் வாழ் விற்கும் தொடர்பு என்ன? என அறியாது பேதலிக்கும் கூட்டமாக வாழும் எங்களுக்கு வள்ளுவரது மேற்படி குறள் வழி காட்டு வதாக அமைகிறது. "கற்பவை கற்க" என்பதன் மூலம் கற்க வேண்டியவற்றைக் கற்குமாறு கூறிய வள்ளுவர் "கசடறக் கற்க" என்பதனால் கல்வியின் ஆழ்ந்த





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையினை உணர்த்தினார். "நுனிப்புல் மேய்தல்" கல்வியாகாதே! கற்றாயிற்று. கற்றபின் செய்வதென்ன? "நிற்க அதற்குத் தக" என்றார். *கல்வியின் பயனே அதற்குத்* தக நிற்பதிற்தானேயிருக்கின்றது. வள்ளுவர் ஒன்றரை அடியிலே கல்வியைப் பற்றியும் அதன் நோக்கம் பற்றியும் இவ்வளவு ஆழ மாக உணர்த்தியிருப்பது வியப்பிற்குரியதே.

இவ்வாறாக ஒழுக்கத்தையும் கல்வி யையும் வலியுறுத்திய வள்ளுவர் மனிதன் மனிதனாக வாழவேண்டும்; அதற்கு மான மும் கௌரவமும் இன்றியமையாதது என்ப தையும் வலியுறுத்துகிறார்.

"தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை" (964)

"மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
*உயிர் நீப்பர் மானம் வரின்"* (969)

என்னும் குறள்களின் ஊடே வள்ளு வர் வலியுறுத்த விழைவது இதனையே ஆகும். இன்று எப்படியும் வாழலாம், எது செய்தும் செல்வமும் செல்வாக்கும் பெற்று விட்டால் போதும் என நினைத்து *"வாழ்வாங்கு வாழ்வோருக்கு"* (?) இக்குறள்கள் சமர்ப்பணம்.

வாழ்வியலை தலைவன் தலைவி நிலையில் நின்று நோக்கி வாழ்வின் இன்பப் பக்கங்களையும் இயம்பிச் சென்றது வள்ளு வம். காதல், காதலன் காதலி உறவு, இன்ப வாழ்க்கைக்கு ஆதார சுருதியாக அமையும் விடயங்கள் என இன்ப வாழ்வுப் பெட்டக மாகவே 'காமத்துப்பால்' விளங்குகின்றது. வாழ்க்கை என்பது வெறுக்கத்தக்கது. அது நிலையற்றது, மாயவடிவம் என்றெல்லாம் தத்துவம் *பேசுவோருக்கு, இருக்கட்டும்* எனினும் வாழ்க்கையை வாழ்க்கையாக அனுபவிப்போமெனக் கூறுவது போலவே திருவள்ளுவர் காமத்துப்பாலை அமைத்தார். எனினும் அத்தகைய இன்ப வாழ்வும் அற நிலைப்பட்டதாகவே அமைய வேண்டும் என் பதையும் அவர் வலியுறுத்தத் தவறவில்லை. ஒருவனுக்கு ஒருத்தி என்னும் உயர் தத்து வத்தை "வள்ளுவம்" கோடி காட்டியமை கின்றது. பாவத்திற்கெல்லாம் பாவம், மூடத் தனத்திற்கெல்லாம் மூடத்தனம், பிறர் மனையாளை விரும்புதலே என்பது.

*"அறன் கடை நின்றாருள் எல்லாம் பிறன் கடை*
நின்றாரின் பேதையர் இல்" (142)

என்னும் குறள் வலியுறுத்துகிறது.

அது மட்டுமல்ல இல்லறத்தான் ஒருவன் எவ்வாறு வாழ்க்கையை நடாத்த வேண்டும். அவனைச் சார்ந்திருக்கும் சமூகக்கடமைகள் எவை? என்பவற்றை யெல்லாம் தெளிவுறுத்த 'வள்ளுவம்' தவற வில்லை.

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்
தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை" (43)

என்றும்,

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய
மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை" (41)

என்றும் கூறும் குறள்கள் இல்லறத் தான் கடமைகளைப் பேசுகின்றன. இல் *வாழ்க்கையின் ஆதாரம் எதுவெனக்கேட்டால்* அது "அன்பே" யாம். அன்புதான் தலை வனையும் தலைவியையும் இணைப்பது. தலைவன் தலைவியின் பிணைப்பில் தான் இல்வாழ்வின் வெற்றியும் தோல்வியும் அடங்கியுள்ளன. அதேவேளை அறநெறிப் பட்டதாய் அமையும் வாழ்க்கையே வாழ்க்கை. அதுவே நிலைக்கும் வாழ்க்கையு மாகும். இதனாலேயே வள்ளுவர் "அறனெ னப்பட்டதே இல்வாழ்க்கை" என்றார்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" (45)

என்னும் குறளும் மேற்படி கருத்தையே வலியுறுத்துவதாய் அமைந்தது.

உலகத்திலே வாழும் வாழ்க்கை கிடைப்பது அதுவும் மானிட வாழ்க்கை கிடைப்பது சிறப்பிற்குரியது. அந்தச் சிறப்பு நோக்கியே "அரிது அரிது மானிடராதல் அரிது" என்றார் ஔவையார். இவ்விதான மானிட வாழ்வைப் பெற்ற நாங்கள் அவ் வாழ்வைச் சிறப்பாகவும், போற்றுதற்குரிய தாகவும் வாழ வேண்டாமா? வாழவேண்டும் என வலியுறுத்தும் வள்ளுவம் அவ்வாறு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிய நெறியில் வாழ்வோர் தெய்வத்திற்குச் சமமானவர்களாக மதிக்கப்படுவர் என்கிறது.

"வையத்துள் வாழ்வாங்குவாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" (50)

தமிழர் பண்பாட்டின் வெளிப்பாடுகளில் பிரதானமானதொன்று 'விருந்தோம்புதல்' ஆகும். வீட்டுக்கு வந்தோரை அன்பாக வரவேற்று அவர் தேவையறிந்து இன்முகத்துடன் உபசரித்தல் தமிழர் பண்பாட்டில் சிறந்தது, வள்ளுவரோ இல் வாழ்க்கை நடாத்துதலே விருந்தோம்புதலுக் காய்த்தான் என்பார்.

"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு" (81)

என்பது அவர் கருத்து. ஏன் இவ்விதம் வள்ளுவர் கூறினார்? ஏனென்றால்

"செல் விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு" (86)

என்பதனாலேயாம்.

உண்மையில் மனித வாழ்வியலைச் சரியான பாதையிற் செலுத்தத் தேவையான அனைத்து வழிகாட்டல் அம்சங்களையும் கொண்டதாகவே 'திருக்குறள்' அமைகிறது. மேலே காட்டப்பட்டவை சில வகை மாதிரிகளே. வாழ்க்கைக் கலையைத் தெளிவாகப் பயில திருக்குறள் பெருந்துணையாக அமையும். திருக்குறள் ஓர் வாழ்வியல் நூலேயாம். அதன் அறத்துப்பால் சிறப்பாக தனிமனித நிலை, குடும்ப உறவினர் நிலை சார்ந்த அடிப்படைப் பண்புகள், கடமைகளையும் பொருட்பால் சமூகப்பொதுவாழ் வின் செயன் முறைகள் குறிப்பாக நாட்டின் அரசியல், நிர்வாகம், குடிமக்கட் பண்புகள், பொருளியல் என்பவற்றையும் காமத்துப்பால் குடும்ப வாழ்வின் ஒரு கூறாகிய ஆண், பெண் உறவு நிலை, திருமணத்திற்கு முன்னும் பின்னுமான காதல் நிலை போன்றவற்றையும் எடுத்துரைக்கின்றது. பேராசிரியர் நா. சுப்பிரமணியன் குறிப்பிடுவதைப் போல ஒரு பண்பட்ட உயர்ந்த வாழ்வியலைக் கட்டியமைத்துக் காட்டும் முயற்சியாகக் குறள் அமைந்துள்ளது. தனிமனித நிலை, குடும்ப நிலை, உறவினர் நிலை, சமூக உறுப்பினர்கள் நிலை, நாட்டு குடிமக்கள் நிலை ஆகிய தளங்களில் ஒருவர் பேணிக் கொள்ள வேண்டிய பண்புகள், ஆற்ற வேண்டிய கடமைகள், பெறவேண்டிய அனுபவங்கள் ஆகிய பல்வேறு கூறுகளையும் ஒருங்கு திரட்டி ஒழுங்கமைத்துள்ளதன் மூலம் ஒரு முழுமையான வாழ்வியலை அது முன்வைத்துள்ளது. எனவே தான் திருக்குறள் வெறுமனே ஓர் அறநூலாக மட்டுமன்றி ஓர் வாழ்வியல் நூலாகவே போற்றப்படவேண்டிய தகைமையைப் பெற்று விடுகிறது.

**துணைவியூர் கேசவன்**

பிறப்பு ஒருவனைத் தூண்டும்போது வாழ வேண்டும் என்று எண்ணுகிறான்

பருவம் ஒருவனைத் தூண்டும்போது அனுபவிக்க வேண்டும் என்று எண்ணுகிறான்

அரசியல் ஒருவனைத் தூண்டும்போது உரிமை வேண்டும் என்று எண்ணுகிறான்

அடிமைத்தனம் ஒருவனைத் தூண்டும்போது விடுதலை வேண்டும் என்று எண்ணுகிறான்

சாவு ஒருவனைத் தூண்டும்போது பரம்பொருள் வேண்டும் என்று எண்ணுகிறான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவள விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.

# வட்டு சிவன் தொலைத் தொடர்பகம்

போட்டோ பிரதியாக்கம்



தொலைநகல் (Fax)

தொலைத் தொடர்பு



ஆகியவற்றை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள

# வட்டு சிவன் தொலைத் தொடர்பகம்

வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை



உள்நாட்டுத் தொடர்பு : 070 - 212470

வெளிநாட்டுத் தொடர்பு :- 0094 - 70 - 212470

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவள விழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

# சிவபாதம் ஒட்டுவேலை தொழிலகம்

பித்தளை ஒட்டு வேலையில் பெயர் போனவர்கள்.
மற்றும் பற்றறி சார்ஜ், இரும்பு ஒட்டு வேலைகளை
சிறந்த முறையில் தரமாக செய்து தருபவர்கள்

**சிவபாதம் ஒட்டு வேலை தொழிலகம்**

**துணைவிச் சந்தி,** **சங்கரத்தை.**

பவள விழா சிறப்புற வாழ்த்துகிறோம்.

# சண்முகம் களஞ்சியம்

**பால்மா வகைகள் வாளி, அலுமினியப் பொருட்கள் மற்றும்**
**வீட்டுத் தேவைக்கான சகல பலசரக்கு சாமான்களையும்**
**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள**

**சண்முகம் களஞ்சியம்**
**சங்கரத்தைச் சந்தி,**
**வட்டுக்கோட்டை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறியோரெல்லாம் சிறியருமல்ல

பலர் தமது வீடுகளில் பிள்ளைகள் கூறும் அறிவுரைகள் ஆலோசனைகள் என்பவற்றை கேட்பதே இல்லை. அவர்கள் ஏதாவது ஆலோசனை கூறின் "முளைத்து மூன்று இலை விட முன் கதைக்கத் தொடங்கி விட்டினம்" என்றும், "நேற்றுப் பெய்த மழைக்கு முளைத்த காளான் தனக்கு புத்திசொல்ல வந்துவிட்டது" என்றும் சினமடைவார்களே ஒழிய அந்த ஆலோசனைகளை ஆராய்ந்து பார்க்க மாட்டார்கள். தாம் பெற்ற பிள்ளைகளிடமே ஆலோசனை கேட்பது தமக்கு இழுக்கு என நினைப்பவர்களால் வாழ்க்கையில் எவ்வாறு முன்னேற முடியும். இந்த வையகத்திலே தோன்றிய நாம் அனைவருமே எமக்கு எல்லாம் தெரியும் என்றும், நாம் நினைப்பது செய்வது எல்லாம் சரி என்றும் எண்ணிக் கொண்டிருக்கின்றோம். எவருமே தான் குறையுள்ளவன் என்றோ, தான் நினைப்பது செய்வது பிழையாக இருக்கும் என்றோ எண்ணுவது இல்லை. எம்மில் பலர் மற்றவரிடம் சென்று தமக்குத் தெரியாதவற்றுக்கு ஆலோசனை கேட்கக் கூடப் பின் நிற்பர். அதிலும் தம்மிலும் வயதில் குறைந்தவர்கள் என்றால் அவர்களிடம் சென்று கடைசி வரை ஆலோசனை கேட்கமாட்டார்கள். தம்மிலும் பார்க்க வயது குறைந்தவர்களிடம் ஆலோசனை கேட்பது, அறிவுரை கேட்பது இழுக்கு என்று நினைப்பார்கள். இவர்கள் கூடப் பரவாயில்லை சிலர் சிறியோர் கூறுவது கடைசி வரை சரியாக இருக்காது என்ற இவர்களின் நம்பிக்கையே ஆகும். இவர்களின் இந்த எண்ணமே பல சமயங்களில் முன்னேற்றத்துக்குத் தடையாக அமைந்துவிடுகின்றது.

ஆனால் இந்த உலகில் பலர் புகழ் பெற்றதற்கும், விஞ்ஞானக்கண்டுபிடிப்புக்கள் செய்ததற்கும், ஞானம் பெற்றதுக்கும், அருள் பெற்றதுக்கும் சிறியோரின் உதவி, தூண்டுதல்கள் காரணமாக அமைந்திருக்கின்றது. எனவே நாம் சிறியவர்கள் எல்லோரும் அறிவில் ஆற்றலில் குறைந்தவர்கள் என்று எண்ணி விடலாகாது. இதையே "வெற்றி வேற்கை" என்ற நீதி நூலை எழுதிய ஆசிரியரான "அதிவீரராம பாண்டியன்" பின்வருமாறு கூறுகின்றார்.

"தேம்படு பனையின் திகழ் பழத்து-ஒருவிதை
வானுற ஓங்கி வளம் பெற வளரினும்
ஒருவர்க்கு இருக்க நிழலாகாதே"

ஆனால்

"தெள்ளிய ஆலின் சிறு பழத்து- ஒருவிதை
தெண்ணீர் கயத்து சிறுமீன் சினையிலும்
நுண்ணியதே ஆயினும் அண்ணல் யானை
அணி தேர் புரவி பெரும் படையுடன்
மன்னவர்க்கு இருக்க நிழலாகுமே"

ஆனால்

"பெரியோரெல்லாம் பெரியருமல்ல"
"சிறியோரெல்லாம் சிறியருமல்ல"

இதன் கருத்து என்னவென்றால் பனை மரத்தின் ஒரு விதை எவ்வளவு என்று நாம் அனைவருமே அறிந்திருக்கின்றோம். இந்த பெரிய விதையில் இருந்து தோன்றுகின்ற பனைமரம் வானத்தை முட்டுவது போல மிக நீண்டு வளர்ந்தபோதும் அதன் நிழலில் ஒருவர் கூட இளைப்பாற முடியாது.

ஆனால் ஆல மரத்தின் பழம் சிறியது. அந்த சிறிய பழத்தினுள் உள்ள பல விதைகளில் ஒரு விதையை கருதுவோமாயின் அது சிறிய மீனினுடைய சினையிலும் பார்க்க சிறியது. இந்த சிறிய விதையிலிருந்து வருகின்ற ஆலமரத்தின் நிழலில் யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாற்படை ஆகிய நால் வகைப் படைகளுடன் வரும் மன்னவனே இளைப்பாற முடியும். எனவே இதிலிருந்து நாம் விளங்கிக்கொள்வது யாதெனில் சிறியவர்கள் என்றால் அவர்கள் வயதில் குறைந்தவர்கள் தானே. இவர்களுக்கு



"குரங்கு உட்கார்ந்து இருக்கும்வரை அதற்கு வால் இருப்பது தெரியாது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன தெரியும் என்று எண்ணி அவர்களின் அறிவையும், ஆற்றலையும் குறைத்து மதிப்பிடாது அவர்களின் ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் கேட்க வேண்டும். சில சமயங்களில் அவர்களின் ஆலோசனைகள், அறிவுரைகள் எமக்கு பெரும் புகழையும் மதிப்பையும் ஈட்டித்தரலாம்.

ஒரு முறை இத்தாலி நாட்டில் மூக்குக் கண்ணாடி விற்கிற வியாபாரி ஒருவனுடைய வீட்டின் முன் அவனுடைய சிறு வயது மகன் ஒருவன் பலவிதமான வில்லைகளை வைத்து விளையாடிக் கொண்டிருந்தான். அவன் எதேச்சையாக இரண்டு வில்லைகளை முன் பின்னாக வைத்து தூரத்தெரிந்த மாதா கோயில் கோபுரத்தைப் பார்த்தான். பார்த்தவன் திடீரென "மாதா கோயில் எனக்கு கிட்ட வந்துவிட்டது கிட்ட வந்துவிட்டது" எனக் கூறத்தொடங்கினான். இது இந்த வியாபாரியோ அல்லது தெருவில் போய்க் கொண்டு இருப்பவர்களோ கண்டு கொள்ளவில்லை. சிலர் அவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது எனக்கூடக் கூறினார்கள். சிறுவனுடைய சொற்கள் அந்தத் தெரு வளியே சென்று கொண்டிருந்த புகழ் பூத்த பேராசிரியர் ஆன "கலிலியோ கலிலி" அவர்களின் காதுகளிற்கு எட்டியது. சிறுவன் கூறுவதிலும் உண்மை இருக்குமோ என நினைத்து சிறுவனிடம் சென்று "மாதா கோயில் அசையாமல் இருக்கும் போது எவ்வாறு உனக்கு கிட்ட வரும்" எனக் கேட்டார். சிறுவனை ஒரு பொருட்டாக மதித்து ஒரு புகழ் பெற்ற பேராசிரியர் அவனுடன் கதைப்பது கண்டு மக்கள் ஆச்சரியம் அடைந்தனர். சிறுவன் அந்த வில்லைகளை அவரிடம் கொடுத்து பார்க்கும்படி கூறினார். வில்லைகளை முன்பின்னாக அசைத்து அதனூடாக மாதா கோயிலை பார்த்தபோது ஒரு நிலையில் மாதா கோயில் கிட்ட வருவது போல் தோன்றியது. அன்றிலிருந்து கலிலியோ கலிலி அவர்கள் பல வில்லைகளை வைத்து ஆராட்சிசெய்து உலகிற்கு "தொலைக்காட்டியை" அறிமுகப்படுத்தினார். ஒரு படிப்பறிவற்ற சிறுவனின் சொல்லிலும் உண்மை இருக்கலாம் என்று எண்ணி அதை ஆராய்ந்தபடியால் அவர் இன்னும் ஒரு புகழ் பூத்த விஞ்ஞானியாக அறியாப் புகழ்பெற்று விளங்குகின்றார்.

இன்றைய நவயுகத்தில் கூட இந்தியாவைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் உலகம் போற்றும் நீதி நூலாகிய திருக்குறள் 1330 ஐயும் பிழையறக் கூறுவதுடன், அவற்றின் பொருள்களையும் திறம்படக் கூறுவதை நாம் பத்திரிகைகள் வாயிலாக அறிந்து கொண்டுள்ளோம். ஆனால் நான் நினைக்கின்றேன் பல வயதில் முதிர்ந்த புலவர்கள் கூட இருநூறுக்கு உட்பட்ட திருக்குறள்களையே மனனம் செய்து வைத்திருப்பார்கள் என்று. இது அந்த சிறுவனின் முயற்சிக்கு கிடைத்த வெற்றியே ஆகும். நாம் பல்கலைக்கழகங்களில் படித்து பட்டம் பெற எவ்வளவோ கஷ்டப்படுகின்றோம். ஆனால் இங்கிலாந்து நாட்டில் தமிழ் மாணவன் ஒருவன் மிகக் குறைந்த வயதில் விஞ்ஞான மாணிப்பட்டம் பெற்றதை நாம் கேள்விப்பட்டுள்ளோம். இது வயதுக்கும் அறிவுக்கும் அவ்வளவு பெரிய தொடர்பு இல்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றது. இந்த இரண்டு சிறுவர்களிடம் இருந்தும் வயதில் கூடிய நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள் பல உள்ளன.

தெரு ஒன்றின் வழியே பல்லக்கிலே அமர்ந்து வயது முதிர்ந்த சிவாச்சாரியார் ஒருவர் போய்க்கொண்டிருந்தார். அவர் பெரிய ஞானி. குருகுலம் வைத்து பல மாணவர்களுக்கு சைவ சித்தாந்த உண்மைகளைப் போதிப்பவர். அந்தத் தெருவிலே ஒரு மரநிழலிலே மெய்கண்டதேவர் என்ற சிறுவன் ஒருவன் அமர்ந்து இருந்து பல மாணவர்களுக்கு சைவ சித்தாந்தத்தைப் போதிப்பதைக் கண்டார். நான் செய்கின்ற அதே வேலையை இச்சிறுவன் செய்கின்றானே, வயதில் முதிர்ந்தவர்களே அவற்றை விளங்கக் கஷ்டப்படும்போது இந்த சிறுவனுக்கு சித்தாந்த உண்மைகள் பற்றி என்ன தெரியும், இவனை ஒரு கேள்வியில் மடக்குகின்றேன் பார் என்று ஆணவத்துடன் பல்லக்கில் இருந்து இறங்கிச் சென்று சிறுவனைப் பார்த்து ஆணவத்தின் வடிவம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு இருக்கும் எனக் கேட்டார். அந்த சிறுவன் அமைதியாகப் புன்முறுவல் பூத்த வண்ணம் தனது சுட்டுவிரலை அவரை நோக்கி நீட்டிய பின் அமைதியாக இருந்தான். சிறுவன் தன்னைத்தான் ஆணவத்தின் வடிவம் என்று கூறுகின்றான் என்று உணர்ந்தார். அடுத்த கணமே ஆணவத்தை அழித்தார். அவன் தன்னிலும் பார்க்க எவ்வளவோ வயதில் குறைந்த சிறுவன் என்று பாராது அவனது அடியில் வீழ்ந்தார். அவனைத் தனது குருவாக ஏற்றுக் கொண்டார். ஞானம் பெற்றார். அவரே அருணந்தி சிவாச்சாரியார் என்ற பெயரில் பல சைவசித்தாந்த நூல்களை எழுதி சந்தான குரவர்களில் ஒருவராக இன்றும் மக்களால் போற்றப்படுகின்றார். அவன் சிறுவன் தானே ஒரு கேள்விக்கு விடையை சரியாகச் சொல்லிவிட்டால் போதுமா அவனுக்கு என்ன தெரியும் என்று அலட்சியம் செய்துவிட்டு சென்று இருந்தால் இன்று அவர் சந்தான குரவர்களில் ஒருவராக மாறியும் இருக்க மாட்டார், மக்களால் போற்றப்பட்டும் இருக்கமாட்டார்.

இது இவ்வாறு இருக்க, பலர் தமது வீடுகளில் பிள்ளைகள் கூறும் அறிவுரைகள் ஆலோசனைகள் என்பவற்றை கேட்பதே இல்லை. அவர்கள் ஏதாவது ஆலோசனை கூறின், "முளைத்து மூன்று இலை விட முன் கதைக்கத் தொடங்கிவிட்டினம்" என்றும், "நேற்றுப் பெய்த மழைக்கு முளைத்த காளான் தனக்கு புத்தி சொல்ல வந்து விட்டது" என்றும் சினமடைவார்களே ஒழிய அந்த ஆலோசனைகளை ஆராய்ந்து பார்க்க மாட்டார்கள். தாம் பெற்ற பிள்ளைகளிடமே ஆலோசனை கேட்பது தமக்கு இழுக்கு என நினைப்பவர்களால் எவ்வாறு முன்னேற முடியும்.

ஒரு அரசனுக்கு சில சந்தேகங்கள் வந்தன. அவன் உடனே தனது அமைச்சர்களை அழைத்து தனது சந்தேகத்தைக் கூறி நாளை அவற்றுக்கு விளக்கம் தருமாறு கூறிவிட்டு சென்று விட்டான். அமைச்சர்கள் செய்வதறியாது திகைத்தனர். ஏன் என்றால் அவன் கேட்ட கேள்விகள் இவை தான். முதலாவது கடவுள் எங்கிருக்கிறார். இரண்டாவது கடவுள் எந்தத் திசையை பார்த்துக் கொண்டிருக்கிறார். மூன்றாவது கேள்வி கடவுள் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதே ஆகும். அடுத்த நாள் அரச சபை கூடியது. அங்கிருந்து அறிஞர்கள் எல்லோரும் அரசனது சந்தேகத்திற்கு பெரிய ஞானிகள் கூட விடை கூற முடியாது என்றும் அவை மிகவும் சிக்கலானவை எனவும் அரசனுக்கு சமாதானம் கூறிக் கொண்டு இருந்த போது, அங்கு அமைச்சர் ஒருவருடன் வந்து இருந்த அவருடைய சிறு வயது பேர்த்தி, அரசனைப் பார்த்து அவற்றுக்கு தன்னால் பதில் கூற முடியும் என்று கூறியதைக் கேட்ட அனைவரும் திகைத்தனர். அரசன் சிறுமியைப் பார்த்தான். படித்த அனுபவமுள்ள வயதில் முதிர்ந்த அறிஞர்களாலேயே பதில் கூற முடியாததற்கு இச்சிறுமி பதில் கூறுவாளா எனச் சந்தேகம் கொண்டான். ஆயினும் எதற்கும் கேட்டுப்பார்ப்போம் என்று சிறுமியை அருகே அழைத்த அரசன் தனது முதல் கேள்வியான கடவுள் எங்கே இருக்கிறார் என்று கேட்டார். உடனே சிறுமி வெண்ணை எங்கு இருந்து எடுக்கிறோம் எனக்கேட்ட பொழுது தயிரில் இருந்து என அரசன் பதில் கூறினான். உடனே சிறுமி தயிரை எங்கே இருந்து எடுக்கிறோம் எனக்கேட்ட போது பாலில் இருந்து என விடை பகர்ந்தான் அரசன். சிறுமி அருகில் இருந்த பால் கிண்ணத்தை எடுத்து அரசனிடம் கொடுத்து அதில் வெண்ணை, தயிர் ஆகியவற்றை காட்டுமாறு கூறினாள். அரசன் சொன்னான் அவை பாலுக்குள்ளே இருக்கின்றன. ஆனால் அவற்றை வேறுபடுத்திக் காட்ட முடியாது என்று உடனே சிறுமி கூறினாள் அதே போலத் தான் இறைவன் எல்லாப் பொருட்களிலும் இருக்கிறான். ஆனால் அவனை வேறுபடுத்திக் காட்ட முடியாது என்று. அரசன் திகைத்தான். சிறுமியைப் பாராட்டினான். அடுத்து தனது இரண்டாவது கேள்வியான இறைவன் எந்தத் திசையைப் பார்த்துக் கொண்டு இருக்கிறான் என்று கேட்டான். சிறுமி அரசனின் முன் எரிந்து கொண்டிருந்த தீபம் ஒன்றினைச் சுட்டிக்காட்டி அதன் ஒளி எந்தத் திசையை நோக்கிப் பரவுகிறது எனக் கேட்டாள். அதற்கு அரசன் ஒரே சமயத்தில் எல்லாத்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசையும் நோக்கி பரவுவதாகக் கூறியதும் சிறுமி கூறினாள் அதே போலத் தான் இறைவன் ஒரே சமயத்தில் எல்லாத் திசையையும் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று அரசனுக்கு ஆச்சரியத்தின் மேல் ஆச்சரியம். சிறுமியின் அறிவை வியந்து பாராட்டினான். இறுதியாக தன்னுடைய கடைசிக் கேள்வியாகிய இறைவன் இப்பொழுது என்ன செய்து கொண்டி ருக்கிறான் என்பதைக் கேட்டான். உடனே சிறுமி சொன்னாள் தன்னை சிறிது நேரம் சிங்காசனத்தில் உட்கார அனுமதித்தால் விடையை சுலபமாகக் கூறி விடலாம் என்று உடனே அரசன் தான் கீழே இறங்கி நின்று கொண்டு சிறுமியை அமர அனுமதி அளித்தான். உடனே சிறுமி அங்கே இருந்த காவலர்களை அழைத்து அரசனை சிறை யில் அடைக்க உத்தரவிட்டாள். அரசன் உட்பட அனைவரும் திகைத்தனர். சிறுமி சிரித்த வண்ணம் சிங்காசனத்தில் இருந்து இறங்கி அரசனை அதில் அமர வைத்த பின் கூறினாள் "அரசே ஒரு நிமிடத்தில் ஆண்டியாக இருந்த என்னை அரசனாகவும் அரசன் ஆக இருந்த உன்னை ஆண்டியாக வும் இறைவன் மாத்திக் காட்டினான்". இதைத் தான் இறைவன் இப்போது செய்து கொண்டிருக்கிறான் எனக் கூறி அரசனது சந்தேகங்களை தீர்த்து வைத்தாள். சிறுமி தானே இவளுக்கு என்ன தெரியப் போகின்றது என்று எண்ணி அவளை விடை யளிக்க அனுமதித்திருக்காவிடின் அரசனது அஞ்ஞானம் அகன்று இருக்க மாட்டாது அன்று அந்த சபையில் கூடி இருந்த அனை வரும் "சிறியோர் எல்லாம் சிறியோரும் அல்ல" என்ற உண்மைகளை உணர்ந்து கொண்டனர்.

மாபெரும் கவிஞர் ஆகிய சுப்பிர மணியபாரதியார் கூட "விலை போட்டு வாங்கவா முடியும் கல்வி வேளை தோறும் கற்று வருவதால் படியும்" என்று கூறி இருப்பதன் மூலம் ஒருவனுடைய அறிவு அவனின் வயதில் அல்ல முயற்சியிலேயே தங்கி உள்ளது என்பதை நாம் அனைவரும் அறிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது. பதினெட்டு வயது இளைஞன் ஒருவன் தனது அறிவு பெருக வேண்டும் என்பதற் காக பல புத்தகங்கள் வாசித்து பல நற்செய்திகள் போதனைகள் பேச்சுக்கள் என்பவற்றை கேட்டு தனது அறிவைப் பெருக்கி இருப்பான். நாற்பது வயதில் உள்ள ஒருவர் அவ்வாறு செய்யாவிடின் அவரின் அறிவு பதினெட்டு வயது இளைஞனின் அறிவிலும் பார்க்க குறை வாகவே இருக்கும். அதை ஆராய்ந்து பாராமல் நம்மில் பலர் நாற்பது வயதில் உள்ளவர் பதினெட்டு வயது இளைஞனிலும் பார்க்க வயதில் இரண்டு மடங்கு மூத்தவர். எனவே அவர் தான் அறிவில் கூடியவர் என்று கூறுவது பொருந்தாது எனவே நாம் அனைவரும்,

"பெரியோரெல்லாம் பெரியருமல்ல
சிறியோரல்லாம் சிறியருமல்ல"

என்ற உண்மையை உணர்ந்து வயதில் குறைந்தவர்கள் கூறுகின்ற நல்ல அறிவுரைகள் ஆலோசனைகளையும் ஏற்று வாழ்க்கையில் முன்னேற பழகிக் கொள்ள வேண்டும்.

**செல்வன் ம. திவாகரன்**

> ※ உரிமைகளை மட்டுமெண்ணிய சமுதாயம் மேன்மையடைவதில்லை. கடமைகளைக் கருதியவர்களே மேன்மையடைகிறார்கள். கடமை யைச் செய்தால் உரிமைகள் தானாக வந்தடையும்.
>
> – மகாத்மா காந்தி

> ※ நிபந்தனைகளுக்குட்பட்ட அன்பு அன்பன்று. அது தாய்ப்பாலுக்கு விலைபேசுவது போன்றது.



"இறையுணர்வு உள்ளவன் நம்பிக்கைத் துரோகம் செய்யமாட்டான்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவள விழா சிறப்புற வாழ்த்துகிறோம்.

# சச்சியா இரும்பகம்





- சகல விதமான சைக்கிள் உதிரிப்பாகங்கள்,
- கட்டடப் பொருட்கள்,
- பெயின்ட் வகைகள்,
- மின்னிணைப்புப் பொருட்கள்

**என்பவற்றை**

**மொத்தமாகவும் சில்லறையாகவும்**
**பெற்றுக் கொள்ள**

# சச்சியா இரும்பகம்

**தெல்லிப்பளை வீதி, வட்டுக்கோட்டை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடியோ படப்பிடிப்பிற்கும்

கறுப்பு - வெள்ளை, கலர் புகைப்படங்களை எடுக்கவும்

மணவறை, வில்லுப்பந்தல், சொக்கொட்டான் பந்தல்,

கதிரைகள், சிங்கப்பூர் சோடனைகள், சரமாலைகள்,

தண்ணீர்ப்பரல், பாய்கள் போன்ற பல

நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்

# குரு போட்டோ & வீடியோ

**KURU PHOTO & VIDIO**

(நவீன கம்பியூட்டர் முறையில் படம், வீடியோ எடுக்கப்படும்)

**உரிமையாளர் : சிதம்பரநாதன் குருபரன்**

**சங்கரத்தை, வட்டுக்கோட்டை.**

---

அழகுசாதனப் பொருட்கள்

பிளாஸ்ரிக் பொருட்கள்

மின் உபகரணங்கள்

பாதணி வகைகள்

புத்தகங்கள்

காகிதாதிகள்

போன்ற பல்வகை பொருட்களையும்
ஒரே இடத்தில் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ள

# வலம்புரி அழகுமாடம்

# வலம்புரி புத்தகசாலை

**பிரதான வீதி, வட்டுக்கோட்டை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய, சமூக அமைப்புக்கள் மீதான தலைமைத்துவம்

## LEADERSHIP ON RELEGLOUS AND SOCIAL ORGANIZATIONS.

### 1.0 வரைவிலக்கணம்

வியாபார நிறுவனமாயினும் சரி அல்லது சமய, சமூக அமைப்புக்களாயினும் சரி அவற்றின் வெற்றிக்கும் வளர்ச்சிக்கும் தலைமைத்துவம் இன்றியமையாததாகும். இவ்வகையில், நிறுவனமொன்றின் ஊழியர்களை நெறிப்படுத்துவதில் முக்கிய பங்கு பெறும் ஒரு முகாமைக்கருமமே தலைமைத்துவம் எனப்படுகின்றது.


"Robert Blake and Jane Mouton" என்பவர்களது கருத்துப்படி உற்பத்தித் திறனை அதிகரித்தல், பிரச்சினைகள் தீர்க்கும் திறனை உருவாக்குதல், தொழில் திருப்தியை ஏற்படுத்துதல், அர்ப்பணிப் புணர்வை ஏற்படுத்துதல் போன்றவற்றை உள்ளடக்கிய ஒரு முகாமைத்துவச் செயற்பாடே தலைமைத்துவம் எனப்படுகின்றது.

தலைமைத்துவம் எனப்படுவது பொதுவான ஒரு நோக்கத்தை நோக்கிச் செயற்பட வைக்கும் பொருட்டு தனிநபர்கள் அல்லது குழு மீது செல்வாக்குச் செலுத்தி அவர்களை வழி நடத்திச் செல்லும் ஆற்றலே. எனவே தான் தலைமைத்துவமானது ஒரு இயங்கும் செய்முறை (Dynamic process) எனப்படுகின்றது.

சுருக்கமாகக்கூறின் ஒரு கருமத்தை ஒருவர் எவ்வாறு ஆற்ற விரும்புகின்றாரோ அதேபோல் ஏனையோரையும் தொழிற்பட வைக்கும் ஒரு கருமமே தலைமைத்துவம் என வரை விலக்கணப்படுத்தப்படுகின்றது.

எப்பொழுதுமே தலைவன் தன்னைப் பின்பற்றுவோன் அல்லது தனக்குக் கீழே இருக்கும் உதவியாளர்களைத் தான் விரும்பியவாறு தொழிற்பட வைப்பவனாக இருப்பான். இதனையே நேர்க்கணியச் செல்வாக்கு என அழைப்பர். ஆனால் இது எதிர்க்கணியச் செல்வாக்காக மாறி விடக்கூடாது.

சரியான தலைமைத்துவம் இடம்பெற வேண்டுமாயின் தலைவன் எப்பொழுதும் மற்றையவர்களை விடக் கூடிய வலுவினைக் கொண்டிருத்தல் வேண்டும். இதன் மூலம் அவன் மற்றையோர் மீது செல்வாக்குச் செலுத்துகின்ற நிலை உருவாகும். இத்தகைய செல்வாக்கு ஊழியர்களது நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துவதாகவும் அமையும். இதனைப் பின்வரும் செய்முறை வடிவில் காட்ட முடியும்.




இதன்படி ஒரு தலைவனிடம் காணப்படுகின்ற வலுவானது, அவனது உதவியாளர்கள் மீது செல்வாக்குச் செலுத்தி அவர்களது நடத்தைகளை நிறுவனத்துக்குச் சாதகமாக மாற்றி விடுவதற்குக் காரணமாக அமைகின்றது. எனவே தான் ஏனையவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற்று நிறுவனத்தின் நோக்கத்தையடைந்து கொள்வது தலைமைத்துவத்தில் சாதகமானதாக அமைகின்றதெனலாம்.

### 1.1.தலைமைத்துவமும் முகாமைத்துவமும்

### Leadership and Management

சில சந்தர்ப்பங்களில் இவையிரண்டும் ஒன்றுபோல் தென்படலாம். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையிரண்டுக்குமிடையில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. முகாமைத்துவம் என்பது நிறுவனத்தின் நோக்கங்களை அடையும் பொருட்டு மற்றவர்களைக் கொண்டு வேலைகளைச் செய்வித்தலாகும். இங்கு முகாமையாளர் முகாமை சம்பந்தமான திட்டமிடல், ஒழுங்கமைதத்தல், வழிநடத்துதல், ஊழியரிடல், கட்டுப்படுத்தல் போன்ற சகல தொழிற்பாடுகளையும் ஆற்றுதல் வேண்டும். ஆனால் தலைமைத்துவமோ வழிநடத்தல் என்பதனுள் அடங்கும் ஒரு தொழிற்பாடாகும். இந்த அடிப்படையில் தலைமைத்துவம் முகாமைத்துவத்தின் ஒரு பகுதியாகவே காணப்படுகின்றதெனலாம்.

அது மட்டுமன்றி முகாமையாளர் ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்புக்களில் மட்டுமே காணப்படுவர். ஆனால் தலைமைத்துவம் நிச்சயமாக நிறுவன அமைப்பினுள் தான் இருக்கும் என்று சொல்லமுடியாது. மாறாக ஒழுங்கமைக்கப்படாத குழுக்களிலும் தலைவர்கள் காணப்படலாம்.

உதாரணமாக :ஆன்மீகத் தலைவர்கள்
சமூகத் தலைவர்கள்

இதனை விட சூழ்நிலைக்கேற்ப இயற்கையாகவே தலைவர்கள் தோன்றலாம்.

உதாரணம் : மகாத்மாகாந்தி

இவ்வாறு தலைவருக்கும் முகாமையாளருக்கும் இடையே ஒரு சில வேறுபாடுகள் காணப்படினும் முகாமையாளருக்கும் தலைமைத்துவம் வேண்டப்பட்ட ஒன்றாகவே விளங்குகின்றது. அதாவது சிறந்த முகாமைத்துவத்துக்குச் சிறந்த தலைமைத்துவம் தேவைப்படுகின்றது.

## 1.2 தலைமைத்துவத்தின் பண்புகள் *Leadership Traits*

(ஒரு நல்ல தலைவனிடம் இருக்க வேண்டிய பண்புகள்)

01. மற்றையோர் நிலைக்குள்ளாகும் பண்பினைக் கொண்டிருத்தல். (Empathy)
02. தன்னை உணர்ந்து கொள்ளல் (Self Awareness)
03. விவேகமானவராக இருத்தல் வேண்டும். (Inteligine)
04. மனித நடத்தையினை விளங்கிக் கொள்ளும் ஆற்றல்.
05. சிறந்த தொடர்பாடல் திறனைக் கொண்டிருத்தல். பொருத்தமான நேரத்தில் தேவையான தகவலை வழங்குதல்.
06. நிறுவனத்தின் இலக்கையடைவதில் அக்கறையுடையவராகவும், நிறுவனத்தின் மீது விசுவாசமுடையவராகவும் இருத்தல்.
07. நடுநிலைமையுடையவராக இருத்தல்.
08. ஆபத்துக்களையும் பிரச்சினைகளையும் எதிர்கொள்ளத் தயாராக இருத்தல் வேண்டும்.
09. பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருத்தல் வேண்டும்.
10. சிறந்த தீர்மானங்களை மேற்கொள்ளக் கூடிய ஆற்றல்.
11. விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளும் மனநிலையைக் கொண்டிருத்தல்.
12. பேச்சாற்றல் கொண்டவராக இருத்தல்.

## 1.3. தலைவர்கள் தோன்றுகின்ற தன்மையை அடிப்படையாகக் கொண்டு தலைமைத்துவத்தைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. பிறப்பினாலான தலைமைத்துவம் (Charismatic Leadership)
2. மரபுரீதியான/பாரம்பரிய தலைமைத்துவம் (Traditional Leadership)
3. நியமனத் தலைமைத்துவம் (Appointed Leadership)
4. தெரிவுத் தலைமைத்துவம் (Selection Leadership)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1.3.1 பிறப்பினாலான தலைமைத்துவம் (Charismatic Leadership)

இது பிறப்பிலேயே ஒருவர் கொண்டிருக்கும் ஆளுமை, செயற்றிறன் என்பவற்றின் மூலம் தோன்றுகின்ற தலைமைத் துவத்தைக் குறிக்கும்.

உதாரணம் : கிட்லர், நெல்சன் மண்டேலா

### 1.3.2 மரபுரீதியான தலைமைத்துவம் (Traditional Leadership)

அது பரம்பரை பரம்பரையாக ஒருவருக்குக் கிடைக்கும் தலைமைத்துவத்தைக் குறிக்கும்.

உதாரணம் : அரச பரம்பரையில் தோன்றும் தலைவர்கள்

### 1.3.3 நியமிக்கப்பட்ட தலைமைத்துவம் (Appointed Leadership)

குறித்த ஒரு பதவிக்கு நியமனம் செய்யப்படுவதன் மூலம் உருவாகின்ற தலைமைத்துவமே இதுவாகும்.

உதாரணம் : நிறுவன முகாமையாளர்கள்

### 1.3.4 தெரிவுத் தலைமைத்துவம் (Selection Leadership)

இதன்படி பலராலும் தெரிவு செய்யப் படுகின்ற ஒருவர் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்பவராக இருப்பர். அனேகமாக சமூக, சமய அமைப்புக்களில் இத்தகைய முறையிலேயே தலைவர்கள் தெரிவு செய்யப் படுவது வழக்கம்.

### 1.4 தலைமைத்துவம் தொடர்பான கோட்பாடுகள் Theories of Leadership.

தலைமைத்துவம் தொடர்பான கோட் பாடுகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. தலைமைத்துவப் பண்புக் கோட்பாடு / *தலைமைத்துவப் பண்பு பற்றிய அணுகு* முறை Trait Theory / Trait Approach
2. *தலைமைத்துவப் பாங்குக் கோட்பாடு* Leadership Style Theory
3. நிலைமைக்கேற்ற தலைமைத்துவக் கோட்பாடு Contingeney Theories / Sitvation Theories

### 1.4.1 *தலைமைத்துவப் பண்புக்கோட்பாடு* Trait Theory or Trait Approach

இது மிகப் பழமைவாய்ந்த அணுகு முறையாகும். இதன் கருதுகோள் யாதெனில் குறித்த பண்புகளை அல்லது இயல்பு களைக் கொண்டிருப்பவர்களே வெற்றிகர மான தலைவர்கள் ஆகின்றார்கள் என்ப தாகும். இங்கு சிறந்த தலைவருக்கு இருக்க *வேண்டிய பண்புகளாக பின்வரும் பண்புகள்* குறிக்கப்பட்டுள்ளன.

1. புத்திக்கூர்மை
2. அறிவு
3. தோற்றம்
4. தன்னம்பிக்கை
5. நிர்வாக ஆற்றல்
6. முன்னெடுத்துச் செல்லும் திறன்
7. பலம்

இத்தகைய பண்புகளை சில நபர்கள் தமது *பிறப்பிலேயே* கொண்டிருக்கின்றார்கள் என்றும் இப்பண்புகள் அவர்களுக்கு வழங்கப்பட்ட கொடை என்றும் நம்பப்பட்டது. இவற்றின் அடிப்படை யில் தலைவர்கள் பிறக்கின்றார்களே தவிர உருவாக்கப்படுவதில்லை எனக் கூறப்படு கின்றது. எனினும் சிறந்த தலைவர்களிடம் இவ் எல்லாப் பண்புகளும் காணப்பட வில்லை என ஆய்வுகள் காட்டியுள்ளன. அவ்வாறே இப்பண்புகளைக் கொண்ட எல்லோருமே சிறந்த தலைவர்களாக உரு வாகிபதுமில்லை. இதனால் இக்கோட்பாடு *முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.*

### 1.4.2 நிலைமைக்கேற்ற தலைமை வகித் தற் கோட்பாடுகள் Paul Hersey and Blanchad's Situational Leadership

இக் கோட்பாடானது ஊழியரது முதிர்ச்சிக்கு ஏற்ப தலைமைத்துவப்பாங்கு மாறுபடும் எனக்கொள்கின்றது. இவர்களது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துப்படி முதிர்ச்சி என்பது வயதினையோ *அல்லது மன உறுதியினையோ கருதாது.* மாறாக சாதனை செய்வதற்கான விருப்பம் பொறுப்புக்களை ஏற்பதற்கான சம்மதம் வேலை தொடர்பான ஆற்றல், அனுபவம் என்பவற்றைக் கருதும். இங்கு உதவியாளர்கள் அபிவிருத்தியடைந்து முதிர்ச்சியடையும்போது அதற்கேற்ப ஒவ்வொரு கட்டத்திலும் *தலைமைத்துவப்பாங்கு எவ்வாறு* மாறுபடுகின்றது என்பதனை Cycle என்பதன் மூலம் விளக்கியுள்ளனர். இதனைப் பின்வருமாறு காட்டலாம்.

High

| | | |
|---|---|---|
| High relationship and Law Task<br>3 | High Task and high relation *ship*<br>2 | *Selling*<br>திணித்தல் |
| 4<br>Law relation ship and Law Task<br>Low | 1<br>High Task and law relationship<br>High | *Telling*<br>அறிவித்தல் |

**Task behaviour**

ஆரம்பக் கட்டத்தில் அதாவது *உதவியாளர் முதன்முதலாக நிறுவனத்தில்* வேலைக்கு சேரும்போது முகாமையாளர் அதிகளவில் வேலையை மையமாகக் கொண்டு வழிநடத்துவதே பொருத்தமானதாக இருக்கும். எனவே இங்கு வேலையை மையமாகக் கொண்டு வேலைகள் தொடர்பாக அறிவுறுத்துவதுடன் ஊழியர்களுடன் *குறைந்த உறவுகளையே கொண்டிருப்பர்.*

இரண்டாவது கட்டத்தில் உதவியாளர் தமது வேலைகளைக் கற்றறியத் தொடங்கினாலும் அவர்கள் இன்னும் முழுப் பொறுப்பையும் ஏற்கச் சம்மதமாக இருக்கமாட்டார்கள். இதனால் முகாமையாளர் அதிகளவில் *வேலையை மையமாகக்* கொண்டு வழிநடத்துவார்கள். அத்துடன் இக்கட்டத்தில் உதவியாளருடன் பழக்கமானவராக ஆகுவதாலும் அவர்களை உற்சாகப்படுத்த விரும்புவதாலும், தொடர்புகளை அதிகளவில் பேணுவார்.

மூன்றாவது கட்டத்தில் உதவியா*ளர்களின் ஆற்றல் சாதனைக்கான விருப்பப்* பொறுப்புக்களை ஏற்பதற்கான சம்மதம் என்பன அதிகரித்ததால் இங்கு முகாமையாளர்களின் வழிநடத்தல் அதிகளவில் தேவைப்படாது. எனினும் உதவியாளர்களின் மன உறுதியை அதிகரிக்கக் கூடிய வகையில் அவர்களுடன் அதிக தொடர்புகளைப் *பேணுவார்.*

உதவியாளர் படிப்படியாக முதிர்ச்சியடைந்து நான்காவது கட்டத்தை அடையும்போது அவர்கள் சுயமாக இயங்கக் கூடியவர்களாகவும் அனுபவம் வாய்ந்தவர்களாகவும் ஆகுவதால் முகாமையாளருடன் அதிகளவில் தொடர்புகொள்ள வேண்டி வராது. முகாமையாளரின் வழி நடத்தலும் அதிகளவில் தேவைப்படாது. இதனால் முகாமையாளர் இக்கட்டத்தில் Law task and law relationship என்ற பாங்கினைப் பின்பற்றுவார்.

இந்த வகையில் ஊழியரது முதிர்ச்சிக்கேற்ப தலைமை வகித்தல் மாற்றமடையுமென Hersey and Blanchard குறிப்பிடுகின்றனர்.

### 1.4.3 தலைமைத்துவப் பாங்குக்கோட்பாடு
### Leadership Style Theory

Huneryager, Heckman (1967) ஆகிய இவர்களது கருத்துப்படி நிறுவனங்களின் பின்வரும் நான்கு வகையான தலைமைத்துவம் காணப்படுவதாகக் கொள்ளப்படுகின்றது.

1. சர்வாதிகாரத் தலைமைத்துவம் (Doctrinal Leadership)
2. *ஏகாதிபத்தியத் தலைமைத்துவம்* (Authoritatian Leadership)
3. ஜனநாயகத் தலைமைத்துவம் (Democratic Leadership)
4. தலையீடற்ற தலைமைத்துவம் / கட்டுப்பாடற்ற தலைமைத்துவம் (Laissez fair Leadership)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1.4.3.1 சர்வாதிகாரத் தலைமைத்துவம் (Dictational Leadership)

இத்தகைய தலைமைத்துவத்தில் முகாமையாளர் பணியாளர்களுக்கு தண்டனை வழங்கி அவர்களைப் பயமுறுத்தி வேலை செய்விக்கின்றனர். இத்தகைய தலைமைத்துவத்தினை நிறுவனங்களில் காண்பது அரிது. எனினும் சில அரச அமைப்புக்களில் இது காணப்படுகின்றது. சமய, சமூக அமைப்புக்களுக்கு இது எந்த வகையிலும் பொருத்தமற்றது.

### 1.4.3.2 ஏகாதிபத்தியத் தலைமைத்துவம் (Authoritatian Leadership)

இங்கு தீர்மானமெடுக்கும் அதிகாரம் முகாமையாளரிடமே காணப்படும். ஊழியர்களின் ஆலோசனைகள் இங்கு பெறப்படுவதில்லை. இங்கு முகாமையாளர் இடுகின்ற கட்டளைகளை ஊழியர் நிறைவேற்ற வேண்டுமென எதிர்பார்க்கப்படுவர். இங்கு முகாமையாளரே தனித் தீர்மானத்தை எடுப்பதால் விரைவாகத் தீர்மானமெடுக்க முடியும். எனினும் ஊழியர் இத்தகைய தலைமைத்துவப் பாங்கை விரும்பமாட்டார்கள். இதனால் அவர்களுக்கு ஊக்குவிப்பு இருக்க மாட்டாது. மேலும் எதிர்காலத்தில் தலைமைத்துவப் பதவிகளை வகிப்பதற்குத் தயார் படுத்தப்படமாட்டார்கள். இதுவும் சேவை நோக்கம் கொண்ட அமைப்புக்களுக்குப் பொருத்தமற்றதாகும்.

### 1.4.3.3 ஜனநாயக ரீதியான தலைமைத்துவம் (Democratic Leadership)

இது பங்குபற்றும் தலைமைத்துவம் எனவும் அழைக்கப்படும். இங்கு தீர்மானம் எடுக்கும் செய்முறை பரவலாக்கப்பட்டிருக்கும். அதாவது முகாமையாளர் ஒருதலைப் பட்சமாக தீர்மானங்களை எடுப்பதற்குப் பதிலாக அவர் தனது உதவியாளர்களையும் தீர்மானம் செய்தலில் பங்குபற்ற வைத்து அவர்களது ஆலோசனைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்.

இங்கு ஊழியர்களது ஆலோசனைகள் கருத்துக்களிற்கு முக்கியத்துவம் கொடுத்து தீர்மானங்கள் எடுக்கப்படுவதால் அது அவர்களை ஊக்கப்படுத்தும் ஒரு நுட்பமாக அமையும். அத்துடன் தமது விருப்பத்தோடு எடுக்கும் தீர்மானங்களை சிறந்த முறையில் அமுல்படுத்த உதவுதல். மேலும் தலைமைத்துவம் பதவிகளை வகிப்பதற்கு ஊழியர்கள் தயார்படுத்தப்படுகின்றார்கள். எனினும் இத்தலைமைத்துவத்தின் குறைபாடு யாதெனில் நிறுவனத்தின் பிரச்சினைகளை தீம்மட்ட ஊழியர் சரியாக விளங்கிக் கொள்ளாதுவிடின் அவர்கள் தீர்மானமெடுத்தலின் பங்குபற்றல் அர்த்தமற்றதாகப் போய்விடும். சமூக, சமய அமைப்புக்களைப் பொறுத்தவரை இத்தகைய தலைமைத்துவமே பொருத்தமானதாகும்.

### 1.4.3.4 தலையீடற்ற தலைமைத்துவம் (Laissez fair Leadership)

உதவியாளர்களுக்கு பூரண சுதந்திரம் கொடுப்பதை இது குறிக்கின்றது. முகாமையாளர் கொள்கைகள், திட்டங்களை வகுத்து செயற்பாட்டுக்கான வரையறைகளையும் தீர்மானித்த பின் முழுச் செய்முறையும் உதவியாளர்களிடமே விடப்படும். அவர்களது நடவடிக்கைகளில் முகாமையாளர் தலையிடமாட்டார்.

இந்த ஊழியர்கள் சுதந்திரமாக இயங்குவதால் அவர்களது ஆளுமையை விருத்தி செய்ய இது உதவுகின்றது. அத்துடன் ஊழியரிடையே ஊக்குவிப்பும் அதிகமாக இருக்கின்றது. எனினும் முகாமையாளர் ஊழியரின் நடவடிக்கைகளில் தலையிடாது இருப்பதால் நிறுவனத்தின் வேறுபட்ட பகுதிகள் பொதுவான நோக்கத்தினை நோக்கி செயற்படுவது பாதிக்கப்படலாம். அத்துடன் சிலவேளைகளில் ஊழியர்கள் தமது பொறுப்புக்களைத் தட்டிக்கழிக்கவும் முற்படலாம். பொது அமைப்புக்களில் வேலைப்பகிர்வை மேற்கொள்ளும்போது இத்தகைய தலைமைத்துவம் பின்பற்றப் படலாம்.

### முடிவுரை:

வேறுபட்ட தலைமைத்துவக் கோட்பாடுகள் நடைமுறையில் காணப்பட்டாலும் சமூக, சமய அமைப்புக்களைப் பொறுத்தவரை மேற்குறிப்பிட்ட தலைமைத்துவ முறைகளுள் ஜனநாயகத்தலைமைத்துவத்தைப் பின்பற்றுவதன் மூலமே விடயங்களை நிறைவுசெய்து வெற்றி பெற்றுக்கொள்ள முடியும். அதிகார ரீதியான தலைமைத்துவம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமற்றதாகக் காணப்படுவதுடன் அது பல பிரச்சினைகளை உருவாக்கி விடுவதற்குக் காரணமாக அமைந்துவிடலாம். (உதாரணம்) ஆலயங்கள். எனவே விட்டுக் கொடுப்பின் அடிப்படையில் மற்றவர்களது ஒத்துழைப்பைப் பெற்று தலைமைத்துவத்தை மேற்கொள்வதன் மூலமும் முன்னர் விபரிக்கப்பட்ட தலைவருக்கான சிறந்த பண்புகளைத் தக்கவைத்துக் கொள்வதன் மூலமே பொது அமைப்புக்களைச் சிறந்த முறையில் வழிநடாத்திச் செல்லமுடியும்.

**References:-**


APPLEBY.C.ROBERT : MODERN *BUSINESS ADMINISTRATION*

KOONTZ & O'DONNELL : *MANAGEMENT*

COLE C.A : *MANAGEMENT*

SAMUAL EILAN : *MANAGEMENT PRACTICE & MIS PRACTICE*

DAVAR .A : *MANAGEMENT PROCESS*

ALAN H. ANDERSAN : *EFFECTIVE ORGANISATIONAL BEHAVIOUR*

STONER JAMES A.F : *MANAGEMENT.*



T. வேல்நம்பி
விரிவுரையாளர்
யாழ்பல்கலைக்கழகம்.


## வளமான வாழ்வுக்கு அழகோடு,அன்பும் தேவையப்பா ..!

தோல் சிவந்த தோகையரை தேடுகின்ற ஆணினமே . . . . !
பால் போன்ற வெள்ளை மனம் தோல் நிறத்தில் இல்லையப்பா. . . . !
நல் இடையாள் நுண்ணறிவும், நல்லழகும் நற்பண்பும்
வேல் விழியை தாங்கி நிற்கும் நல் வதனமதில் காணாயோ?

மீன் ஒத்த விழியென்பர் மின்னல் பார்வை என்பர்
மான்போன்ற மருளால் விழியென்பர் ~ இவை எல்லாம்
பெண்ணழகை எம் முன் நிலை நிறுத்தும் சொற் கோர்வைகள் தான்
மண்ணுலகில் பெண்ணவளின் உள்ளழகே பெரிதென்றால் மிகையாமோ

பொருளுக்கு நிறம் வெறும் கவர்ச்சிதான் மயக்கம் கொண்டவர்கள்
அருளுக்கும், அன்புக்கும் இல்லையே நிறக் ~ கவர்ச்சி அறிவாயோ?
கவர்ச்சிதான் அழகென்று கனவு கண்டால் ~ நீ இங்கு
உவர் நிலத்தில் உன் வாழ்வை விதைக்கின்றாய் அறிவாயோ?

அழகு பெண்களுக்கு அணிகலன்தான் மறுக்கவில்லை
பழகும் பாங்கு தெரியாத பெண்ணிடம் அழகிருந்தும் என்ன பயன்
இளமையில் அழகுதான் பெரிதென ஆர்ப்பரிக்கும் ஆண் இனமே. . . !
வளமான வாழ்வு வாழ்வதற்கு அழகோடு அன்பும் தேவையப்பா. . .!



"தாகத்திற்கு முன்பே கிணறைத் தோண்டு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவள விழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

- ❖ கட்டிடப் பொருட்கள்
- ❖ மின் இணைப்புக்கள்
- ❖ சைக்கிள் உதிரிப்பாகங்கள்
- ❖ பெயின்ற் வகைகள்
- ❖ வாட்டப்பம் உதிரிப்பாகங்கள்
- ❖ பெற்றோமக்ஸ் உதிரிப்பாகங்கள்

ஆகியவற்றை தரமாகவும் மலிவாகவும்
ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள

# அம்பாள் இரும்பகம்


பிரதான வீதி, வட்டுக்கோட்டை

பவள விழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்





# ஈசன் ஓடியோ & வீடியோ
# சென்ரர்



**மாவடிச்சந்தி, வட்டுக்கோட்டை**

பவள விழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

# நிலா ஒளி

இன்றைய நவ நாகரீகத்திற்கு ஏற்ற அழகு சாதனப்
பொருட்கள்,பாடசாலை உபகரணங்கள், பாதணிகள் அன்பளிப்புப் பொருட்கள்
வானொலிப் பெட்டிகள், மணிக் கூடுகள் போன்ற தரமான பொருட்களை
மலிவான விலையில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்

நிலா ஒளி அழகு மாடம்

பிரதான வீதி, சங்கானை.

**எமது கிளை ஸ்தாபனம்:-**

சேக்கிள் சென்ரர்
பிரதான வீதி சங்கானை

பவள விழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

# SRI AMBAL STORES

**Dealers in Crosary Goods & Agro Chemicals**

*Vallai Road,* *Chankanai.*

# ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ்

**சாய்ப்புச் சாமான், அக்ரோ கிருமி நாசினி வியாபாரம், புகையிலை சுருட்டு என்பனவற்றிற்கு நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்**

**வல்லை வீதி, சங்கானை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க வகையான நிறுவனங்களின் நிர்வாகக் கட்டமைப்பும் அவற்றின் கணக்கு வைப்பு முறைகளும்

## அறிமுகம்

சங்க வகையான நிறுவனங்கள் என நாம் கருதுவது சேவையை நோக்கமாகக் கொண்ட சங்கங்கள், கழகங்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம். இங்கு சங்கங்கள், கழகங்கள் என்பது சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், பொழுதுபோக்குக் கழகங்கள், *மாதர் சங்கங்கள், வாலிபர்* சங்கங்கள், ஆலய நிர்வாக சபைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இத்தகைய அமைப்புக்கள் கிராமங்கள், நகரங்கள் எனப் பல இடங்களிலும் பதிவுசெய்யப்பட்டும், பதிவு செய்யப்படாமலும் செயற்பட்டு வருகின்றன. அத்தகைய அமைப்புக்கள் எத்தகைய நிர்வாகக் கட்டமைப்பினைக் கொண்டிருக்க வேண்டும் என்பதையும் அவை எவ்வாறு கணக்கு வைப்பு முறைகளைப் பேணுதல் வேண்டும் என்பதைப் பற்றியும் விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

## நிர்வாகக் கட்டமைப்பு

சங்க வகையான நிறுவனங்களின் நிர்வாகம் ஜனநாயக முறைப்படி நிர்வகிக்கப் படுகின்றது. நிர்வாகத்தினை அங்கத்தவர்களே தெரிவு செய்வார்கள். நிறுவனத்தின் அங்கத்தவர்கள் தேர்தல் மூலம் இவர்களைத் தெரிவு செய்வார்கள். இங்கு தெரிவு செய்யப்படும் நிர்வாக சபையானது 7 பேர் அல்லது 11 பேரைக் கொண்ட ஒரு நிர்வாக சபையாக இருக்கலாம். இதில் தலைவர், உபதலைவர், செயலாளர், உப செயலாளர், பொருளாளர், கணக்காய்வாளர் என்பவர்களை உள்ளடக்கியதாக அமையும். மேலும் சில *அமைப்புக்களில் பத்திராதிபர் என* ஒருவரையும் தெரிவுசெய்வர். இவர் பத்திரிகை வெளியீடு தொடர்பான கடமைகளை மேற்கொள்வார். இவர்களை விட மேலதிகமாகச் சிலரை நிர்வாக உறுப்பினர்கள் என நியமனம் செய்யப்படும். இதனை விடச் சங்கத்திற்கு ஆலோசனை வழங்கப் போசகர்கள் தெரிவு செய்யப்படுவர். நிர்வாக சபையில் இருக்கும் ஒவ்வொருவருடைய கடமைகளையும் நோக்குவோம்.

### 1) தலைவர்

தலைவர் என்பவரே அந்த நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொதுவானவர் ஆவார். இவர் சங்கத்தால் நடாத்தப்படுகின்ற கூட்டங்களிற்குத் தலைமை தாங்குதல், கூட்டங்களில் சங்கத்தின் *செயற்பாடுகளைத் தெரியப்படுத்துதலும் முன்* னெடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகளைக் கூட்டத்தில் முன் வைத்து ஒப்புதல் பெற வேண்டியதும் தீர்மானம் எடுக்கவேண்டியதும் இவருடைய கடமையாகும். சங்கத்தின் தலைவர் முக்கியமான ஒருவராகக் கருதப்படுவதால் அவர் மிகவும் சிறந்த ஓர் ஆளுமை உடையவராக விளங்குதல் வேண்டும்.

### 2) உபதலைவர்

உபதலைவர் என்பவர் தலைவருக்கு உதவியாகத் தொழிற்படுதலும் தலைவர் இல்லாத நேரங்களில் அவருடைய கடமைகளை ஏற்று நடாத்தலும் இவருடைய கடமையாகும்.

### 3) செயலாளர்

இவர் நிறுவனத்தின் முக்கியமான ஒருவராகக் கருதப்படுகின்றார். சங்கத்தின் *கூட்டங்களில் எடுக்கப்படுகின்ற* தீர்மானங்களையும் கொள்கைகளையும் செயற்படுத்துகின்ற கடமை இவரையே சாரும். அத்துடன் கூட்டங்களைக் கூட்டுகின்ற கடமையும் கூட்ட அறிக்கைகளைத் தயாரிக்கின்ற கடமையும் இவரைச் சார்ந்ததாகும்.

### 4) உப செயலாளர்

இவர் செயலாளருக்கு உதவியாகச் *செயற்படுவதுடன் செயலாளர்* இல்லாத சந்தர்ப்பங்களில் அவருடைய கடமைகளைப்



"அன்பு என்றால் உரிமையன்று கடமையாகும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பேற்றுச் செய்தல் இவருடைய கடமையாகும்.

### 5) பொருளாளர்

இவர் சங்கத்தின் நிதி தொடர்பான விடயங்களுக்குப் பொறுப்பாக இருப்பார். சங்கத்திற்குத் தேவையான நிதிகளைத் திரட்டுவதிலும் செய்யப்பட வேண்டிய செலவுகளை உரிய முறையில் செய்து அவை தொடர்பான கணக்குப் பதிவுகளைச் சரியான முறையில் தயாரித்துத் தேவைப் படுகின்றபோது எல்லாம் நிர்வாக சபைக்கோ அல்லது பொதுச்சபைக்கோ சங்கத்தின் நிதிநிலைமையைச் சரியான முறையில் விளக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

### 6) கணக்காய்வாளர்

இவர் சங்கத்தின் பொருளாளரால் தயாரிக்கப்பட்ட கணக்குகளைப் பரிசீலனை செய்து அவை சரியான முறையில் தயாரிக் கப்பட்டுள்ளனவா என்றும் நிறுவனத்திற்குச் சேர்க்கப்பட வேண்டிய நிதிகள் உரிய முறையில் வசூலிக்கப்பட்டுக் கணக்குகளில் சேர்க்கப்பட்டுள்ளன என்றும் செய்யப்பட்ட செலவுகள் உரிய முறையில் உரிய அங்கீகாரத்துடன் நியாயமாகச் செலவு செய்யப்பட்டுள்ளன என்றும் பொருளாளரால் காட்டப்பட்டுள்ள நிதிநிலைமை அறிக்கை உண்மையான நிதிநிலைமையைக் காட்டுகின் றனவா என்பது பற்றியும் தெளிவான ஓர் அறிக்கையினைக் கணக்காய்வாளர் தயாரித்து அதனை நிர்வாக சபைக்கும் பொதுச் சபைக்கும் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலும் சங்கத்தின் நிர்வாகச் செயற் பாடுகளில் முக்கியமானது கூட்டப்பட வேண்டிய கூட்டங்களாகும். சங்கவகையான நிறுவனங்களைப் பொறுத்தவரையில் அவை பின்வரும் கூட்டங்களைக் கூட்டுகின்றன.

i) நிர்வாக சபைக் கூட்டம்
ii) பொதுக்கூட்டம்
iii) ஆண்டுப்பொதுக்கூட்டம்
iv) விசேட பொதுக்கூட்டம்

போன்றன கூட்டப்படுகின்ற கூட்டங் களாகும்.

நிர்வாகசபைக் கூட்டம் என்பது சங்கத்தின் நிர்வாக சபையை மாத்திரம் உள்ளடக்கிக் கூட்டப்படுகின்ற கூட்டமாகும். இச்சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட தீர் மானங்களை இவை எடுத்துச் செயற்படுத்த முடியும்.

பொதுக்கூட்டம் என்பது சங்கத்தின் சகல அங்கத்தவர்களையும் உள்ளடக்கிக் கூட்டப்படுகின்ற கூட்டமாகும். இதில் ஆண்டுப் பொதுக்கூட்டம் என்பது ஆண்டுக் கொரு முறை கூட்டப்படுவதாகும். இதில் சங்கத்தின் புதிய நிர்வாக சபைத்தெரிவும் இடம் பெறும்.

விசேட பொதுக்கூட்டமானது சங்கத் தின் முக்கியமான அவசரமான தேவை களின் நிமிர்த்தம் கூட்டப்படும் கூட்டத்தைக் கருதுகின்றது.

### கணக்கு வைப்பு முறைகள்

கணக்கு வைப்பு முறைகளைப் பார்ப்பதற்கு முன் இத்தகைய நிறுவனங்கள் தமக்குத் தேவையான நிதிகளை எவ்வாறு திரட்டிக்கொள்கின்றன என்பதனை அவதானிப் போம்.

இந்நிறுவனங்களின் முக்கியமான நிதி மூலமாகக் கருதப்படுவது சந்தா வாகும். சந்தா என்பது அங்கத்தவர்களிடம் இருந்து மாதாந்தமோ அல்லது வருடாந் தமோ திரட்டிக்கொள்ளப்படும் பணத்தைக் குறிப்பிட்டு இது முன்னரே தீர்மானிக்கப்பட்ட ஒரு தொகையாகும். இதனை அங்கத்தவர் களிடம் இருந்து அறவிட்டுக் கொள்ளலாம். இச்சந்தாவில் ஆயுட்காலச் சந்தா என்ற வகையும் உண்டு.

அதாவது ஒருவர் ஒவ்வொரு வருடமோ அல்லது மாதாந்தமோ செலுத் தாது ஐந்து அல்லது பத்து வருட சந்தாவை அல்லது நிறுவனத்தால் தீர்மானிக் கப்பட்ட தொகையை ஒரே தடவையில் செலுத்துவதன் மூலம் அவர் ஆயுள் முழு வதும் அங்கத்தவராக இருப்பதனை குறிக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இந்நிறுவனமானது சந்தாவினை விட மேலதிகமாக நன் கொடைகள், அதிஸ்டலாபச் சீட்டிழுப்பு, சிற்றுண்டிச்சாலைகள், மதுபானச்சாலைகள் போன்றவற்றை நடாத்துவதன் மூலமும் தேவையான நிதியினைத் திரட்டி கொள்கின்றன. இந் நிறுவனங்கள் சேவை நோக்கமுடையவையாக இருந்தாலும் தமது நிறுவனச் செயற்பாட்டினை முன்னெடுப்பதற்காகச் சில வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. அவ்வாறு ஈடுபடுகின்ற பொழுது அச்செயற்பாட்டிற்குப் புறம்பான ஓர் வியாபாரக் கணக்கினை தயார் செய்து அதனால் வரும் இலாப நட்டத்தினை வருமானச் செலவுக் கணக்கிற்குக் கொண்டு செல்ல வேண்டும்.

அடுத்து இந்நிறுவனங்களால் தயாரிக்கப்படுகின்ற முக்கியமான கணக்குகளாக

1) கொள்ளல் கொடுத்தல் கணக்கு

2) வருமானச் செலவுக் கணக்கு

போன்றன தயாரிக்கப்படுவதுடன் நிறுவனத்தின் சொத்துக்கள் பொறுப்புக்களை வெளிக்காட்டும் முகமாக ஓர் ஐந்தொகை தயாரிக்கப்படுகின்றது. இனி இக்கணக்குகளை ஒவ்வொன்றாக பார்ப்போம்.

## கொள்ளல் கொடுத்தல் கணக்கு

கொள்ளல் கொடுத்தல் கணக்கு என்பது ஏனைய நிறுவனங்களால் தயாரிக்கப்படுகின்ற காசுக்கணக்கை ஒத்ததாகக் காணப்படுகின்றது. இங்கு நிறுவனத்தால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற பணவரவுகள் அனைத்தும் கொள்ளல் பக்கத்திலும் செலவினங்கள் எல்லாம் கொடுத்தல் பக்கத்திலும் பதிவு செய்யப்படும்.

உதாரணம்

மின்மினி விளையாட்டுக் கழகத்தின் பின்வரும் தரவுகளைக் கொண்டு கொள்ளல் கொடுத்தல் கணக்கினைத் தயார் செய்க.

| | |
|---|---|
| அங்கத்தவர்களிடம் இருந்து பெற்ற சந்தா | 3700/- |
| வாடகை | 500/- |
| விளையாட்டு உபகரணம் | 1500/- |
| ஊழியர் சம்பளம் | 800/- |
| பத்திரிகை சஞ்சிகை | 450/- |
| பழைய பத்திரிகை விற்பனை | 250/- |

மின்மினி விளையாட்டுக் கழகத்தின்
கொள்ளல் கொடுத்தல் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| சந்தா | 3700.00 | வாடகை | 500.00 |
| பழைய பத்திரிகை விற்பனை | 250.00 | விளையாட்டு உபகரணம் | 1500.00 |
| | | ஊழியர் சம்பளம் | 800.00 |
| | | பத்திரிகை சஞ்சிகை | 450.00 |
| | | மீதி (காசு) | 700.00 |
| | 3950.00 | | 3950.00 |

## வருமானச் செலவுக்கணக்கு

வருமானச் செலவுக்கணக்கு என்பது இலாபநோக்கம் கொண்ட நிறுவனங்களால் தயாரிக்கப்படும் இலாபநட்டக் கணக்கினை ஒத்ததாகக் காணப்படுகின்றது. இங்கு பெற்றுக்கொள்ளப்படுகின்ற வருமானங்கள் எல்லாம் வருமானப் பக்கம் எனக்குறிப்பிடப் படுகின்ற வலப்பக்கத்திலும் செலவினங்கள் எல்லாம் இடப்பக்கத்திலும் பதிவு செய்யப் பட்டு வருமானத்தினை விடச் செலவுகள் கூடவாக இருக்குமாயின் வரவிலும் கூடிய செலவினம் என்றும் செலவினங்களை விட வருமானம் கூடுதலாக இருக்குமாயின் அதனைச் செலவிலும் கூடிய வருமானம் எனக்குறிப்பிட்டு அத்தொகை ஐந்தொகைக் குக் கொண்டு செல்லப்பட்டுத் திரண்ட நிதியுடன் கூட்டப்படும்.

இங்கு திரண்டநிதி என்பது ஆரம்பச் சொத்துக்களில் இருந்து ஆரம்பப் பொறுப் புக்களைக் கழிக்க வரும் தொகையாகும். அதாவது நிறுவனத்தின் நிதியாண்டின் ஆரம்பத்திலுள்ள சொத்துக்கள் எல்லாவற்றையும் கூட்டிவருகின்ற தொகையில் இருந்து பொறுப்புக்களின் மொத்தத் தொகையைக் கழிக்க வருகின்ற வித்தியாசம் திரண்ட நிதியாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தொகை

ஐந்தொகை என்பது குறிப்பிட்ட திகதியில் நிறுவனத்ினுடைய சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிக்காட்டுகின்ற ஓர் கூற்றாகும்.

இனி ஓர் உதாரணக் கணக்கின் மூலம் இவற்றினை விளங்கிக் கொள்வோம்.

**உதாரணம்:-**

மின்மினி விளையாட்டுக் கழகத்தின் 2000.12.31ம் திகதி தயாரிக்கப்பட்ட கொள்ளல் கொடுத்தல் கணக்கு பின்வருமாறு

## கொள்வல் கொடுத்தல் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| *நிலுவை 01.01.2000ல்* | *2,635* | *வாடகை* | *360* |
| அங்கத்துவப்பணம் | 12,560 | பத்திரிகை | 1,235 |
| நன்கொடைகள் | 5,300 | விளையாட்டு நிர்வாகி ஊதியம் | 4,800 |
| பழைய பத்திரிகை விற்பனை | 184 | மின்சாரம் | 595 |
| கிரிக்கட் ஆட்ட டிக்கற் விற்பனை மூலம் | 18,370 | வீட்டுவரி | 340 |
| | | கிரிக்கட் ஆட்டச் செலவு | 13,272 |
| | | மைதானப் பராமரிப்பு | 585 |
| | | நீர் வரி | 652 |
| | | சுகவியர் செலவு | 1,020 |
| | | நிலுவை 31.12.2000 | 16,190 |
| | 39,049 | | 39,049 |

## சொத்துக்கள் பொறுப்புக்களின் விபரம் பின்வருமாறு

| | 01.01.2000 | 31.12.2000 |
|---|---|---|
| விளையாட்டு உபகரணம் | 2,390 | 2,300 |
| தளபாடம் | 2,500 | 2,000 |
| அலுவலக உபகரணம் | 3,600 | 3,600 |
| கொடுக்க வேண்டிய வாடகை | 100 | 120 |

மேற்காட்டிய நடவடிக்கைகளைக் கொண்டு 31.12.2000 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானச் செலவுக் கணக்கினையும் அத்திகதியில் ஐந்தொகையினையும் தயார் செய்தல்.

### செய்கை - 1)

திரண்ட நிதி கணித்தல்
(01.01.2000ல் ஐந்தொகை)

| | | | |
|---|---|---|---|
| திரண்ட நிதி | 11,025 | விளையாட்டு உபகரணம் | 2,390 |
| கொடுக்க வேண்டிய வாடகை | 100 | தளபாடம் | 2,500 |
| | | அலுவலக உபகரணம் | 3,600 |
| | | காசு | 2,635 |
| | 11,125 | | 11,125 |

### செய்கை - 2)

| | |
|---|---|
| வாடகை | 360 |
| (-) 01.01.2000ல் கொடுக்கவேண்டிய வாடகை | (100) |
| | 260 |
| (+) 31.12.2000ல் கொடுக்க வேண்டிய வாடகை | 120 |
| வருமானச்செலவுக் கணக்கில் காட்ட வேண்டியது | 380 |

### செய்கை - 3)

விளையாட்டு உபகரணம் 01.01.2000 இல் ரூபா 2390 ஆக இருந்தது 31.12.2000 இல் 2300 ஆகக் குறைந்துள்ளது. இவ்வித்தியாசம் பெறுமானத்தேய்வாகும் (90/-) இது வருமானச் செலவுக் கணக்கிற்குக் கொண்டு செல்லல் வேண்டும்.

### செய்கை - 4)

தளபாடம் 01/01/2000 இல் ரூபா 2500 ஆக இருந்தது. 31/12/2000 இல் 2000/= ஆகக்குறைந்துள்ளது. (500/=) பெறுமானத்தேய்வாகும். இதுவும் வருமானச் செலவுக் கணக்கிற்குக் கொண்டு செல்லல் வேண்டும்.

31.12 2000 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மின்மினி விளையாட்டுக் கழகத்தின் வருமானச் செலவுக்கணக்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| வாடகை | 380 | அங்கத்துவப் பணம் | 12560 |
| பத்திரிகை | 1235 | நன் கொடை | 5300 |
| விளையாட்டு நிர்வாக ஊதியம் | 4800 | பழைய பத்திரிகை விற்பனை | 184 |
| மின்சாரம் | 595 | கிரிக்கட் ஆட்ட ரிக்கட் விற்பனை | 18370 |
| வீட்டுவரி | 340 | | |
| கிரிக்கட் ஆட்டச் செலவு | 13272 | | |
| மைதானப் பராமரிப்பு | 585 | | |
| நீர் வரி | 652 | | |
| சுகவியர் செலவு | 1020 | | |
| விளையாட்டு உபகரணப் பெறுமானத் தேய்வு | 90 | | |
| தளபாடப் பெறுமானத் தேய்வு | 500 | | |
| செலவிலும் கூடிய வருமானம் | 12945 | | |
| | 36414 | | 36414 |

## 2000.12.31ல் உள்ளவாறான மின்மினி விளையாட்டுக் கழகத்தின் ஐந்தொகை

| | | | |
|---|---|---|---|
| திரண்டநிதி | 11,025 | விளையாட்டு உபகரணம் | 2,300 |
| செலவிலும் கூடிய வருமானம் | 12,945 | தளபாடம் | 2,000 |
| | | அலுவலக உபகரணம் | 3,600 |
| | 23,970 | காசு | 16,190 |
| கொடுக்கவேண்டிய வாடகை | 120 | | |
| | 24,090 | | 24,090 |

**செல்வன் வி. சுஜிதரன்**
**(சங்க உறுப்பினர்)**

## குருவின் வழிகாட்டல்

ஒரு வீட்டின் முற்றத்தில் ஒரு குழந்தை விளையாடிக் கொண்டிருந்தது. வெயிலில் தெரிந்த தனது நிழலைப் பிடிக்க அது முயற்சி செய்து பார்த்து, தோல்வியடைந்து, நிழலைப் பிடிக்க குழந்தை முன்னால் நகரும்போதெல்லாம் நிழலும் விலகிச் சென்றதால், குழந்தை ஏமாற்றமடைந்து அழ ஆரம்பித்தது.

குழந்தையின் அழுகைக்கான காரணத்தை அறிந்த தாய், அதன் வீண் முயற்சியை அதற்கு விளங்க வைக்க முடியவில்லை. அந்தச் சமயத்தில் அங்கு ஒரு சாது வந்தார். அவர் குழந்தை அழுவதன் காரணத்தைக் கேட்டறிந்து, "நான் குழந்தையைச் சமாதானப்படுத்துகிறேன்" என்றார். அவர் குழந்தையின் கையை எடுத்து அதன் தலைமீது வைத்தார். உடனே நிழலைப் பிடித்துவிட்டதாக நினைத்த குழந்தை மகிழ்ச்சியால் சிரித்தது.

இதைப் போலவே ஒரு குருவின் துணையுடனேயே நாம் அறிவைப் பெற்று அவரின் வழிகாட்டுதலுடன்தான் ஆன்மீக லட்சியத்தை அடைய முடியும்



"நல்லவனாக இரு! ஏனெனில் அதுவே மகிழ்ச்சியாக இருக்கும் வழி!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தாய்மண் போல வருமா?

என் பிஞ்சு விரல்கள்
பிசைந்த என் மண்ணை
எண்ணி ...... எண்ணி என்
நினைவுகள் சுழலும்
வந்தாரை எல்லாம் வரவேற்ற என் மண்ணாம்
சங்கரத்தை என்றால் சாதனைகள் புரியுமிடமாம்
வீரபத்திரகாளி வீற்றிருந்து எம்மூரின் தீரத்தை உலகறியச் ~
செய்திருந்தாள் அந்நாளில்...............
மூவேடு அரசர்களும் முடியோடு வேந்தர்களும் எங்கள்
திருநாட்டில் எழில் போற்றி வாழ்த்தி நின்றார்கள்
ஈழத்திருநாட்டின் இதயமெனும் என்னூரில் இன்று ~
அவலங்கள் நிகழ்ந்த போதும்
இத்தனையும் தாண்டி இந்துவாலிபர் சங்கத்தினர் ஊர் ~
சிறக்க நல்ல பவளவிழா காண்கிறது என்று
உள்ளம் பெருமகிழ்ச்சியடைகின்றேன்
என் மழலை மொழி உதிர்த்துத் தினம் நடந்த ~
பள்ளிக்கூடவெளியும்,
குளித்தெழும்பிக் குதூகலித்த கோவில் திருக்கேணியும்
அண்ணாக்கள் புடை சூழ ஆலமரத்தில் ஏறிநின்று ~
அடி வாங்கிக்கொண்ட அந்த நினைவெல்லாம் ~
பூவாய் உலர்ந்து வெறும் நினைவாகிப் போயிற்று
இலை பிடிங்கி சுத்திப் பீப்பீ குழல் ஊதி ~
ஆர்வலமாய்ப் போன உணர்வெல்லாம் ~
இன்னும் இரும்பாய் கனக்கிறது மனதிலே
முற்றத்தில் இன்னும் என் வீட்டு
மல்லிகைப்பூ பூத்தா இருக்கும் எனக்கோ தெரியாது?
அகதியாய் நான் இங்கு அன்னியபடுத்தியவனாய்
மண்ணைப்பிரிந்து மனம் கலங்கித் தவிக்கின்றேன்
எட்டடுக்கு மாளிகையும் ஏசிக்குளிர்காற்றும்
எத்தனையோ வசதிகளும் இருந்தாலும் இவ் அன்னியமண் ~
பிஞ்சு விரல் பிசைந்த என் தாய் மண்ணை போல வருமா.........?
தாய்மண்ணும் சங்கரத்தை அன்னையினைக் காக்கவெனப்
புறப்பட்ட இந்து வாலிபர் சங்கத்துக்கு என்னரிய வாழ்த்துக்கள்
உங்கள் பணி என்றென்றும் தொடரட்டும்"
"வாழ்க தமிழ் வளர்க இந்து வாலிபர் சங்கம்"

கனடா

இங்ஙனம்
**அ. யோகதாசன்**
**அ. தர்மதாசன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவழ விழா காணும் இந்து வாலிபர் சங்கத்தின் சேவையைப்
பாராட்டுவதோடு அவர்கள் சேவை தொடர வாழ்த்தும்

# கோகுலன் கிறீம் கவுஸ்





சங்கானை வீதி, சங்கரத்தை.

ஐஸ்கிறீம் வகைகள்

குளிர்பானங்கள்

ஐஸ்கட்டிகள், தயாரிப்பாளர்கள்

# கேசன் எலக்ரோனிக்ஸ்



**பிரதான வீதி, சங்கானை.**

பவள விழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

# இரஞ்சன் ஸ்ரோர்ஸ்

பிரதான வீதி, சங்கானை.

சகல விதமான பால்மா வகைகளும் கோழித்தீன் வகைகள் மற்றும் கோயில் அபிசேகப் பொருட்கள் தானிய வகைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவான விலையில் நாட வேண்டிய ஸ்தாபனம்

**இரஞ்சன் ஸ்ரோர்ஸ்**

---

பவள விழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

# கோலம் சில்க்ஸ்



✓ இன்றைய ஆடவர், நங்கையர்

✓ சகல விதமான ஆடைத் தெரிவிற்கு

✓ நாட வேண்டியஒரே இடம்

**கோலம் சில்க்ஸ்**

பிரதான வீதி, சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளம் நிறைந்து

# நல்வாழ்த்துக்கள்



**சங்கரத்தையூரைச் சேர்ந்தவரும்**

**சங்கரத்தை இந்து வாலிபர் சங்க உறுப்பினரும்**

**யாழ்ப்பாணக் கல்லூரி மாணவனுமான**

## செல்வன் தேவராஜா துஷ்யந்தன்

அவர்கள் கடந்த வருடம் இடம்பெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையிலே (2000ஆம் ஆண்டு) கணிதப் பிரிவில் 3A பெற்று எமது கிராமத்துக்கும், எமது இந்து வாலிபர் சங்கத்திற்கும் பாடசாலைக்கும் பெருமையைத் தேடித் தந்துள்ளார். பொறியியல் துறையில் கல்வி கற்க அனுமதி பெற்றுள்ள தே. துஷ்யந்தன் அங்கே பல சாதனைகளை நிலைநாட்டி சிறந்த ஒரு பொறியியலாளராக வர எல்லாம்வல்ல இறைவன் அருள் புரிவார் என்று கூறி எமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி.

பவள விழாவை இன்புற்றுக் கொண்டிருக்கும்

**இந்து வாலிபர் சங்கம்**

**சங்கரத்தை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கரத்தை மக்களையும் இந்து வாலிப சங்கத்தையும் வியந்து பாடியது

சங்கரத்தையெனும் சான்றோர்கள் வாழும் ஊரில்
செந்தமிழ் சைவப்பற்று சிறப்புற ஓங்கி நிற்கும்
எங்கணும் அன்பு வெள்ளம் சேர்ந்து
அவ்வூரில் அலை அலையாகப் பாயும்
பங்கமாம் சைவத்திற்கென்று கண்டால்
பாய்ந்தெழும் அரிமா போன்று
சங்கொலி எழுப்பி சுமந்து புரிவோமென்று
சுந்தரத் தமிழரிங்கு சூரராய் திரண்டு நிற்பார்.

காட்டாற்று வெள்ளம் பாய்ந்து
கரை புரண்டோடுமாப் போல்
வீட்டினில் வீரம் பொங்க
வீதியில் வழிந்தே ஓடும்
நாட்டினில் சைவத்திற் காங்கோர்
நாசம் வந்துற்ற தென்றால்
கட்டியே முரசம் கொட்டி
குன்றென உயர்வார் வீரர்.

வள்ளுவன் குறளைக் கற்று
வனப்புடன் வாழும் மக்கள்
தெள்ளிய கல்வி ஞானம்
தேர்ந்த நல் அறிவுமிக்கோர்
கள்ளமில் தொண்டு செய்து
கவின் பெற வாழ்வு கண்டார்
உள்ளத்தால் பொய்யாது வாழ்ந்து
உலகுக்கோர் உவமையாவார்.

என் தமிழ்த் தாயை மண்ணை
எழில் பெறு சைவம் தன்னை
பொன் நிகர் சங்கரத்தை தன்னில்
பொலிவுற காக்கும் சங்கம்
அன்னையை மதியார் தம்மை
அடி பணிந்திடா அரிய சங்கம்
கண்டனர் பவள விழாவையென்று
களிப்புற்றார் தமிழர் எல்லாம்.

எங்கணும் சைவம் வாழ
இன்னுயிர் தளைத்து ஓங்கும்
பங்கமது சைவத்திற் கென்றால்
பாழ்படும் தமிழர் வாழ்வு
செங்கதிர் உள்ள மட்டும்
செகத்தினில் சைவம் வாழும்
ஓங்கிட சைவ நீதி
உலகெலாம் அமைதி பூக்கும்.

வண்ணத் தாழ் மகனே! உன்னை
வாயார வாழத்துகின்றேன்
எண்ணத்தில் மூச்சில் எல்லாம்
எம் தமிழ் பண்பை காப்பாய்!
மண்ணில் தமிழராய் பிறப்பதற்கே
மாதவம் செய்தோ மன்றோ!
கண்ணென தமிழை மண்ணை
காப்பதுன் கடமையன்றோ?

**விகடகவி. மு. திருநாவுக்கரசு**
(ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் நம்மவர் நம் சங்கம்

வான் தொட்டு வளர் கானகத்து நெடுமரம் போல்
சாண் ஒன்றாய் முழமாய் மண்ணின் வண்ணமாய்
எண்ணி மகிழ்ந்தேநம் உள்ளம் குளிர்ந்தே
கண்மணியென கருத்திடை கொண்டிட வளர்ந்திடும்
தங்க நிகர்கொண்ட எங்கள் சங்கரத்தை
இந்து வாலிபர் சங்கம் தேன் சொட்டும் பணிபல
சிந்திட உள்ளம் பொங்கிட உணர்வு வளர்ந்திட
உவகை கொண்டாள் சங்கரத்தை மாதா
அழகை மிஞ்சிடும் பவளவிழா கொஞ்சிடும் செய்தி
கடல் கடந்து சென்றிட களி கொண்ட ~ நம்
உடன் பிறப்புக்கள் பாங்குறும் சங்கப் புகழ் சொல்ல
அரும் குழந்தையான் உன் பாதம் கெஞ்சுகிறேன்
அருள் தந்திடு கலைத்தாயே.

செந்தமிழோடு சைவம் வளர்ந்த சங்கவூர்
பங்கயர்ச் செல்வர் பாங்குடன் பலர் கூட
சிந்தையில் உதித்த சேவை முந்திட
இந்து வாலிபர் நாமம் சங்கமாய் மலர்ந்தது

ஆயிரத்து தொளாயிரத்து இருபத்து ஆறு தனில்
உயிர் எனக் காத்து பயிர் என வளர்த்தோர் வரிசையில்
வாத்தியார் வைரவநாதர் வைத்தியர் செல்லத்துரை
முன்னாள் மூதவை உறுப்பினர் கனகநாயகம் போன்றோர்
முக்கனியாய் முன்னின்று முழு மூச்சாய் உழைத்திட
அக்கினி தொட்ட கற்பூரச்சுடரொளி போல் வீசுது சங்கம்.

விட்ட சுடருக்கு நெய்யிட்டோர் நாமம் சொல்லிட
கட்டை விரல் மடிந்து எண்ணில் பட்டியல் நீளும்
தொட்ட பணிகளின் சிகரமாய் ஆயிரத்து தொளாயிரத்து முப்பத்தொன்பதில்
பிட்டியம்பதி திருவூஞ்சல் பாடலுடன் பதிகமும் அச்சேற்றிய
சங்கம் புகழ் என்றும் வெண் சங்காய் ஒலித்திடும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நாள் முதல் இந்நாள் தொட்டு தொண்டு பல
சின்னவர் பெரியவர் என சேர்ந்து செய்து மகிழ்வது போல
கரத்தை முருகன் பிட்டியம்பதி வாசல் சிறக்க
கரங்கள் இணைந்து செய்திடுவோம் இன்னும் தொண்டு பல.

சங்குடன் சேமக்கலம் கலந்து ஒலிக்க ~ மார்கழி
திங்களில் சங்க மைந்தர் ஊர் மனை தோரும்
ஓதிடும் வெண்பா கேட்டு விழித்தெழுவோர்
துதித்திட முந்திடுவோர் ஆலய வாசல் நோக்கி

இருபத்து ஐந்து ஆண்டு முன் எம் மூர்த்தோர்
பெருவிழாவாய் பொன்விழா கண்டனர்
இரு விழி கொண்டு ரசித்திட உதித்திடவில்லை ~ நாம்
சிறு மலராய் மலர்ந்த பொன்விழா மலர் கண்டு விழிப்புற்றோம்.

அவ்விழாத் தலைவன் சண்முகவடிவேல்
இவ்விழா காணும் சங்க போசகராய் வாய்த்தனன்
இலை மறை காய் போல் இன்னும் பலர்
இருந்து உரமிட திடமாய் வளருது சங்கம்.

கண்மணியாய் விளங்கிடும் சங்க இலச்சனை
நெல்மணியுடன் கற்பகதரு பனை காட்சிதர
சொல் மணியாய் மக்கள் சேவையே மகேசன் சேவை எனும்
நல் வாக்குடன் இடபமும் ஒளிர்ந்திட குளிர்த்தோம் யாம்.

வான் கடந்து வாழ்ந்தாலும் ~ நம்மவர்
தான் தவழ்ந்து மண்பிசைந்த சங்கரத்தை மாதா
கூடன் விழுந்திட விடல் ஆகாது என எண்ணி
வான் வழியாய் நிதி மழை பொழிகின்றனர்.

கனவுகள் பல தோன்ற மனமலர்கள்
நினைவினில் மெல்ல மெல்ல விரிகின்றன
மலரும் பவள மலரில் வீசும் நறு மணம்
இளைய தலைமுறை பேசும் வாசகத்தில் வாசனையாய் சேரும்

பவள விழா ஆண்டில் பண்புடன் பணி செய்து
நம் சங்கம் ~ நம்மவர் ~ நாம் இன்புறுவோமாக

**சோசி. ஆதா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எழிலானதும் ஊர் சங்கரத்தை"

1) எங்களூர் இனிய நல்ல ஊர்
எழில் கொஞ்சும் ஊர்
சங்கரத்தை நாமங்கொண்ட ஊர்
சங்கங்கள் பல உள்ள ஊர்
கங்கையும் கனியும் கடைகளும்
மலிந்த நல்ல ஊர்
திங்கள் என நன்கு மிளிர்ந்து
திக்கெட்டு புகழ் மிளிருமூர்.

2) மங்கையர்கள் போற்றி ஏற்றும்
மகிழ்வாய் பத்திரகாளியுறையுமூர்
மங்கையரிருவான வள்ளி தெய்வானையோடு
மகிழ்வாய் முருகனுறையுமூர்
தெங்கு மா பலா கமுகுடன்
தேன் சுவை வாழை உள்ள ஊர்
தங்கமனச் செம்மல்கள் வாழ்ந்து
தர்மஞ் செய்யுமூர்.

3) ஓங்கி உயர் நல்ல மாடமாளிகை
ஒப்புயர் வற்ற ஆலயம் மிளிருமூர்
தேங்காயை மிஞ்சி தேங்கி வாடாமல்
தேசமெங்கும் விற்போர் வாழுமூர்
அங்கமயிரும் ஆடை அணிகலன்
அலங்கரிப்போர் வாழுமூர்
எங்கும் புகழ் பெற்று ஓங்கி இலங்கும்
எழிலான் நம் ஊர் சங்கரத்தை.

ஆக்கம் :-
திருநாவுக்கரசு சுரேந்திரன்



"வாங்கும்போது அவன் நண்பன் கேட்கும்போது அவன் பகைவன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பவள விழா பல்லாண்டு வாழ்க!

'சங்கரத்தை' மண் சாதனை செய்த மண்!
சான்றோர்கள் பலர் வாழ ..... உயிர்க்கும் மண்!
இங்கு பூத்த இளையர் ..... ராசாக்களாய்
இந்து வாலிபர் சங்கம் நடத்தி ..... தம்
பங்களிப்பினை நல்கிச் ..... சிறப்புட்ட
பல்கலைகளில் ஊறிச் செறிக்கும் மண்!
மங்களம் அரசாகும் மண்! 'மானப்பால்'
மடியில் வைத்தெமக்கு ஊட்டிய அன்னை மண்!

இந்து வாலிபர் சங்கம் இங்கானது
'இருபத்தியாறாம்' ஆண்டில்! இதுவரை
விந்தை செய்து விளைந்தவை கொஞ்சமா?
வேர்வை சிந்தி ..... ஊர் மக்களெல்லாருக்கும்
தந்த சேவைகள் சொல்லவா? மைந்தரின்
சாதனைக்கொரு பட்டியல் போடவா?
இந்த நாள் ..... எழுபத்தைந்தாம் வயதிலும்
எழுந்து ..... 'கூனாது' நிற்பதைப் போற்றவா?

ஊர் இளைஞர் யுவதிக்கறி வூட்டி
ஒளிபடைத்தவர் ..... புலர உழைப்பதை,
ஊரிலே ..... ஏணியாக நின்று நிமிர்வதை
சீருடன் தமிழ்; செம்மண் கலாச்சாரம்
சிறக்கத் தம்மை வருத்தி முயல்வதை,
சேவையை மூச்சாய் ..... பிரதி பலன்தேட (து)
சேர்ந்து வேற்றுமை விட்டு ஜெயிப்பதை,

பாட்டில் சொல்லுகிறேன் ..... "கேளீர்", உணர்ந்துஎம்
பணிக்கு யாவரும் தோள்கொடுத் துதவீர்,
வாட்டியே குளிர் வழியும் ..... ; மழை தூறி
வணங்கும் மார்கழி மாதம் ..... ' திருவெம்பா
நாட்களில்' ஊர்க்கோவில் எல்லாத்திலும்
நாங்கள் நிற்போமே தொண்டர் களாய்; பல
போட்டி வைப்போம்! 'தேன்மாணிக்க வாசகன்!
புகழைப் பாடி விழாவும் எடுப்பமாம்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிழாக்கள் ..... எம் அயலின் மனங்களை
தென்றலாக்கிடும் புனிதத் தினங்களில்
சரீர உதவி செய்வர் 'இந்து வாலிபர்'
சகலருக்கும் கர்ணராக உதவுவர்'
சரஸ்வதி பூசை, பஜனைகள் செய்தல், தாய்ச்
சக்தியைப் போற்றல், பொங்கல், படைத்திடல்
பெரியவர் வழிகாட்ட ..... சமயத்தைப்
'பெருக்கிடல்' எல்லாஞ் சீராய் நடாத்துவார்

இது ஒருபுறம், அவருக்குள்ள பள்ளிகள்
எடுக்கும் விழாவுக்கு உதவல், பொருள் நல்கல்,
புதிய வேலைத் திட்டம் புகுத்துதல்
பெண்கள் முன்னேற நல்வழி காட்டுதல்,
விதி வசத்தினால் ஏழையாய்த் தோன்றித் தம்
சிறகு விரிக்கப் 'பலமற்ற' 'குஞ்சுக்கு'
புதிய சிறகுகள் பூட்டி அருளுதல்,
இலசவக் கல்வி அமுதம் வளங்குதல்,

தவிர, நூல் நிலையத்தில் 'தினசரி'
தந்தறிவூட்டல், விளையாட்டுத் துறை எனில்
எவை எவை சுற்றுப் போட்டிகள் உள்ளதோ
அவைகளில் மோதி வெல்லல், சிறாருக்கு
நல் விளையாட்டு முறைகள் புகட்டுதல்
நமது ஊர்ப் பெயர் ஓங்க நடந்திடல்
இவைகளோ ..... இந்து வாலிபர் சங்கத்தின்
இலச்சினையின் பின் ..... இருக்கும் உயிர்க்குரல்!

சண்ட மாரதம் குண்டுகள் வீசவும்
தர்மம் போன்று எழுந்ததிச் சங்கமாம்!
அந்தநாட் தொட்டு ஆணிவேர் ஆடாமல்
ஆண்டது; வரும் நாளையும் ஆளுமாம்!
சங்கரத்தை மண் செய்த தவப்பயன் .....
இந்த (து) வாலிப சங்கம்; அது வாழ்க!
இன்று போல் இன்னம்! பவளவிழா' பல
கண்டு; குன்றா எழிலுடன் வாழுக!

எஸ். ரி. செல்வகுமார்
(செல்வன்)
சங்கரத்தை



"நீ மற்றவர்களிடம் கொடுக்க விரும்பாததை நீ மற்றவர்களிடம் கேளாதே (பணம்)"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்காதம்

வளர்மதி சூடி வான்புகழ்
ஓங்கிட வந்துதித்த
உயர்இந்து வாலிப சங்கமுதே
மங்களம் விளங்கும் பொற்பதமே
பார்புகழ் பாமாலை கேட்டு
குங்குமமாய் சிவந்த
பவள மலர் பைங்கொடியே
சங்கரத்தை சங்கமுதே வாழ்க.

எங்கள் மதம் எங்கள் மொழி
எங்கும் விளங்கிடவே
முந்தையர் வளர்த்து எமக்களித்த
பொங்கு திகழ் சங்கமுதே
சிந்தை குளிர் சித்திரம் தீட்டும்
சங்க மைந்தர் கரத்தே
கந்தையிலும் கசங்கா விந்தையிகு
வளர் சங்கமுதே வாழ்க.

மக்கள் சேவை மகேசன் சேவையென
நீங்கா நினைவு சுடர் விட
எக்காலமும் வழிமாறாப் பொற்காலம்
எங்கும் சேவை சிறந்தோங்க
செக்கவான் நோக்கி நந்திக் கொடி
இங்கிதமாய் இனிதசைந்திட
திக்கெங்கும் சங்காதம் பவனிவர
பவளவிழா சங்கமுதே நீடுவாழ்க.

சங்கசோசி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலியாணச் சந்தையிலே

கற்றறிந்த சமுதாயம் கண்மூடி நிற்கிறது
உற்ற நம் இனத்தினிலே வேரோடி நிற்கிறது
மற்ற இனம் எல்லாம் மனம் மகிழ்ந்து வாழ்கிறது
கொற்ற சீதனத்தால் பொலிவிழந்து நிற்கிறது தமிழினம்.

உள்ளூர் சந்தையிலே காளைகளை விலை பேச
கலியாணச் சந்தையிலே காளையவனுக்கு விலை பேச
பெற்றெடுத்த தாயுமவள் பெண்ணென்பதை மறந்து
உள்ள தன் மகனுக்கு விலை பேசி நிற்கின்றாள்
கலியாணச் சந்தையிலே.

தரகர்கள் தாம் வந்து பல்லுக்கு பதம் பார்த்து
நரகத்தில் தள்ளிவிட நாடி நிற்பார் கல்யாணச் சந்தையிலே
கட்டிளம் காளையவன் கையாலாகாதவனா?
கெட்ட சீதனத்தை உதறிவிட மாட்டானா?

படிப்பித்த செலவுக்கு பத்துத் தாருங்கள்
தம்பிக்கும் தங்கைக்கும் தாராளம் தாருங்கள்
பட்டப்படிப்பு படித்தென்ன பயன் இங்கு
பாழ்பட்ட சீதனத்தால் பரிதவிக்கும் தமிழினமே.

தாய் என்றும் தாரம் என்றும் தகுதி பெறும் பெண் இனத்தை
வாழ்க்கைக்கு வழிகாட்ட வளமான வாழ்வளிக்க
கேட்டும் சீதனம் தான் சிறுமதியார் பண்பாடாம்
பாழ்பட்டுப் போகுதையோ பாவம் இந்த பேதைகளின் எதிர்காலம்.

உற்ற துணையாகி ! இன்பத்திலும் துன்பத்திலும் இணைய வருபவளை
கண் கலங்க வைத்து கண்ணீர் சிந்த வைக்கின்றீர்
சற்றே சிந்தியுங்கள் தமிழினத்தின் காளைகளே?
மற்ற இனங்களேன் மகிழ்வோடு வாழ்கின்றனர்?
வேண்டாம் வரதட்சணை என்று வீறுடனே முழங்கிடுவாய்
நீண்ட பயணத்தில் நிம்மதியே கிடைத்துவிடும்.

"சங்கரத்தையூர் குகராஜன்"



"அன்பற்ற உறவு உறவுமாகாது நட்புமாகாது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "காதலிலே சில நாள் கவலையிலே பல நாள்"

வகுப்புக்கள் முடிவடையும் மணி அடித்தது தான் தாமதம் - எல்லோரும் வகுப்பறையை விட்டு வேகமாக, சந்தோஷத்துடன் வெளியேறினார்கள்.

சாந்திக்கு மட்டும் பாடம் முடிந்தது பிடிக்கவில்லை. இன்னும் கொஞ்ச நேரம் பாடம் தொடர்ந்திருந்தால், அதுவரை மோகனை கடைக்கண்ணால் பார்த்து, ரசித்து, இன்பத்தில் மிதந்திருக்கலாம் போல் இருந்தது.

பெருமூச்சுடன் புத்தகங்களை தூக்கிக்கொண்டு நடந்தாள். கால்கள் மெதுவாக நடந்து கொண்டிருந்தது. மனம் எங்கோ மிதந்து கொண்டிருந்தது.

கண்கள் மோகன் போகும் பாதையை - அவனது காலடிகளை தரிசித்துக் கொண்டிருந்தாள். அவனது ஒவ்வொரு அடியும் நிலத்தை மட்டுமல்ல அவளது மனத்தையும் முத்தமிட்டுக் கொண்டிருந்தது.

மோகனும் அவளை ஆசையோடு திரும்பித் திரும்பி பார்த்தபடி தட்டுத்தடுமாறி நடந்து கொண்டிருந்தான்.

ஒழுங்கை மூலை வந்ததும் ஒரு கடிதத்தை கொப்பிக்குள் வைத்து அவளிடம் கொடுத்து விட்டு மறைந்து விட்டான். பத்தாவது தடவையாக அந்தக் கடிதத்தை பாடக் கொப்பியினுள் ஒளித்து வைத்து படித்தாள் சாந்தி.

*என் அன்பே!*

*இரு வேறு கருக்களாய் பிறந்த நாங்கள் ஒரு மூலக்கூறாய் இணைந்து விட்டோம். இன்று நீ சுவாசிக்கும் காற்றுப் பட்டால் என் இரத்தம் புத்துயிர் பெறுகின்றது.*

*நீ நடக்கும் காலடிகளை பூமியை விட என் இதயம் பதித்துக் கொள்கிறது. அதன் அதிர்வின் ஆணைப்படியே அது சுருங்கி விரிகின்றது. ஆம் ! நீ நெருங்கினால் அதிகரிக்கின்றது. பிரிந்தால் ஓய்ந்து கொள்கின்றது.*

*என் கண்ணே!*

*நான் வேண்டுவதெல்லாம் பொழுது விடியும் போது உன் மடியிலிருந்து என் முகம் உதிக்க வேண்டும். அந்தி சாயும் போது உன் அங்கங்களில் என் முகம் மறைய வேண்டும்.*

*அந்த ராத்திரியின் பின்புதான் அழகு நிலாவதனத்தை கிரகணம் விலக வேண்டும்....... என் இறுதி மூச்சைச் சுவாசித்தே உன் அழகுரல் உலகை உலுக்க வேண்டும்.......*

கடிதத்தின் ஒவ்வொரு சொற்களும் சாந்தியை புளாங்கிதமடைய வைத்தன. காதலென்பது எத்தனை அற்புதமான உணர்வு........ உலகத்தை சிறுக்க வைத்து விடுகிறது. காதலர்கள் இருவரையும் தனிமையில் எங்கெல்லாமோ குடியேற்றி விடுகிறது. அவளுக்கு அவனது உருவம் மட்டும் தான் தெரிகின்றது. கற்பனையில் விரிந்த காட்சிகளிலெல்லாம் இருவரும் சஞ்சரித்தார்கள். அவர்கள் சுற்றாத இடங்களில்லை. கதைக்காத கதைகள் இல்லை. கொள்ளாத உறவுகளில்லை. அவன் மகா வீரனாக... லட்சிய புருஷனாக, சகலகலா வல்லவனாக சாந்திக்கு தோன்றினான். கற்பனையிலேயே இத்தனை இன்பங்கள் விளையும் போது நிஜமாகவே வாழ்ந்தால் எப்படி இருக்கும் என பிரமித்தாள். அதற்காகவே ஏங்கி தவித்தாள்.

நெஞ்சில் புத்தகத்தை வைத்தபடி தனது கற்பனைகளை தொடர்ந்த போது......

அந்த விபரீதம் நடந்து முடிந்தது.

சாந்தி நித்திரை கொள்கிறாள் என நினைத்து நெஞ்சில் கிடந்த கொப்பியை அவளது தாயார் தூக்கிய போது - அக்கடிதம் தொப்பென விழுந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சும்மா விழவில்லை - அக்காதல் கடிதம்!

கிபீர் வீசிய குண்டைப்போல் - நெருங்கி இருந்த உறவுகளை தகர்த் தெறிந்ததோடல்லாமல் ஆழமான குழிகளை யும் அவர்களுக்கு இடையில் தோண்டி வைத்தது.

அந்த வீட்டில் நிலவிய மகிழ்ச்சி யையும், கலகலப்பையும், அந்நியோன் யத்தையும் ஆழப்புதைத்து விட்டு அதற்கு மேல் துன்பச் சமாதியை கட்டி வைத்தது.

பெற்றோர்களது எதிர்கால கனவு களை, லட்சியங்களை - அவளது கல்வி, சுதந்திரம், வசதியான வாழ்க்கை, எல்லா வற்றிற்கும் முற்றுப்புள்ளி வைத்தது அக்கடிதம்.

சாந்தி பாடசாலையிலிருந்து நிறுத்தப் பட்டாள். வீட்டினுள் அடைக்கப்பட்டாள்.

குடும்பத்தில் எல்லோரும் அழுத முகமும், வாடிய உடலோடும் வலம் வந்தார்கள்.

உணவு மேசையிலிருந்து குப்பைக் குப் போனது.

காதல் தனது குரூர விளைவின் முதல் அடியை அக்குடும்பத்தின் மீது பதித்தது.

பெற்றோரின் புத்திமதி, வெருட்டல், மிரட்டல் எதுவும் அவளை அசைக்க வில்லை. அவளை தந்திரமாக கொழும் பிற்கு கூட்டிக்கொண்டு போக பெற்றோர் முயல்வதை அவள் அறிந்து கொண்டாள்.

மோகனுக்கு செய்தி அனுப்பினாள். அன்று இரவே மோகன் வேலிக்கு அருகில் காத்திருந்தான்.

இருளில் இருவரது உடல்களும் கரைந்து மறைந்தன.

கதைகள், காப்பியங்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் லட்சியவாதிகளாக இருக் கலாம். வாழ்க்கையை பொறுத்தமட்டில் - காதலால் வாழ்க்கையை இழந்த அநேகரைப் போல், இருண்ட பாதையில் காலடி வைத்ததை அவர்கள் அறியவில்லை.

காதலுக்கு கண்ணில்லாமல் இருக்க லாம். ஆனால் காதலிற்கு பின் நீண்ட வருங்கால வாழ்க்கை ஒன்றிருக்கிறது - அதற்கு எத்தனையோ தேவைகள், பிரச்சி னைகள், கஷ்டமான போராட்டங்கள் இருக் கின்றன.......... இருவரது மன ஒற்றுமை கள், குறையாத அன்பு தேவைப்படுகிறது. இதைப்பற்றி காதலிப்பவர்களும் சிந்திப்ப தில்லை. காதலை புகழ்பவர்களும் சொல்வ தில்லை. மாறாக காதலை ஆகாயத்திற்கு உயர்த்திவிடுகிறார்கள். பொலிசிற்குக் காசைக் கொடுத்து, சாராயத்தை வார்த்து, காதலர் இருவரையும் நீதிமன்றத்தில் நிறுத்தினார்கள் சாந்தியின் பெற்றோர்கள்.

நீதி மன்றத்தில் சனக்கூட்டம் நிரம்பி இருந்தது. புதினம் பார்க்க ஊர் மக்கள் திரண்டிருந்தார்கள். பல நாட்களுக்கு பின். அம்மாவையும் அப்பாவையும் காணப் போகும் ஆவல் சாந்தியின் மனதில் இருந் தது. இருப்பினும் அவர்களுக்கு செய்த துரோகத்திற்கு உண்டான குற்ற உணர்வு தலையை குனியவைத்தது.

உறவினர்கள் எல்லோரும் ஏளனத் தோடும், வெறுப்போடும், கோபத்தோடும், அவளைப் பார்ப்பது போலிருந்தது. அந்த சனக்கூட்டத்தில் அம்மாவையும் அப்பாவை யும் கண்டு கொண்டாள்.

அம்மா காய்ந்து கருகி மெலிந்து போயிருந்தாள்.

எதற்கும் தளராத அப்பா தளர்ந்து போய் ஒரு மரத்தடியில் தலையைக் குனிந்தவாறு அழுது கொண்டிருந்தார்.

அம்மா அவளைக் கண்டதும் ஓடி வந்தாள். கட்டிப்பிடித்துக் கொண்டாள்.

ஏன்ரா சாந்தி! என்ர குஞ்சு!! ஏன்டி இப்படி செய்தாய்? உனக்கு நாங்கள் என்ன குறை வைச்சம்? உன்ர தலையில நீயே மண்ணை அள்ளி போட்டியே! எங்களை கைவிட்டிடாதை!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தியின் காலைப்பிடிச்சு கெஞ்சினாள். உருண்டு பிரண்டு ஓ என அழுதாள் சாந்தியின் அம்மா.

யாருக்காக யாரை கைவிடுவது என்று சாந்திக்கு புரியவில்லை. எது எப்படி இருந்தாலும் காதலித்தவனை கைவிட முடியவில்லை. அம்மாவினதும் அப்பாவி னதும் பரிதாப நிலையை பார்க்கும் போது அழுகையை அடக்க முடியவில்லை. கதறி அழுதாள்.

எனது காதலை நிறைவேற்றுவதற் காக பெற்றவளர்த்தவர்களை தீராத துன்பத் தில் ஆழ்த்திவிட்டேன் என மனதினுள் குமைந்தாள்.

இறுதியில் தவறு செய்த மனதோடும், ஆழமான துன்பத்தோடும், நீதிமன்றத்தை விட்டு மோகனோடு வெளியேறினாள்.

தூரத்தே சாந்தி பெற்றோர் குமுறி அழும் சத்தம் அவளது காது சவ்வுகளை குத்திக் கிழித்துக் கொண்டிருந்தது.

தான் பின்னிய காதல் வலையில் தன் வாழ்க்கையை சிக்க வைத்துவிட்டு மீட்டு எடுக்க முடியாமல் தடுமாறினாள் சாந்தி. சாந்தியின் காதல் வாழ்க்கை ஆரம்பத்தில் சற்று இனிமையாகத்தான் இருந்தது.

கொட்டில் வீடோ, அரைவயிற்று கஞ்சியோ, பாயில்படுப்பதோ அவளுக்கு ஒரு பொருட்டாக தெரியவில்லை. மோகனும் அவளை விட்டு பிரியாமல் சுற்றி சுற்றி வந்தான்.

சில மாதங்கள் கழிந்தன. மெல்ல மெல்ல வாழ்க்கைப் பிரச்சினைகள், கொள்கை முரண்பாடுகள், குடும்ப பொறுப்புகள் இருவரையும் உரச ஆரம்பித்தது.

அம்மாவின் உழைப்பில் சாப்பிட்டு விட்டு சைக்கிளில் வீதி உலாவரும் போது மோகனுக்கு காதல் இனித்தது. வெய்யி லிலும், மழையிலும் கஷ்டப்பட்டு அலைந்து சொற்ப காசை உழைத்து செலவிற்கு திண்டாடும் போதும் .......

குடும்பப் பிரச்சினைகளை அதனால் ஏற்படும் சிறு சிறு சச்சரவுகளை எதிர் நோக்கும் போதும் மனதில் கசப்புகள் ஏற்படத்தான் செய்தன.

இது தான் வாழ்க்கையின் நியதி என மனதை சமாதானப்படுத்தினாலும் - காதல் நிறைவேறினால் சொர்க்கத்தில் மிதக்கலாம் என எதிர்பார்த்தவனுக்கு –

இது மிகுந்த ஏமாற்றமாகத்தான் இருந்தது.

ஆரம்பத்தில் இருந்த கிளுகிளுப்பும், புத்துணர்வுகளும் சிறிது சிறிதாக மனதை விட்டு உலர்ந்து போவதை உணர்ந்தான் மோகன். சாந்தியின் நிலை அதைவிட மோசமானதாய் இருந்தது. பட்டு மெத்தை யும், பாஷனுக்கு ஒரு நகையும், பொழு துக்கு ஒரு உடுப்புமாக காரில் பவனி வந்தவளுக்கு இனி அந்த வாழ்க்கை மீண்டும் வராதா என்றிருந்தது. இதை எல்லாம் விட மோசமாக அவளைப் பிரிந்த துன்பத்திலேயே நோய் வாய்ப்பட்ட தந்தை சிறிது காலத்தில் இறந்து போனார்.

தொடர்ந்து அம்மாவும் போய் விட்டாள். அவர்களது பிணத்தைக் கூட இறுதியாகப் பார்ப்பதற்கு இரண்டு பக்கத்து காரர்களும் அவளை அனுமதிக்கவில்லை. சொத்துக்கள் யாவும் கோயில் சொத்துக்க ளாக மாற்றப்பட்டிருந்தன.

வாழ்க்கையே இருண்டு விட்டது சாந்திக்கு. தனது காதலுக்காக பெற்றவர் கள் கொலை செய்து விட்டது போல் குற்ற உணர்வு மனதை அறுத்துக்கொண்டிருந்தது.

போதாக்குறைக்கு அவள் கர்ப்பிணி யானாள். நாளடைவில் மோகன் வீட்டிற்கு வரும் நேரம் பிந்திக் கொண்டே வந்தது. அவளோடு கதைப்பதை விட நண்பர்களோடு ஊர் சுற்றுவதிலும், அரட்டை அடிப்பதும் விருப்பமான பொழுது போக்காக இருந்தது.

நண்பர்கள் மட்டுமல்ல, வேண்டாத பழக்கங்களும் இணைந்து கொண்டன.

இதனால் இரண்டு பேருக்கும் வாக்கு வாதங்களும் சண்டை சச்சரவுகளும் அடிக்கடி ஏற்பட்டன. அது உறவுகளை விரிசடையச் செய்தது.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காலம் இரண்டு சக்கரங்களை முன்னோக்கி தள்ளியது.

சின்னஞ்சிறிய கொட்டிலில் செத்தையை துளையிட்டுக் காற்று ஊளையிட்டுக் கொண்டிருந்தது. அதன் உபத்திரத்தை தாங்க முடியாமல் அச்சிறிய விளக்கு அங்குமிங்குமாய் நடமாடித் தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டிருந்தது.

"தரித்திரம் பிடிச்ச சனியன்! என்டைக்கு தொட்டனோ அண்டையில் இருந்து *என்ர நிம்மதி போச்சு*" தொடர்ந்து சகிக்க முடியாத வார்த்தைகளால் நிறை வெறியில் சாந்தியை பேசிக்கொண்டிருந்தான் மோகன்.

மூலையில் குந்திய படி கிழிந்த சட்டையை இழுத்து மறைத்துக் கொண்டு இருந்தாள் சாந்தி. மடியில் படுத்திருந்த குழந்தை பசியில் வீரிட்டழுதது. பால் மா வாங்க காசு இல்லை. வெறும் தேத்தண்ணியை எத்தனை தரம் கொடுக்க முடியும்?

உழைத்த காசை குடித்து விட்டு வந்திருந்தான் மோகன். இது தினம் தினம் நடக்கும் காட்சி தான்.

சாந்திக்கு இன்று ஏனோ பொறுக்க முடியவில்லை. அவள் முன்பு கடிதத்தில் எழுதியவை ஞாபகத்தில் வந்தது. கோபம் குமுறிக்கொண்டு வந்தது.

"சீரும் சிறப்புமாய் வாழ வேண்டிய என்னை ஏமாத்திக் கட்டிப்போட்டு ஏன் இப்படி சித்திரவதை செய்கிறாய்? உடுக்க ஆன துணியில்லை, பிள்ளைக்கு பால் கொடுக்க வழியில்லை."

"அதுக்கு நாவென்னடி செய்யிறது? நீ கொண்டந்த சீதனத்தை வைச்சு செலவழிக்கிறதோ? என்னாலை இயன்டதைத் தானே செய்யமுடியும்."

"உழைச்சு குடும்பத்தை காப்பாற்ற முடியாத நீ ஏன்ரா கலியாணம் செய்தனீ?"

"என்னடி சொன்னனீ" - ஓடி வந்து சாந்தியை தலைமயிரில் பிடித்து இழுத்து விழுத்தி விட்டு காலால் போட்டு உதைத்தான் மோகன்.

மடியில் இருந்து விழுந்த குழந்தை வீறிட்டழுதது.

அங்கு ஒரு பிரளயம் தொடங்கியது. பயங்கரச் சூறாவளி வீசியது. பூகம்பம் வெடித்து - உறைந்து ஓய்ந்து அமைதியானது.

ஆனாலும் அதன் விளைவு பாரதூரமாய் இருந்தது.

அன்று வீட்டை விட்டு வெளியேறிய மோகன் யாரிடமோ கடன் வாங்கி கொழும்பிற்கு போய்விட்டான். அங்கு ஒரு கடையில் வேலை செய்வதாக சாந்தி கேள்விப்பட்டாள். பல முறை கடிதம் எழுதினாள். தெரிந்த எல்லோரிடமும் தகவல் அனுப்பினாள். மோகனிடம் இருந்து எதுவித பதிலும் கிடைக்கவில்லை.

சில நாட்களின் பின் கடையில் வேலை செய்யும் ஒரு பெண்ணோடு சுற்றுவதாக கேள்விப்பட்டாள். அவளது காதலின் கடைசிக் கயிறும் அறுந்துவிட்டது போலிருந்தது.

அன்று சாந்தியின் வீட்டைத்தேடி அவளோடு படித்த சுமதி வந்திருந்தாள்.

"சாந்தி மோகனை நம்பாதை அவன் அங்கையொரு பெட்டையோடை திரிகிறதை பல தடவை நானே பார்த்தனான். இப்ப இரண்டு பேரும் ஒரு ரூமில் தான் இருக்கினமாம்."

"என்னால நம்பக் கஷ்டமாயிருக்கு சுமதி"

"சாந்தி நீ ஒரு விசரி!! நல்லாய் ஏமாந்து போனாய்!! இளமையும் அழகும் இருக்கைக்க காதல் தோன்றுவது இயற்கை தான். ஆனால் அது புனிதமானது அல்ல. அற்புதமான உணர்வுமில்லை. சரியாகச் சொன்னால் நிரந்தரமானது கூட இல்லை. எங்கோ கோடியில் ஒருத்தர் - விதிவிலக்காக காதலுக்காக வாழ்ந்தார்கள். உயிரை விட்டார்கள் என்று கேள்விப்பட்டால் எல்லோரும் அப்பிடி உண்மையாக காதலிக்கிறார்கள் என்று நினைக்கிறதே."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மோகன் என்னுடன் உயிருக்கு யிராய் பழகினார். இப்படி செய்வார் என்று கனவிலும் நினைக்க வில்லை சுமதி"

"எடி விசரி அப்படி பழகினது உண்மையான காதல் இல்லை. உனது அழகிலை, கவர்ச்சியிலை மயங்கி அப்பிடி பழக தூண்டியிருக்கிறது. அழகில்லாத ஒருவரை எவராவது காதலிக்கட்டும் பாப்பம். எந்தக் கதையிலை – எந்தக் காவியத்தில – எந்தப்படத்தில காதலியை அழகில்லாமல் காட்டுகிறார்கள்.

யோசித்துப்பார்! ஒரு படத்திலை வடிவில்லாத ஒரு கதாநாயகியை காதலியாக நடிக்கட்டும் - "இந்த மூஞ்சைக்கு காதல் ஒரு கேடா" என்று எழும்பி போயிடுவார்கள். கற்பனையிலேயே விரும்பாத ஒன்றை நிஜத்தில் விரும்புவார்களா? நெருங்கிப்பழக அன்பு தேவையில்லை. கவர்ச்சி போதும்.

மற்ற அன்புகளுக்கு அழகு தேவைப்படுவதில்லை. காதலிற்கு மட்டும் அழகு தேவைப்படுவது - ஏன்? அது அடிப்படையில் கவர்ச்சியாலும் காமத்தாலும் ஏற்படும் உணர்வு."

சுமதி போய்விட்டாள். சாந்தி யோசித்தாள். அவள் வாழ்க்கையில் வறுமைக்கும் துன்பத்திற்குமான பாதையில் காதல் கம்பளம் விரித்தது.

மழைச்சாரல் குளிர்ச்சியாக ஆரம்பித்து, பனிக்குளிரில் அரவணைத்து, இளவேனியில் தகித்து கடுங்கோடையில் பாளங்களாய் வெடித்துவிட்டது அவள் காதல் வாழ்க்கை. காதலித்த பலருக்கு இதுதான் கதி. காதலித்த ஒரு சிலர் வசதியாக வாழலாம். அதில் அநேகர் தாங்கள் காதலிப்பவரின் அந்தஸ்து, குடும்பநிலை, சாதி, சமயம் எல்லாவற்றையும் பரிசீலித்த பின் அது தகுதி என்று அறிந்த பின் காதலிப்பவர்கள். அதற்கு பெயர் காதலல்ல. அது சுயம்வரம். எதையும் எதிர்பாராது ஒரு ஆத்மாவை நேசிப்பது தான் காதல். ஆனால் அக்காதலின் வேகம் அநேகருக்கு காலப்போக்கில் சிறிது சிறிதாக மறைந்து விடுகின்றது என்பது தான் மனவருத்தமான உண்மை.

இன்று தான் வேலைக்கு சேர்ந்திருந்தாள் சாந்தி. அனாதை விடுதியில் சமையல் வேலை. சாப்பாடு, தங்குமிடம், பிள்ளைக்கு படிக்க வசதி என்பன ஒழுங்கு செய்வதாக சொல்லியிருக்கிறார்கள். ஒரு காலத்தில் ஆளுக்கொரு வேலைக்காரர்களுடன் அவள் வாழ்ந்த பெருமையை இப்போ நினைக்கவும் முடியவில்லை.

அனாதை விடுதியின் ஜன்னல் வழியே றோட்டை பார்த்தாள் சாந்தி. ஜோடி ஜோடியாக....... இளசுகள்...... சிரித்துக் கதைத்துக் கொண்டு...... எத்தனையோ... கனவுகளோடு...... கற்பனைகளோடு......

"காதல் செய்வீர் - காதல் செய்வீர் - சாதல்வரினும் காதல் செய்வீர் என கவிஞர்கள், கதாசிரியர்கள் தூண்டிக் கொண்டே இருக்கிறார்கள்.

நிஜத்தை – யதார்த்தத்தை – எழுதாமல் பொய்யை எழுதும் அவர்களது பேனாவை பறித்து அந்த பேனாவாலேயே கழுத்தில் குத்தி அவர்களை கொலை செய்ய வேண்டும் போலிருந்தது சாந்திக்கு.

**Dr. க. சிவனடியான்**

**அழகுக்காக உண்டாகும் காதல் ஓர் ரோஜாமலர் போன்றது**
**அது விரைவில் வாடிவிடும்**
**பணத்துக்காக உண்டாகும் காதல் கண்ணாடி போன்றது**
**அது கீழே விழுந்ததால் உடைந்து விடும்**
**அன்புக்காக உண்டாகும் காதல் அஜந்தா ஓவியம் போன்றது**
**அது என்றென்றும் அழியாது.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவள விழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

# கலைமகள் விலாஸ்

## சைவ உணவகம்

பிரதான வீதி, சங்கானை.

கிளை :- நவீன சந்தை
பண்டத்தரிப்பு

மு. சரவணபவன்


---


பவள விழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

ஆங்கில மருந்து விற்பனையில்

பலவருடங்கள் முன்னோடிகள்

# மெடி லாண்ட்

## ஆங்கில மருந்து நிறுவனம்

பிரதான வீதி, சங்கானை.

T.P 070 – 212756



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவள விழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

"மக்கள் போற்றும் மகத்தான
ஜவுளிகளின் சாம்ராஜ்யம்"

# சிவகணேசன் ரெக்ஸ்

**41, பெரிய கடை,**
**யாழ்ப்பாணம்**

T.P 2063

---

பவள விழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

சுபமுகூர்த்த பட்டுப்புடவைகளுக்கு
கைராசியான ஸ்தாபனம்

# சீமாட்டி
# புடைவைக்கடல்

நாளுக்கோர் புதுமை நாடுவது உண்மை

**122, மின்சார நிலைய வீதி,** **யாழ்ப்பாணம்**

T.P 021-2196 Fax - 2102

**எமது கிளை :-**
**மங்கை சில்க்**
15, நவீன சந்தை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

# நலம் கெடப்புழுதியில் எறிவதுண்டோ?

குக்கூ...... குக்கூ......

குசினிக்குள் கையில் வேலையாக இருந்த சாஹித்யா வாயிலில் அழைப்பு மணியோசை கேட்டு கையை சேலைத் தலைப்பில் துடைத்தவாறு வியர்த்து விறு விறுக்க கதவைத் திறக்க வாசலில்.... வித்தகன். "நீங்களா" எனக்கேட்டு சாஹித்யா ஆச்சரியப்பட்டு நிற்க வாசலில் நின்ற வித்தகன் சாஹித்தியாவையும் வாயிலில் மாட்டியிருந்த "டாக்டர். S. நிரோஜன் M.B.B.S" என்ற பெயர்ப்பலகையையும் மாறிமாறிப் பார்த்தவாறு நிற்க அவ்வேளையில் சுதா கரித்துக் கொண்டவள் சாஹித்யா தான் வ...... வாங்க.. Mr. வித்தகன்

உள்ள வாங்க...... அவர் இன்னும் Hospital இல் இருந்து வரவில்லை. ஆனா வாறநேரம் தான் நீங்க உள்ள வந்திருங்கோ. மிகவும் படபடப்பாக கடமைக்காக பேசிக்கொண்டு உள்ளே தனக்கு முன்னால் போகும் சாஹித்யாவை வித்தகன் கண்கொட்டாமல் பார்க்கிறார். காய்ந்து கறுத்து, மெலிந்து, உடம்பிலே சாதாரண ஒரு நூல்ப்புடவையும் இழுத்து முடிந்த கொண்டையும் நெற்றியி லும் உச்சியிலும் வைத்த குங்குமம் வியர்வையின் உதவியால் மூக்குத்தியுடன் பாலமமைத்திருக்க கண்களிலே ஒரு நிரந்தர சோகம்.

அடக்கடவுளே! என்ர சாஹிக்கு இப்படியொரு நிலைமை எப்படி ஏற்பட்டது. பாடசாலையில் எனது நெருங்கிய தோழி சாஹித்யா, பல்கலைக்கழகத்தில் எனது..... எனது ஆருயிர் காதலி சாஹி இன்று தூக படிந்த ஓவியமாக மாறிய காரணம் தான் என்ன? வளாக வாழ்க்கையிலே சாஹித்யா என்றால் வாலிப இளைஞர்களின் "கனவுத் தேவதை" ரசிகர் உள்ளங்களின் "கலை யரசி" கற்பிக்கும் பேராசிரியர்களுக்கு "அதி விசேட மாணவி" இன்று எனது கண் களையே நம்பமுடியாத அளவுக்கு முப்பது வயதிலே நாற்பத்தைந்து வயதிற்குரிய தோற்றம் எனது சாஹிக்கு வந்ததேன்? சாஹித்யாவுக்கு ஒருக்கா பார்ப்பவரை மறுமுறை பார்க்க வைக்கும் தோற்றம்.

அளவான, அழகான உடலமைப்பு, சங்கு போன்ற கழுத்து அதிலே உரிமையுடன் தொங்கும் வைரக்கல் பதித்த சங்கிலி முழங்காலைத் தொடும் கரிய அடர்த்தியான இரட்டை ஜடை. பிறை போன்ற நெற்றியிலே அடர்த்தியான புருவங் களுக்கிடையே வட்டவடிவமான கறுப்புச் சாந்துப்பொட்டு அப்பிள் போன்ற கன்னங் களுக்கும் வில் போன்ற கண்புருவங் களுக்குமிடையே எல்லோரையும் கவர்ந் திழுக்கும் காந்தம் போலவும் சூரியக் கதிர் கள் போலவும் கூர்மையும் ஒளியும் பொருந் திய இரண்டு கருவண்டுகள், அவ்வண்டு களுடன் போட்டிபோட்டு ஜொலிக்கும் வைரக்காதுத் தூக்கணங்கள் இத்தகை அழகு சிற்பமான எனது சாஹி இன்று... இன்று

"என்ன யோசிக்கிறீங்க வித்தகன்" என்று சாஹித்யா கேட்கத்தான் வித்தகன் நிகழ்காலத்துக்கு வந்து, தான் அங்குள்ள கதிரையொன்றில் அமர்ந்திருப்பதை உணர்ந் தார். "நீங்க என்ன Drink குடிப்பீங்க hot or cool எது கொண்டு வர"

"இப்ப ஒண்டும் வேண்டாம் சாஹி, நீ இப்படி வந்து இருந்து கதையன், சாஹி... உனக்கு என்ன நடந்தது... ஏன் இப்படி உருமாறிட்டாய், என்னுடைய அழகு தேவதை சாஹி.........

"Stop Mr. வித்தகன்........

நான் இப்போ உங்க சாஹி இல்லை, நான் Mrs. நிரோஜன் நீங்க என்னை சாஹித்யா என்றே கூப்பிடுங்கோ."

ஓ I'm sorry Mrs. சாஹித்யா very sorry.

ம்..... Mrs. சாஹித்யா நீங்க இப்பவும் வீணை, புல்லாங்குழல் எல்லாம் வாசிக்கிறனீங்கள் தானே!

உங்க கணவர் டாக்டர் நிரோஜ னுக்கும் உங்கட பாட்டுக்கச்சேரி, வயலின் கச்சேரி, வீணை, புல்லாங்குழல்கச்சேரி, பட்டிமன்றம், கவியரங்கம் எல்லாம் பார்த்துப் பார்த்து அவரும் இப்ப உங்கட கலை உலக ரசிகனாகியிருப்பார் தானே?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம்... ஆ......ஓம்...... ஓம் வித்தகன்.

Mrs. சாஹித்யா! நான் இவ்வளவு காலமும் கொழும்பில் இருந்ததால உங்கட வெடிங்குக்கும் வரேல, இவ்வளவு நாளும் உங்கட புரோகிராம்ஸுகளும் பார்க்க முடியாமல் போயிட்டுது.

நான் நாளைக்கு திரும்பக் கொழும்புக்குப் போகப்போறன் அதுக்கிடையில்...... உங்களையும் உங்கட நிரோஜனையும் பார்த்திட்டுப்போகலாமென வந்தனான். அப்ப நான் போயிட்டு வாறன்" என்று நிரோஜன் எழும்ப, சாஹித்யா ம்.... ஆ.... இல்லை.... இருங்கோ தேத்தண்ணி போட்டுக்கொண்டு வாறன் இருங்கோ எனக்கூறி குசினிக்குள்ளே போக அழுகை பொங்கிப் பொங்கி வந்தது.

நானா......... நானா இப்படி பொய் சொன்னன் அதுவும் எனது அன்புக்குரிய வித்தூவிடமா? எப்படி என்னால் அப்படி நடக்க முடிந்தது. "வித்தகன்" என்ன ஒரு இனிய நண்பன். நான் கவிதை எழுதினாலென்ன, கதை எழுதினாலென்ன அவற்றை உடனேயே வாசித்து, விமர்சித்து, என்னை வழிப்படுத்தும் நல்ல நண்பன். பட்டிமன்றங்களில் எப்போதும் நாமிருவரும் ஒரே அணியிலேயே விவாதிப்போம். எனது இசைக்கச்சேரிகளுக்கு ஓடி ஓடி ரிக்கற் விற்று வறிய மாணவர் கல்வி வளர்ச்சி நிதிக்காகப் பாடுபட்டு நிதி சேகரித்ததுடன் கச்சேரிகளையும் சிறப்புற ஆக்கிய பெருமை வித்தகனையே சேரும். அவ்வாறு எனது முன்னேற்ற மெல்லாவற்றுக்கும் ஏணியாக இருந்த வித்தா நாளாவட்டத்தில் எனது உள்ளத்திலும் மெல்ல மெல்லக் குடியேறி விட்டதில் எனக்கு வியப்பொன்றுமில்லை.

ஆனா...... இன்றைக்கு....... என்னுடைய வித்து எனக்கில்லையே.

அம்மா! சாதகம், சாதி இரண்டையும் சாட்டி கண்ணீர் என்னும் கூரிய ஆயுதத்தால் எங்கள் தூய்மையான அன்புப் பிணைப்பை அறுத்து விட்டாவே? அந்தஸ்து, சாதி, மதம், சாத்திரம் எல்லாம் பார்த்து அம்மா எனக்குத் தேர்ந்தெடுத்துத்தந்த மாப்பிள்ளை தான் டாகடர். நிரோஜன். அவர் மிகவும் பிரசித்தம் வாய்ந்த ராசியான டாக்டர் தான். அவர் தனது நோயாளிகளுக்கு உடல் நோயைத் தீர்க்க மருந்து கொடுப்பார். ஆனால் எனது உளநோய்க்கு?

நான் திருமணமான புதிதிலே எவ்வளவு எதிர்பார்ப்புக்களுடன் நிரோஜன் வீட்டிற்கு வந்தனான். திருமண அத்தடி முடிந்த ஒரு நாள் காலை சுவாமி அறையில் ஒரு பாயிலே எனது வாத்தியக் கருவிகளை எடுத்து அடுக்கி வைத்து அவற்றிற்குத் தூப தீபம் காட்டிய பின்பு எனது வீணையை எடுத்து சுருதி கூட்டி "பாவயாமி ரகுராமம்" என்ற இராக மாலிகையை பாடத்தொடங்க வாசலில் நிழலாடியது. இரண்டு கைகளையும் மார்பில் கோர்த்தவாறு கண்களில் தீப்பொறி பறக்க எனது கணவன் தான் வாசலில்,

"என்னடி இது தேவடியா வீடெண்டு நெச்சியா எந்த நேரமும் கூத்தும் கும்மாளமும் போட கம்பசில் போட்ட ஆட்டம் காணும் இங்க எனிமே அடக்கொடுக்கமாய் இரு. அப்பிடி இருக்க முடியாட்டி இருக்க வைப்பன்" என்று கூறியவாறு வீணையைத் தூக்கி அப்பாலே வீச, அது புல்லாங் குழல்களுக்கு மேலே விழுந்து அவை நொருங்க, தந்திகள் தாறுமாறாக அறுபட்டன. அன்று தொட்ட அபஸ்வரம் ஸாகித்யத் துடன் சேர்ந்த அபஸ்வரமாகியது.

இன்று வரை சந்தேகம்! சந்தேகம்! சந்தேகம் தான். பத்திரிகைக்கு எழுதப்படும் ஆக்கங்கள் காதல் கடிதங்களாகவும் இசை மீட்டல் நாய் குரைப்பாகவும், இசைக்கருவிகள் விறகு கட்டைகளாகவுமே கருதப் பட்டன. கண்ணாடிக்கு முன்னால் நின்றால் சந்தேகம், தலைவாரினால் நாட்டியக்காரி எனும் பட்டம், இவை மட்டுமா? சந்தேகத்தின் உச்சம்! முழங்காலைத் தொட்ட சாட்டை போன்ற தலைமயிர் முதுகளவிற்கு அரியப்பட்டுவிட்டது சல்வார்கம்மீஸ், சட்டைகள் என்பன காணாமல்ப்போய் நூல்ப் புடவை மட்டுமே, பரம்பரை சொத்தான வைர நகைகள் வங்கி லொக்கரில், மஞ்சள் கயிறு மட்டுமே இன்று கழுத்திலுள்ளது. வெளி உலகத்தை கண்டு நாட் கணக்காகி விட்டது. இன்று அம்மாவும் இல்லை. அம்மாவின் கண்ணீரிற்காக கைவிட்ட வித்தகனுமில்லை. மொத்தத்தில் பழைய துடிப்பான சாஹித்யாவுமில்லை. ஆனால் இவ்வளவு சந்தேகங்கள், கவலைகளுக்கு மிடையே கடவுள் விட்ட ஒரே ஒரு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுகூலம் தனது பழைய காதலனான வித்தகன் பற்றியோ இல்லை தனது காதலைப்பற்றியோ கணவன் நிரோஜனுக்கு தெரியாதது மட்டுமே. தெரிந்தால்!? நினைக்கவே முடியாத பயங்கரத்தை நினைத்தபடி தான் தயாரித்த தேனீரை ட்ரேயில் வைத்து ஹோலில் இருந்த வித்தகனுக்கு நீட்ட,

"என்ன Mrs. சாஹித்யா முகம் எல்லாம் ஒரு மாதிரி இருக்கு"

"இல்ல... எனக்கொண்டுமில்லை...... சும்மா தான்........." என சாஹித்யா சமாளிக்க, மேலும் அவளுக்கு சங்கடத்தை ஏற்படுத்தாமல்,

"அப்ப நான் போட்டு வாரன் Dr. நிரோஜன் வந்தால் சொல்லுங்கோ"

என்றவாறு வித்தகன் வெளியே வரவும் ஒரு சிவப்பு நிற டொயோடா வாசலில் வந்து நிற்கவும் சரியாக இருந்தது. அதிலிருந்து இடிஅமீனின் உருவத்தை ஒத்த ஒருவர் இறங்கி வர அவரை வித்தகனுக்கு அறிமுகப்படுத்து முகமாக சாஹித்யா முன்னால் வந்து,

"இவர் தான் எனது கணவர் Dr.நிரோஜன்"

என்றும் கணவனிடம் திரும்பி,

இவர் என்னுடைய பட்ச்மேற் Mr.வித்தகன் என்றும் புன்சிரிப்புடன் அறிமுகப்படுத்த,

"ஓஹோ உன்னுடைய முன்னாள் காதலனும், இந்நாள் கள்ளக்காதலனுமாகிய திருவாளர் வித்தகன் இவர் தானா என்ற இடியோசை அப்பகுதி முழுக்க எதிரொலித்தது.

**பவானி சுந்தரராஜா**
**"கமலவாசா"**
**சித்தன்கேணி.**

☞ மருண்டு நோக்கும் மானின் பார்வையும்
மயங்க வைக்கும் மையற்ற விழிகளும்
நீண்டு தொங்கும் நிழல் போன்ற கேசமும்
முழுக்க மூடிய முத்தானை மார்புந்தான்
காதல் மரத்தை பழுக்க வைக்கின்றன.

☞ காதல் இல்லாமல் ஒரு திருமணம்
திருமணம் இல்லாமல் ஒரு காதல்
இரண்டிலும் கிடைப்பது தோல்வியே.

☞ செம்மையான காதலில் ஈடுபட்ட உள்ளங்களை பிற மென்மையான உள்ளங்கள் நேசிப்பது இயற்கை.

☞ தோல்விகளை தாங்கிக் கொள்ளலாம், சகித்துக் கொள்ளலாம் ஆனால் ஒருமுறை பெற்ற அனுபவத்தையே மறுமுறை பெறக் கூடாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “எங்கும் புகழ் பெற்றிலங்கும் சங்கரத்தை” சில தகவல்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து 8 மைல் தொலைவில் உள்ள கிராமம் வட்டுக் கோட்டை. அதன் ஒரு பகுதியே சங்கரத்தை. அக் கிராமத்தைப் பற்றி சில தகவல்களைத் தரு கின்றோம்.

இத்தகவல்கள் எதிர்கால ஆய்வாளர் களுக்கு ஓரளவு உதவும். இவ் ஆய்வு ஒரு கன்னி முயற்சியாகும். மேலும் தகவல்கள் கிடைக்கும் பட்சத்தில் பிற் சேர்க்கையாய் இணைக்கப்படும். எங்கள் அறிவுக்கேற்ப கேள்வி மூலமான தகவல் களே இவையாகும்.

சங்கரத்தையூர்
**சி. சபாநாதன்.**

- மாவட்டம் : யாழ்ப்பாணம்
- பிரதேசம் : வலி மேற்கு
- பிரதேச செயலகம் : சங்கானை
- பிரதேசசபை செயலகம் : சுழிபுரம்
- பிரதேச செயலர் : நா. வேதநாயகம்
- பிரதேச சபைத்தலைவர் : *ந. திரிலோகநாதன்*
- கிராம சேவகர் பிரிவு : யா/159, சங்கரத்தை
- கிராம சேவகர் : க. விஜயவேல்
- ப.நோ.கூ.சங்கம் : வலி மேற்கு, சங்கானை

கிளை.இல. 29, சங்கரத்தை – துணைவி

- பிரதான தொழில்கள்: விவசாயம் வர்த்தகம் அரச பணியாளர்கள்
- சிறு குறிச்சிகள் : ஓடக்கரை/குளிப்பன்

**அரச உயர் பதவி வகித்தோர்**

1) எஸ். ஆர், கனகநாயகம்: சட்டத்தரணி *மூதவை உறுப்பினர்*
2) கனகாஸ்வரன் : ஜனாதிபதி சட்டத்தரணி
3) எஸ். ராசலிங்கம் : மத்திய வங்கி *நிதிக்கட்டுப்பாட்டாளர்*
4) இ. கார்த்திகேசு-வடமாநில ஆணையாளர் *வருமானவரி இலாகா*

சட்டத்தரணிகள் : எஸ். ஆர். கனகநாயகம்
க. கனகாஸ்வரன்

*ஆயுள்வேத வைத்தியர்கள் :* *அப்பாத்துரை*
கார்த்திகேசு
எஸ். அம்பலவாணர்
முறிவு வைத்தியர்

ஆங்கில வைத்தியா:
டாக்டர் ஜீ. செல்லத்துரை
டாக்டர் R. இராஜதுரை
லயன் க. சிவனடியான்

சமாதான நீதிவான்கள் :
1) சிவத்தொண்டர் யோகசுவாமிகளின் *சீடன், காலி சிவன் கோயில்,* பத்திரகாளி கோயில் ஆலய பரோபகாரி *அ. தில்லையம்பலம்*
2) ஆ. சங்கரப்பிள்ளை
3) நா. ஜெயரஞ்சிதன்
4) வே. சி. சொக்கலிங்கம்
5) ச. வீரவாகு

சமயப்பணியாளர்கள் :
க. வைரவநாதர்
மா. இராசதுரை
*நா. நடராசா*
சி. கனகநாயகம் ஆசிரியர்
வி. தருமலிங்கம் (தருமண்ணை)

*கிராமசபை உறுப்பினர்கள் :* *ஈழநாடு*
இராசையா சண்முகம்
எஸ். அம்பலவாணர்
எஸ். இலட்சுமணநாதன்
இரட்ணசிங்கம்

பாடசாலை ..... 01 :
சின்னம்மா வித்தியாசாலை
ஸ்தாபகர் : சித்தியவான் கணபதிப்பிள்ளை
22.06.1936
அதிபர் : திரு. வி. சிவானந்தம்

ஆலயங்கள் :
1) பத்திரகாளி அம்பாள் ஆலயம்
2) *கரந்தைக்குளவத்தை முருகன் ஆலயம்* (சாஸ்திரியார் மடம்)
3) ஆஞ்சநேயர் கோவில்
4) சிறிய வைரவர் கோவில்கள்

1) பத்திரகாளி கோயில் பரிவாரங்கள் : *பிள்ளையார், வீரபத்திரர் பத்திரகாளி சமேத வீரபத்திரர், நவக்கிரகம், வைரவர் சண்டேஸ்வரி*
2) முருகன் ஆலயம் : பிள்ளையார், வைரவர், ஆஞ்சநேயர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதமகுரு : பா. சதாசிவக்குருக்கள்
தபாலகம் : சங்கரத்தை
ஆரம்பம் : 02.09.1955
அ. அமிர்தலிங்கம்
பாராளுமன்ற உறுப்பினர்
(வட்டுக்கோட்டை தொகுதி)
நாகரத்தினம் திருநாவுக்கரசு
க. நடராசா (36)
எஸ். ரி. நந்தகுமார் : 1996.06.15

கட்டுப்பாட்டுத் தபாலகம்: வட்டுக்கோட்டை.

## நீர் விநியோகத் திட்டம்

ஆரம்பித்தவர் : ஆ. தியாகராசா
பாராளுமன்ற உறுப்பினர்
(வட்டுக்கோட்டைத்தொகுதி)
திறந்து வைத்தவர்: தா. திருநாவுக்கரசு
பாராளுமன்ற உறுப்பினர்
(வட்டுக்கோட்டைத்தொகுதி)
கொள்கலன் : 7500 கலன்கள்
யுனிசெப் உதவித்திட்டம்

## குளங்கள்

1. நடுவே குளம்
2. கொம்பத்தாளை
3. திக்கராயன் குளம்

## கேணி

1. நுழைவாயில் கேணி
2. குளிப்பொன்

சங்கானை சங்கரத்தை வீதி பெருப்பித்து
அமைத்தவர் : அ. நாகரத்தினம்

சங்கரத்தை ஐக்கிய
பண்டகசாலைஸ்தாபித்தவர்: எஸ்.வி.பிள்ளை
நாகரத்தினம்
கந்தையா
க. சின்னத்தம்பி நிதிஸ்தர்

1) ஆயுள்வேத வைத்தியர் முறிவு வைத்தியத்தில் பிரபல்யமிக்கவராக இருந்தவர் :

2) பண்டிதர் சு. செல்லத்துரை 26 வருடகால ஆசிரிய பணியில் அரைநாள் லீவு எடுத்துச் சாதனை புரிந்தவர்

1) ஈழநாடு இராசையா சண்முகம்
தமிழ் நாடு அச்சுக்கூடம் ஸ்தாபித்து நடாத்தியவர்

☞ சங்கரத்தை சமூகசேவை அமைப்புக்கள்

1) இந்து வாலிபர் சங்கம்....
வெ. மகிந்தன்
2) கிராம அபிவிருத்திச் சங்கம்....
நா. ஜெயரஞ்சிதன்
3) மாதர் அபிவிருத்திச் சங்கம்....
தி. மாலதி
4) சனசமூக நிலையம்
சி. குமரகுரு

1) சின்னம்மா வித்தியாசாலை :
சித்தியவான் கணபதிப்பிள்ளை
2) கிராம அபிவிருத்திச் சங்கம் :
ஆ. சங்கரப்பிள்ளை
ஆ. தியாகராசா : பா.உ.
3) மாதர் சங்கம்: க. வைரவநாதர்
(அரச நிதி மூலம்)

4) முருகன் கோவில் : அடியார்கள்
பிள்ளையார் மண்டபம் :
டாக்டர் பாலசுப்பிரமணியம்
வைரவர் கோவில் :
வி.எஸ். சொக்கலிங்கம் ஜே.பி
தீர்த்தக்கிணறு : நடராஜா குடும்பம்

5) பத்திரகாளி ஆலயம் :
இருமருந்த முதலியார் பரம்பரையில் வந்த முதன்மையினரும் அவர் பரம்பரையை சேர்ந்தோரும்.
நவக்கிரக மண்டபம் :
நல்லதம்பி ஆறுமுகம்
மணிக்கோபுரம்: இ. வெள்ளியம்பலம்
வீரபத்திரர் மண்டபம் (திருத்தி அமைப்பு):
ஆறுமுகம் சிவானந்தன்
(அம்பிகை அடியார் நிதி உதவியுடன்)

பிள்ளையார் தேர் : ஆ. மகேந்திரம்
அம்பாள் தேர் : அம்பிகை அடியார்கள்
நிதி உதவியோடு
நா. பரமராசா
க. வேலுப்பிள்ளை
6) பூந்தோட்டம் : ஆ. தில்லையம்பலம்
ஜே.பி
சங்கரத்தை நுழைவாயில்கேணி :
ஆ. தில்லையம்பலம் ஜே.பி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கங்கள் சங்கமிக்கும் சங்கரத்தை

தாய்மொழியாம் தமிழ்மொழி தழைத்தோங்கிட தமிழ்ச்சங்கம் அமைத்த மூவேந்தர் வரலாற்றை நன்கு அறிந்த தாய்மொழிப் பற்றுடைய சைவமக்கள் செறிந்து நிறைந்து வாழும் யாழ் குடாநாட்டின் ஓர் சிறிய பகுதி சங்கரத்தை கிராமம்.

இக்கிராமத்தே வாழ்ந்து வாழ்கின்ற மக்கள் சங்கங்கள் அமைத்து அச்சங்கங்கள் வாயிலாக தங்கள் தாய்மொழியையும் சமயத்தையும் கட்டிக்காத்து வளர்த்து வந்ததோடு, கிராமத்தையும் வளர்ச்சிப் பாதையில் மேல் ஓங்க ஆக்கபூர்வமான சேவைகள் பற்பல ஆற்றி வருகின்றனர்.

இன்று இக்கிராமத்தில் சேவைகள் ஆற்றி வரும் சங்கங்களில் முதல் தோற்றுவிக்கப்பட்ட சங்கம் இந்து வாலிபர் சங்கமாகும். அரும் பெரும் சேவைகளின் பயனால் வலிவும் பொலிவும் பெற்று வளர்ச்சியில் உச்சி நோக்கி நகரும் சங்கம் இன்று பவளவிழாப் பாதையில் நடைபயிலுகின்றது.

அழகுமிகு பாவையை அலங்கரிக்கும் பவளமாலை பாவையால் அழகு பெறுகிறதா அல்லது பாவை பவளமாலையால் அழகு பெறுகின்றதா என வியக்கும் வண்ணம் இன்று சங்கரத்தைக் கிராமமும் சங்கங்களும் காட்சி தருகின்றன என்றால் அது மிகையன்று.

கிராம வளர்ச்சிக்கு இயற்கை வளங்களும் அவற்றை பயன்படுத்த மனித உழைப்பும் அவசியம். முப்புரமும் நெல்வயல் நிலங்களால் சூழப்பட்ட எமது கிராமத்தின் வளத்தை வழுக்கையாறு காத்து வருகின்றது. இங்கு வாழ்ந்த வாழ்ந்து வருகின்ற கிராமவாசிகளின் பிரதான தொழில் விவசாயமும் கால்நடை வளர்ப்புமாகும். இயற்கை வளத்துடன் கல்விவளமும் இணையும்போது அறிவு வளர்ச்சி பொருளாதார வளர்ச்சி பல்கிப்பெருகும் என்பதை உணர்ந்த நம் முன்னவர் கல்விக் கூடங்களுக்கு தங்கள் பிள்ளைகளை அனுப்பத் தொடங்கினர். இதன் பயனாக 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் எமது கிராமத்தில் சிறந்த கல்விமான்கள் உருவாகினர். அவர்கள் சட்டத்துறையை வைத்தியத்துறையை ஆசிரியத் தொழிலை அலங்கரித்தனர். இவற்றுக்கெல்லாம் சிகரமாக மூதவை உறுப்பினரையும் பெற்றது இக்கிராமம்.

இத்தகைய பெயருக்கும் புகழுக்கும் காரணமாக விளங்கிய அன்றைய வாலிபர்கள் தங்கள் கிராமத்தை மேம்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தின் பயனால் 1926ம் ஆண்டு சித்திரைத் திங்கள் 5ம் நாள் இந்து வாலிபர் சங்கம் என்ற பெயரில் சங்கத்தை தோற்றுவித்தனர்.

சின்னஞ்சிறிய விதையில் முளைத்த ஆலமரமானது பென்னம் பெரிய கிளை பரப்பி விருட்சமாக வளர்ந்து நிற்பது போல் இன்று இச்சங்கமானது வளர்ந்து ஆரமரத்தில் பழுத்த பழங்கள் பவளம் போல் காட்சி தருவதற்கு ஒப்பாக பவளவிழாக்கோலம் பூண்டுள்ளது.

வரகவி கணபதிப்பிள்ளை ஐயர் அவர்களால் பிட்டியம்பதி பத்திரகாளி வீரபத்திரக் கடவுள் பேரில் பாடப்பட்ட பதிகம் திருவூஞ்சல் பாடல்களை முதல்முதலாக 1939ம் ஆண்டு அச்சிட்டு புத்தகவடிவில் அடியார்களுக்கு வழங்கிய பெருமை இந்து வாலிப சங்கத்தைச் சாரும். (இவற்றுக்கு சான்றாக ஒரு சில புத்தகங்கள் பாதுகாத்து வைக்கப் பட்டுள்ளது)

1936ம் ஆண்டு நிறுவப்பட்ட சின்னம்மாவின் ஞாபகார்த்த வித்தியாசாலை சங்கக் கூட்டங்கள், விழாக்கள் நடத்த ஏற்ற மண்டபமாக அக்காலத்தில் விளங்கியது.

காலம் வளர தேவைகளும் சேவைகளும் விரிவடைந்ததன் பயனால் கிராம முன்னேற்றத்தை தனித்து கவனிக்கவேண்டிய கடமை தோன்றியதால் 1948ம் ஆண்டு ஐப்பசித்திங்கள் 3ம் நாள் கிராம முன்னேற்றச்சங்கம் சனசமூக நிலையம் ஆகிய சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டது.

1977ம் ஆண்டில் கிராம முன்னேற்றச் சங்க மண்டபம் கட்டப்பட்டு இந்த மண்டபத்தை இந்து வாலிபர் சங்கம் சனசமூக நிலையம் பயன்படுத்தி வருகின்றன.

இயல், இசை, நாட்டியம், தையல், சமையல் போன்ற பல்கலைகளையும் மாதர்கள் பயின்று பயன் அடைய வேண்டும் என்ற நோக்குடன் 1959ம் ஆண்டு சித்திரை திங்கள் 5ம் நாள் மாதர் முன்னேற்றச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.

பலாப்பழத்தில் சுளைகள் பல இருப்பினும் சுளைக்குசுளை சுவை வேறுபடுவதில்லை. சங்கரத்தையில் சங்கங்கள் ஒன்றுக்கு மேல் இருப்பினும் அவை ஒன்றோடு ஒன்று முரண்பட்டுக்கொள்வதில்லை. சேவைகள் வேறாயினும் அவை சென்றடையும் இடம் ஒன்றாக இருப்பதால் சங்கங்களின் சங்கமும் என்றென்றும் சேவையென்னும் குங்குமம்போல் திகழ்ந்திடும்.


**சோசி ஆத்சன்**





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரம் நாட்டு விழா
## பவள விழா நிகழ்வு 1



பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட வலிகாமம் மேற்கு கமநல உத்தியோகத்தர் மரம் நாட்டுவதை காணலாம்.



மரநாட்டு விழாவில் கலந்து கொண்ட மக்களில் ஒரு பகுதியினரை சங்க உறுப்பினர்களுடன் காணலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை உரையுடன் நூல் வெளியீட்டு விழா
## பவள விழா நிகழ்வு 2



பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முத்தமிழ் குருமணி
பிரம்மஸ்ரீ சர்வேஸ்வரகுருக்கள் நூலை வெளியிட முதற்பிரதியை
சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் ஆலய குரு சிவகெங்காதரக்குருக்கள்
பெறுவதைக் காணலாம்.



பிரதம விருந்தினருடன் சங்க உறுப்பினர்களும், ஆலய குருவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பவள விழாவை முன்னிட்டு நடைபெற்ற கிரிக்கட் சுற்றுப்போட்டியில் இறுதியாட்டத்தில் விளையாடிய மானிப்பாய் பரிஸ் அணியினரையும், அராலி சரஸ்வதி அணியினரையும் காணலாம்



பவளவிழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட மரதனோட்டப் போட்டியில் பங்குபற்றிய வீரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவள விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.

பால்மா வகைகள்,

பலசரக்கு பொருட்கள்,

சோடா வகைகள்

என்பவற்றை பெற

சிறந்த ஸ்தாபனம்

கண்ணன் களஞ்சியம்

உபதபால் கந்தோரடி,
சங்கரத்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவள விழா சிறப்புற வாழ்த்துவோர்.

# முருகன் பேக்கவுஸ்

தரமானது !

சுவையானது



என்றும் மக்கள் மனதில்

நிலையானது

**முருகன் பேக்கவுஸ்** தயாரிப்புக்களான
கேக், பணிஸ், கறிபணிஸ், பிஸ்கட், பாண்
என்பவற்றை பெற நாடுங்கள்

# முருகன் பேக்கவுஸ்

துணைவிச் சந்தி, சங்கரத்தை.

---

பவள விழா சிறப்புற வாழ்த்துகிறோம்.

நெல் மற்றும் சிறுதானியங்களை

அரைக்க சிறந்த இடம்

# புதிய சாந்தி மில்

வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து வாலிபர் சங்கம் சங்கரத்தை
# பவளவிழா

எமது சங்கத்தின் பவளவிழாவைச் சிறப்பாக நடாத்தவும், பவளவிழாவையொட்டி பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தவும் எம்மால் நிதி சேகரிக்கப்பட்டது. இதற்கு தம்மாலியன்ற பங்களிப்பை விருப்போடு அளித்து எம்மை உற்சாகப்படுத்திய அனைவருக்கும் எமது நன்றிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

மற்றும் எமது தொடர்பாளராகச் செயற்பட்டு நிதியை சேகரித்து அனுப்பிய கு. பாஸ்கரன் (கனடா), க. குணச்செல்வன் (கனடா), மா. ஆரூரன் (அவுஸ்திரேலியா) மற்றும் அன்பளிப்புச் செய்த அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது பவள விழா நிதியத்திற்கு 01.07.2001ஆம் திகதி வரை அன்பளிப்புச் செய்தோரின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

**இ. குமரேஸ்**
(பொருளாளர்)

| பெயர் | தொகை |
|---|---|
| இ. நகுலேஸ்வரன் | 10,000.00 |
| செல்லத்துரை குடும்பம் | 6,550.00 |
| அ.சிவதாசன் (சுவிஸ்) | 5,000.00 |
| த. சிறீஸ்கந்தராஜா (நோர்வே) | 5,000.00 |
| இ. வெள்ளியம்பலம் | 5,000.00 |
| சி. த. வைத்திலிங்கம் | 5,000.00 |
| கு. பாஸ்கரன் (கனடா) | 250 $ |
| க. குணச்செல்வன் (கனடா) | 250 $ |
| கு. பிரபாகரன் (கனடா) | 100 $ |
| தயானி (கனடா) | 100 $ |
| இராஜேஸ்வரி (கனடா) | 100 $ |
| அ. யோகதாசன் (கனடா) | 100 $ |
| அ. தட்சணாமூர்த்தி (கனடா) | 100 $ |
| த. ஜங்கரன் (கனடா) | 100 $ |
| அ. தருமதாசன் (கனடா) | 100 $ |
| மகேஸ் - இந்திரன் (கனடா) | 100 $ |
| ஆ. திருஞானசம்பந்தன் (கனடா) | 100 $ |
| மாதங்கி றமேஸ் (கனடா) | 100 $ |
| பத்மநாதன் (கனடா) | 50 $ |

*List* a

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பெயர் | தொகை |
|---|---|
| மாணிக்கவல்லி (கனடா) | 50 $ |
| M. குகன் (கனடா) | 50 $ |
| சர்வேஸ்வரி (கனடா) | 50 $ |
| கல்யாணி (கனடா) | 20 $ |
| சி.த. சுந்தரலிங்கம் (அவுஸ்திரேலியா) | 3,500.00 |
| ந. ஜெயரஞ்சிதன் | 2,000.00 |
| தி. சிவயோகபதி | 2,000.00 |
| சோ. சிதம்பரநாதன் | 2,000.00 |
| வை. சோதிலிங்கம் (அவுஸ்திரேலியா) | 1,750.00 |
| M. புவனேந்திரன் | 1,501.00 |
| கு. இராஜலிங்கம் | 1,500.00 |
| க. சிவனடியான் | 1,500.00 |
| சு. பொன்னுத்துரை | 1,001.00 |
| சு.த. நந்தகுமார் | 1,001.00 |
| ஆ. மகேந்திரன் | 1,000.00 |
| ந. குமாரசாமி | 1,000.00 |
| சி. தியாகராசா | 1,000.00 |
| க. அன்பழகன் | 1,000.00 |
| B. கௌதமன் | 1,000.00 |
| அ. அருளானந்தம் | 1,000.00 |
| சு. மகேந்திரன் | 1,000.00 |
| வை. குணரத்தினம் | 1,000.00 |
| ச. கனகலிங்கம் | 1,000.00 |
| ஆ. சிவானந்தம் | 1,000.00 |
| அ. ஏரம்பமூர்த்தி | 1,000.00 |
| சி. சிவநேசன் | 1,000.00 |
| சி. சூரியகுமார் (பிரான்ஸ்) | 1,000.00 |
| க. சிவஞானம் | 1,000.00 |
| அ. சந்திரசோதி | 1,000.00 |
| க. சுரேஸ்குமார் | 1,000.00 |
| சி. கா. சிதம்பரநாதன் | 1,000.00 |
| சி. சொக்கலிங்கம் | 1,000.00 |

*List* b

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பெயர் | தொகை |
|---|---|
| வை. சுரேஸ் | 1,000.00 |
| வே. இந்திரசீலன் | 1,000.00 |
| கு. தவராசா | 1,000.00 |
| செ. சண்முகநாதன். (அவுஸ்திரேலியா) | 700.00 |
| சி. சபாநாதன் | 500.00 |
| S. குமாரதாசன் | 500.00 |
| ப. குகராஜன் | 500.00 |
| செ. இரகுநாதன் | 500.00 |
| அ. கார்த்தியேசு | 500.00 |
| க. கைலைநாதன் | 500.00 |
| தி. கோகிலதாசன் | 500.00 |
| கா. ச. சற்குணானந்தன் | 500.00 |
| அ. யோகநாதன் | 500.00 |
| ஆ. சிவகெங்காதரன் | 500.00 |
| சி. விஜயகுமார் | 500.00 |
| அ. சிறீஸ்கந்தராசா | 400.00 |
| இ. கிரிதரன் | 300.00 |
| K. நாகரத்தினம் | 250.00 |
| ம. பரமேஸ்வரன் | 250.00 |
| வி. கேசவன் | 250.00 |
| சி. பஞ்சரத்தினம் | 250.00 |
| S. சிவகுமார் | 250.00 |
| ஜெ. பவானி | 200.00 |
| P. நடராஜா | 200.00 |
| கு. விக்னேஸ்வரன் | 100.00 |
| க. தங்கத்துரை | 100.00 |
| கு. உருத்திரேஸ்வரன் | 100.00 |
| இ. செல்வகுமார் | 100.00 |
| ஊ. சந்திரலீலா | 50.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவள விழா சிறப்புற வாழ்த்துகிறோம்

# யாழ் மணிக்கூட்டுத் தொழிலகம்

**55, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**

**சகல விதமான மணிக்கூடுகள் கல்குலேற்றர்கள் திருத்தலும், மணிக்கூட்டு விற்பனையாளர்களும்.**


---

## பிளாஸ்ரிக் கதிரைகள், பிளாஸ்ரிக் பாய்கள்

## என்பனவற்றை வாடகைக்குப்

## பெற்றுக் கொள்ள

## நாடவேண்டிய இடம்.



# இந்து வாலிபர் சங்கம்

## சங்கரத்தை.

## (உப தபாற் கந்தோரடி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளவிழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

# துயா அச்சகம்



- கொம்பியூட்டர் ஓவ்(f)செற் பிறின்ட்
- கொம்பியூட்டர் பிறின்ட் & றோணியோ
- மற்றும் சகலவிதமான அச்சு வேலைகள்
- தமிழ், ஆங்கில தட்டச்சு


**வேலைகளுக்கு முன்னணி நிறுவனம்**

உங்கள் சகலவிதமான வேலைகள் எதுவானாலும்
பாசடாலை, தனியார் நிறுவனங்களுக்கு வேண்டிய சகல
அச்சுவேலைகளும்

சகல விதமான வைபவங்களுக்குரிய
அழைப்பிதழ்களும், நினைவேடுகளும்
நிறுவனங்களுக்குரிய பில் புத்தகம், லேபில் வகைகள்
மூவர்ண புத்தகங்கள் எதுவானாலும்

**சிறந்த முறையில் குறைந்த செலவில் குறித்த தவணையில்**

**செய்துகொள்ள எம்மை நாடுங்கள்**



# துயா அச்சகம்

## கொம்பியூட்டர் பிறின்ட் & றோணியோ

138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(நாவலர் பாடசாலை முன்பாக) T.P. No. 2881

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதயங்கனிந்த நன்றிகள்



- எமது மலர் வெளியீட்டிற்கு ஆசியுரைகள் வாழ்த்து உரைகள் வழங்கிய அனைத்துப் பெரியோர்களுக்கும்
- நல் ஆக்கங்களை எமக்கு தந்து உதவிய குருமார்கள், பெரியோர்கள், அங்கத்தவர்கள் அனைவருக்கும்
- மலர் சிறப்புற விளம்பரங்களைத் தந்து உதவிய வர்த்தக பெருமக்களுக்கும்
- பவள விழாவை சிறப்பாக கொண்டாடவும் பவள விழாவை மலர் வெளியிடுவதற்கும் நிதி உதவி செய்த எமது கிராம மக்களிற்கும், எமது கிராமத்தைச் சேர்ந்த வெளிநாட்டில் வதியும் மக்களிற்கும்
- எமது மலரை சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த தயா அச்சகத்தினருக்கும்
- மலரின் அட்டைப் படத்தை கொழும்பில் இருந்து அச்சிட்டு எமக்குத் தந்து உதவிய ஞானா பப்ளிக்கேஷன்ஸ் நிறுவனத்தினருக்கும் (ஞானா அறிவுச் சுடர்)
- இம்மலர் வெளியீட்டுக்காக பெரிதும் உழைத்த சங்க அங்கத்தவர்களிற்கும்
- எம் அழைப்பை ஏற்று விழாவில் கலந்துகொண்ட பெரியோர்கள், சிறப்புப் பிரதி பெற்றோர் அனைவருக்கும் எமது இதயங் கனிந்த நன்றிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயா அச்சகம், கொம்பியூட்டர் பிறிண்ட் & றோணியோ, 138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பவள விழா சிறப்புற வாழ்த்துகிறோம்



நெல் வகைகளை உடைத்துத் தீட்டவும்
மிளகாய் குரக்கன் போன்றவற்றை
அரைப்பதற்கும் சிறந்த தொழிலகம்

# பாலன் மில்ஸ்

மாவடிச் சந்திக்கு அருகாமை
வட்டுக்கோட்டை

கிளை
**கஜலட்சுமி மில்ஸ்**
சங்கரத்தை சந்தி,
வட்டுக்கோட்டை

வெளிநாட்டு உள்நாட்டு தொலைத்தொடர்புகள்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்

## BALAN MILLS COMMUNICATION

உள்நாட்டுத்
தொடர்பு எண் : 070 2126224
வெளிநாட்டுத்
தொடர்பு எண் : 0094 – 70 22624


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தாயிரமாம் ஆண்டில் பழைமையும் புதுமையும் மலர பவள விழாக் காணும் சங்கரத்தை இந்து வாலிபர் சங்கத்தினருக்கு இறைவன் அருள் பாலிக்க வேண்டுகின்றோம்.

*With Best Compliments From*

**SATHASIVAM VEERAVAGU & CO**

[Customs House Agents, Importers, Exporters, Clearing & Forwarding Agents]

**P.O.BOX : 642 COLOMBO**
**270, SEA STREET,**
**COLOMBO 11.**

**CABLE : SAVEECO COLOMBO**
**TEL : OFF : 433405, 324481**
**RES : 332557**

**SRI LANKA**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org